# கிராம நலம்

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 7 | பிப்ரவரி 1962 | படி 5

நமது சமுதாயத்தில் ஏறக்குறைய பாதிக்குமேல், பெண்கள் உள்ளனர். எனவே, நல்வாழ்வுப் பணிகளில் அவர்களுடைய பங்கு, மிகவும் முக்கியமாகும். சமுதாய முன்னேற்றமும், குழந்தை களின் ஆரோக்கியமும், மாதர்களின் உயர்ந்த மனப்பான்மையையும் உழைப்புத் திறனையும் பொருத்தே அமையும். குடும்பத்தைக் கட்டிக்காத்து, பேணி வளர்ப்பதில், இயற்கை யாகவே மாதர்களுக்குள்ள சக்தியும், பொறுப்பும், உலகம் அறிந்த உண்மைகள். அவர்களின் தியாக உணர்வும், சமூக சேவையும், மேலும் வளர்ந்து, குடும்பத்துக்கு மட்டுமின்றி, நாட்டுக்கும் நல்ல வகையில் பயன்பட வேண்டும். சிறப்பாக, குடும்பக் கட்டுப்பாடு திட்டம், வெற்றிகரமாக நடைபெறுவதற்கு, அவர்கள் ஒத்துழைப்பு மிகவும் தேவையாகும்.

அந்த ஒத்துழைப்பைப் பெறும் வகையில் புதிய பஞ்சாயத்து ஆட்சியின் கீழ், கிராமங்களி லுள்ள மாதர், குழந்தைகளின் நல் வாழ்வுக்கான விசேஷத் திட்டங்களை உருவாக்க வழி அமைந்துள்ளது. அதையொட்டி, புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் 65 (சி) பிரிவின்படி, பிரசவ விடுதிகள், குழந்தைகள் பராமரிப்பு ஆகியவற்றைக் கவனித்து ஆவன செய்யும் பொறுப்பு, பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இந்தப் பொறுப்பை, திறமையான வகையில் நிறைவேற்றும் பொருட்டு, தக்க நிதி வசதியும், தேவையான சிப்பந்திகளும் கொடுத்துதவ, இப்போது ஏற்பாடாகியுள்ளது.

ஒவ்வொரு பஞ்சாயத்தும் உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டம் ஒன்றை, ஏற்கனவே உருவாக்கி நிறைவேற்ற முன்வந்திருப்பது, யாவரும் அறிந்ததே. அதைப்போலவே, மாதர், குழந்தைகள் க்ஷேமத்திற்கான திட்டமொன்றை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியம். சமூக நல போர்டின் செயலாளரான மாதர் நல இலாகா இயக்குநர் (Director of Women's Welfare) இதற்கு வேண்டிய உதவியும், விரிவான ஆலோசனையும் தருவார்.

இந்தப் புதிய திட்டத்தை நிறைவேற்ற, மாதர் சங்கங்கள், கிராமங்களிலே ஆரம்பமாகி, சேவை புரிய முன் வரவேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், மாதர் சங்கங்கள், முப்பதுக்குக் குறையாமல் தொடங்கப்பட வேண்டும். சமுதாயத்தின் மிக முக்கியப் பகுதியினரான தாய்மார்கள், இந்த சேவையில் ஈடுபட்டு உழைத்தால்தான், புதிய பஞ்சாயத்து ஆட்சியின் எதிர்காலம், ஒளிபெற்றுவிளங்கும். அளவுள்ள குடும்பத்தை அமைக்கவும், குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்கவும், கிராம நல்வாழ்வுக்கான சமூகக் கல்வியைப் பரப்பவும், அதற் கேற்ற பயிற்சி முகாம்கள் நடத்தவும், கைத்தொழில் பயிற்சி பெறவும், பொது அறிவை வளர்க் கின்ற சுற்றுப்பிரயாணங்கள் ஏற்பாடு செய்யவும் தக்க வகையில் திட்டமிடவேண்டும். இந்தப் பணிகளை, மாதர் சங்கங்கள் உருவாக்கி நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—ஆசிரியர்.

---

அட்டைப் படம்:

*தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சியே சமுதாய நல்வாழ்வுக்கு அடிப்படை ஆகும். அந்த தேசிய ஒருமைப்பாட்டைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.*

(விளக்கம் கடைசி அட்டைப் பக்கத்தைப் பார்க்கவும்)

# குடும்பக் கட்டுப்பாடு

## நம்பிக்கையூட்டும் மூன்று உண்மைகள்

(திரு. ஆர். ஏ. கோபாலசாமி, ஐ. ஸி. எஸ்., தலைவர், திட்டக் குழு,
தமிழ்நாடு குடும்பக் கட்டுப்பாடு சபை]

### I. தம்பதிகளுக்கு ஆலோசனை

1. ஐந்தாண்டுகளுக்கு முன்னர், தமிழ் நாடு அரசினர் குடும்பக் கட்டுப்பாடு சபை ஒன்றை நியமித்தனர். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மக்களிடையே பரவச் செய்ய அரசினர் எத்தகைய முறைகளைக் கையாள வேண்டும் என்று ஆலோசனை கூறுவதற்காக இச்சபை நிறுவப் பட்டது. முதன் முதலில், தம்பதிகளுக்குப் பின்வரும் அறிவுரை வழங்க வேண்டுமென்று சபையார் கருதினர்.

"ஒரு பேறு காலத்திற்கும் அடுத்த பேறு காலத்திற்கும் இடையே மூன்று ஆண்டுகளாவது இடைவெளி இருக்க வேண்டும். மனைவி தேக நலம் குன்றியவராகவோ நோயாளியாகவோ இருந்தால், இந்த இடைவெளி இன்னும் அதிகமாக இருக்கவேண்டும்.

மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் பிறந்தபின், இனி குழந்தைகள் வேண்டாம் என்று தீர்மானித்து விடுங்கள்.

மேற்கொண்டும் குழந்தைகள் பிறப்பதைத் தவிர்ப்பதற்காக, தாம்பத்திய உறவையே விட்டுவிடவேண்டும் என்று நினைக்க வேண்டாம். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ளுங்கள். தாம்பத்திய உறவையும் வைத்துக் கொள்ளலாம்; அதே சமயத்தில் வேண்டாதபோது குழந்தைகள் பிறப்பதையும் தவிர்க்கலாம். உலகில் இப்பொழுது 10 கோடி தம்பதிகள் இத் திட்டத்தை மேற்கொள்ளுகின்றனர். தாம் உறுதி பூண்டால் நீங்களும் அவர்களில் ஒருவராக இருக்கலாம்."

2. இந்த அறிவுரையைப் பின்பற்றுவதாயிருந்தால், குடும்பக் கட்டுப்பாடு குறித்த பல்வேறு முறைகளை மக்களுக்கு விரிவாக விளக்க வேண்டி இருந்தது. அப்பொழுதுதான் தம்பதிகள் ஒவ்வொருவரும் தங்களுக்கு உகந்த முறையைக் கையாள முடியும். ஆகவே, இச் சபையினர் குடும்பக் கட்டுப்பாடு கைப்புத்தகம் ஒன்றை வெளியிட்டனர். இது 1956-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தமிழ் நாடு அரசினர் வெளியீடாக வெளி வந்தது. இந்தப் புத்தகத்தின் அடிப்படையில்தான் குடும்பக் கட்டுப்பாடு ஊழியர்கள் பயிற்சி பெறுகின்றனர். அரசாங்க மருத்துவ மனைகள், பேறுகால சிசுநல நிலையங்கள், குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் ஆகியவற்றில் இப்புத்தகத்தின் அடிப்படையிலேயே அறிவுரை வழங்குகிறார்கள்.

3. புத்தகத்தைப் படித்துப் புரிந்துகொள்ளக்கூடிய திறன் வாய்ந்தவர்களுக்கு மேற்கொண்டும் ஆலோசனை கூறத் தேவையில்லை. இப்புத்தகத்திலேயே போதிய அறிவுரைகள் உள்ளன. எனவே தான், ஆரம்ப நிலையில் அரசினர் இப்புத்தகத்தைத் தங்கள் ஊழியர்கள் அனைவருக்கும், இம் மாநிலத்திலுள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் இலவசமாகவே வழங்கினர். இப்புத்தகம் மக்களை வெகுவாகக் கவர்ந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 4,45,638 தமிழ் பிரதிகளும், 97,347 ஆங்கிலப் பிரதிகளும் வழங்கப்பட்டுள்ளன. இப்புத்தகத்திற்கு மேலும் தேவையிருப்பதால், இதற்கு நான்காவது பதிப்பு வெளியிட இருக்கிறோம்.

இந்தப் புள்ளி விவரங்கள் எதைக் குறிக்கின்றன? குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக அரசினரின் அறிவுரையைத் தம்பதிகள் கொள்கையளவிலாவது ஏற்கின்றனர். இது குறித்துத் தகவல் பெற எல்லோரும் விழைகின்றனர் என்பதை அல்லவா!

### II. அறுவை முறை

4. குடும்பக் கட்டுப்பாடு கைப்புத்தகம் ஒரு சிறப்பு வெளியீடு. ஏனெனில், இந்தப் பொருள் குறித்து ஓர் அரசாங்கம் புத்தகம் வெளியிடுவது இதுவே முதல் தடவையாகும். இன்னொரு வகையிலும் இது சிறப்பு வெளியீடாகும். "இயற்கை" முறைகளைப் பற்றியும், "அறுவை" முறைகளைப்பற்றியும் தெளிவாகவும் உறுதியாகவும் இதில் விளக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தும் முறையும் இதில் விளக்கப்பெற்றுள்ளது. ஆனால், மேல் நாடுகளிலோ குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களில் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தும் முறையை மட்டுமே விளக்குவார்கள். ஆகவே, இந்த அம்சத்திலும் இது சிறப்பு வெளியீடாகும்.

5. இப்புத்தகத்தில் இரு அறுவை முறைகள் பற்றிய ஆலோசனையைக் காணலாம். ஒன்று ஆண் உறுப்புத்

தையல் முறை ; மற்றொன்று பெண் உறுப்புத் தையல் முறை. இந்த இரு முறைகளினாலும் பிரசினையை ஒரு வழியாகத் தீர்க்க முடிகிறது. அறுவை முறையினால் ஏற்படும் அசௌகரியம் மிகவும் சிறியதாகும். மேலும், ஒருவர் வாழ்க்கையில் ஒரு முறைதான் இந்த அறுவை சிகிச்சையைச் செய்து கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு தம்பதிகள் எந்த விதமான முன்னேற்பாடுகளும் இல்லாமல், விலையுயர்ந்த கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தாமல், மன எரிச்சல் ஊட்டக்கூடிய முறைகளை மேற்கொள்ளாமல் தாம்பத்திய உறவை அனுபவிக்கலாம். உங்கள் மனைவி நிச்சயமாக மீண்டும் கருத்தரிக்க மாட்டார்.

6. திருமணமான முதல் 10 ஆண்டுகளில் ஒரு குழந்தைக்கும் மற்றொரு குழந்தைக்கும் இடையே போதிய இடைவெளி இருக்கவேண்டும் என்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இக்கால அளவில் கருத் தரிப்பதையே நிறுத்திவிட வேண்டும் என்பது நோக்கமல்ல. ஆகவே, இக்கால அளவில் அறுவை சிகிச்சைக்குத் தேவையே இல்லை. ஆனால், மேற்கொண்டும் குழந்தைகள் வேண்டாம் என்று தீர்மானிக்கும் தம்பதிகளுக்கு இம்முறையே மற்ற முறைகளை விடச் சிறந்ததாகும். ஏனெனில், இந்நாட்டிலுள்ள பெரும்பாலோர் கருத்தடைக் கருவிகளை வாங்குவதற்குச் சக்தி அற்றவர்கள். மேலும், அக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய தனிமையோ, சௌகரியங்களோ அவர்களுக்குத் கிடையாது. ஆகவே, இக் கோணத்திலிருந்து பார்த்தால், அறுவை முறை மற்ற முறைகளைவிடச் சிறந்தது மட்டுமல்ல ; இது ஒன்றுதான் சாத்தியமான முறையுமாகும்.

7. ஐந்தாண்டுகளுக்கு முன்னர், இத் திட்டம் சம்பந்தமான பல்வேறு முறைகளில் எது சிறந்தது, எது நன்மை பயக்கக் கூடியது என்பதை அனுமானிக்கும் நிலையில் தான் இருந்தோம். மக்கள் எதை விரும்புகின்றனர் என்பதை நடைமுறை அனுபவத்திலிருந்து தெரிந்துகொள்வது அவசியமாயிருந்தது. குறிப்பிட்ட சில பிரதேசங்களில், இத் திட்டத்தை நல்ல முறையில் அமுலுக்குக் கொண்டு வந்து அதிலிருந்து எந்த அடிப்படையில் மாநிலம் முழுவதற்குமான திட்டத்தை வகுக்க வேண்டும் என்று தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது. எனவே, சென்ற ஐந்தாண்டுகளில் தமிழ் நாடு அரசினர் மேற்கொண்ட திட்டம் முன்னோடித் திட்டம் என்றே சொல்ல வேண்டும்.

8. இதுபற்றி நாம் தெரிந்து கொண்டது இதுதான். கருத்தடைக் கருவிகளையே நம்பினால், மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேல் இத் திட்டம் பரவுவது சாத்தியமில்லை ; அதுவும் மெதுவாக இன்னும் பத்து ஆண்டுகளில் அல்லது அதற்கு மேல் ஆகும். இயற்கை முறைகளை ஒரு சிலரே ஏற்றுக் கொள்வார்கள். கருத்தடைக் கருவிகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இயற்கை முறைகளையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பெரும்பாலோர் அறுவை முறைகளையே விரும்புகிறார்கள். இந்த உண்மைகள் நமக்குக் கிடைத்துள்ளன.

9. அறுவை முறையையே மக்கள் விரும்புகிறார்கள் என்பதற்கு அடியிற்கண்ட புள்ளி விவரங்கள் சான்றாகும். அரசாங்க மருத்துவ மனைகளில் அல்லது அரசாங்க அங்கீகாரம் பெற்ற மருத்துவ மனைகளில் அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களின் விவரம் வருமாறு : 1956—695 ; 1957—1,804 ; 1958—2,850 ; 1959—3,343 ; 1960-7,856. 1960-லிருந்து இது பன்மடங்கு அதிகரித்துள்ளது. 1961ல் முதல் பத்து மாதங்களில் 19,388 பேர் அறுவை சிகிச்சை செய்து கொண்டனர். முந்திய ஐந்தாண்டுகளிலும் சேர்ந்த மொத்தத்தைவிட, இது எவ்வளவோ அதிகம்.

10. இந்த முன்னோடித் திட்டம் முக்கியமாய்ச் சென்னை நகரில் நிறைவேற்றப்பட்டது. இங்கே அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களின் விவரம் வருமாறு :— 1956—435 ; 1957–660; 1958–1,204 ; 1959–1,291 ; 1960–3.339. 1961-ம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் 9,481 பேர். முந்திய ஐந்து ஆண்டுகளிலும் சேர்ந்த மொத்தத்தைவிட இது எவ்வளவோ அதிகம். சென்னை நகரில் இந்த ஆண்டில் அறுவை சிகிச்சை செய்துகொள்பவர்களின் எண்ணிக்கையைப் போலவே ஆண்டுதோறும் தவறாமல் செய்துகொள்வார்களேயானால், நகரத்தில் பிறப்பு விகிதம் ஜப்பானில் குறைந்ததுபோல் ஆண்டுக்கு ஆண்டு கட்டாயம் குறைந்து விடும். கருச் சிதைவு செய்துகொள்ளும்படி ஏராளமான தாய்மார்களைத் தூண்டியதால் ஜப்பானில் பத்து ஆண்டுக் காலத்தில் மக்கள் தொகையைப் பாதியளவுக்குக் குறைக்க முடிந்தது. ஆனால், அறுவை சிகிச்சை செய்து சென்னை நகரில் இதைப்போலவே பத்தாண்டுக் காலத்தில் (இன்னும் குறைந்த காலத்தில்கூட) நகரப் பிறப்பு வீதத்தைப் பாதியாகக் குறைக்க முடியும்.

11. மேற்சொன்ன புள்ளி விவரங்களிலிருந்து ஆண் உறுப்புத் தையல் முறையை மக்கள் பெரிதும் விரும்புகின்றனர் என்பது தெரிய வருகிறது. 1956-ம் ஆண்டில் மிகச் சிலரே இந்த அறுவை சிகிச்சையை மேற்கொண்டனர். 1957-ம் ஆண்டில் அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஆண்கள், அறுவை சிகிச்சை செய்துகொண்ட பெண்களில் ஆறில் ஒரு பங்கிற்கும் குறைவாக இருந்தனர். ஆனால் 1961-ம் ஆண்டில் நிலைமை மாறிவிட்டது; இதை கீழே கொடுத்துள்ள புள்ளிவிவரங்கள் காட்டும்:—

| | ஆண் உறுப்புத் தையல் முறை | பெண் உறுப்புத் தையல் முறை |
|---|---|---|
| 1956 .. .. .. | 25 | 670 |
| 1957 .. .. .. | 231 | 1,573 |
| 1958 .. .. .. | 986 | 1,864 |
| 1959 .. .. .. | 1,330 | 2,913 |
| 1960 .. .. .. | 5,184 | 2,672 |
| 1961 (முதல் பத்து மாதங்கள்). | 17,048 | 2,340 |

12. மேற்சொன்ன இரண்டு முறைகளும் அபாயம் இல்லாதவை ; நிச்சயம் பலனளிக்கக் கூடியவை. ஆனால், பல காரணங்களினால் ஆண் உறுப்புத் தையல் முறையே சிறந்தது என்று கொள்ள வேண்டியுள்ளது. ஏனெ

னில், இந்த அறுவை சிகிச்சையை எப்பொழுது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். ஆனால் பெண் உறுப்புத் தையல் முறையையோ பேறு காலத்திற்கு அடுத்துப் பின் உடனடியாகச் செய்து கொள்ள வேண்டும். முன்னர் சொன்ன சிகிச்சைக்கு மருத்துவ மனையில் தங்க வேண்டியதில்லை. அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய பகுதியில் உணர்ச்சியற்றுப் போகும்படி ஊசி குத்தப்படுகிறது. அறுவை சிகிச்சை செய்து கொள்பவர் சிகிச்சை செய்யும் கொஞ்ச நேரத்திலும் முழு உணர்வுடன் இருக்கிறார். சிகிச்சை முடிந்தவுடன் சிகிச்சை செய்துகொள்பவர் மருத்துவ மனையை விட்டுச் சென்றுவிடலாம். ஆனால் பெண் உறுப்புத் தையல் முறையைச் செய்து கொள்பவர் மருத்துவ மனையில் சில நாட்கள் தங்க வேண்டும்.

13. அறுவை சிகிச்சையைப் பற்றி கிராமங்களிலுள்ள மக்களும் வெகுவாய்த் தெரிந்து கொண்டுள்ளனர் என்பதற்கு அடியிற்கண்ட புள்ளி விவரங்கள் சான்றாகும்.

| மாவட்டம் | ஆண் உறுப்புத் தையல் முறை | பெண் உறுப்புத் தையல் முறை |
|---|---|---|
| வட ஆர்க்காடு .. .. | 1,072 | 81 |
| தென் ஆர்க்காடு .. .. | 248 | 63 |
| செங்கற்பட்டு .. .. | 76 | 45 |
| நீலகிரி .. .. .. | 253 | 57 |
| கோயம்புத்தூர் .. .. | 739 | 343 |
| மதுரை .. .. .. | 543 | 116 |
| ராமநாதபுரம் .. .. | 540 | 71 |
| சேலம் .. .. .. | 776 | 107 |
| திருச்சிராப்பள்ளி .. .. | 1,369 | 93 |
| தஞ்சாவூர் .. .. | 1,635 | 147 |
| திருநெல்வேலி .. .. | 1,062 | 128 |
| கன்னியாகுமரி .. .. | 137 | 74 |
| (வெளி மாவட்டங்களில் தனியார் மருத்துவ மனைகளில்). | 7 | 165 |
| மொத்தம் (மாவட்டங்களில்) .. | 8,417 | 1,490 |
| சென்னை மாநகரம் .. | 8,631 | 850 |
| மொத்தம் (தமிழ் நாட்டில்) .. | 17,048 | 2,340 |

## III. பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் செய்யவேண்டியது என்ன ?

14. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாடு சட்டசபை, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் அமைப்பு குறித்து புதிய சட்டம் ஒன்றை இயற்றியது. இதன் அடிப்படையில் 12,000 பஞ்சாயத்துக்களும், 373 பஞ்சாயத்து யூனியன்களும் அமைக்கப்பட்டன. இம் மாநிலத்தின் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்களும் தேசீய வளர்ச்சித் திட்டமும், இப் பஞ்சாயத்துக்களினாலும் பஞ்சாயத்து யூனியன்களினாலும் நிறைவேற்றப் பெற வேண்டும். குடும்பக் கட்டுப்பாடு குறித்துத் தம்பதிகளுக்கு அறிவுரை கூறுவதும் பஞ்சாயத்து யூனியன்களின் கடமைகளில் ஒனருகுமென இச் சட்டம் கூறுகிறது.

15. புதிய சட்டத்தின் இன்னொரு ஷரத்தின்படி, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு பெண் உறுப்பினராவது இருக்க வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் மூன்று பெண் உறுப்பினர்களாவது இருக்க வேண்டும். கிராமங்களிலுள்ள மகளிரிடையே குடும்பக் கட்டுப்பாடு குறித்து விழிப்பு ஏற்படுத்துவதே, இதன் நோக்கமாகும்.

16. கடந்த 18 மாதங்களில், புதிய பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள புதிய பொறுப்பை முற்றும் உணருவதற்காக ஆங்காங்குப் பயிற்சி முகாம்கள் நடத்தி, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதில் அவைகளின் பங்கு என்ன ? முக்கியமாக, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பிரசாரம் செய்வதில் அவைகளின் கடமைகள் யாவை என்பதைக் குறித்து விளக்கம் தந்தோம்.

17. இத் திட்டத்தை அடுத்த சில ஆண்டுகளிலும் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும். இதற்காக இம் மாநிலத்திலுள்ள பஞ்சாயத்துத் தலைவர்களும், பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினர்களும் (பெண்கள் உட்பட) கலந்து கொண்ட ஒரு மகாநாடு சென்னை நகரில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. இந்த மகாநாட்டில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் ஒன்று, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் குறித்து செய்ய வேண்டியவைபற்றி தெளிவாக விளக்குகின்றது.

18. மாநிலப் பஞ்சாயத்து மகாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி பஞ்சாயத்துக்களின் கடமை வருமாறு:—

(i) கிராமங்களில் பிறப்பு, இறப்பு பற்றி மாதந்தோறும் கணக்கெடுத்தல். இதன் மூலம் கிராமங்களில் மக்கட் தொகை அதிகரிப்பு குறித்து சரியான தகவலைச் சேகரித்தல் :

(ii) குடும்பக் கட்டுப்பாடு முறைகள் குறித்துத் தெரிந்து கொள்ளும்படி கிராமத்திலுள்ள எல்லாக் குடும்பத்தினரையும் தூண்டுதல். முக்கியமாக, ஒவ்வொரு தாயும் குழந்தை பிறந்த மூன்று மாதங்களுக்குள் குடும்பக் கட்டுப்பாடு குறித்துத் தெரிந்து கொள்ள நடவடிக்கை எடுத்துக் கொள்ளுதல் ;

(iii) குடும்பத்தைப் பெருக்கும் வழக்கத்தை ஒழித்து அளவான குடும்பத்தைப் போற்றுவதன்மூலம் ஒவ்வொரு குடும்பமும் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உதவும்படித் தூண்டுதல் ;

(iv) அறுவை சிகிச்சை சிறந்தது, அபாயமில்லாதது என்பதைப் பெற்றோர்கள் நன்கு உணருமாறு செய்தல்,

(24-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாட்டில் கைத்தறித் தொழிலின் வளர்ச்சி

[தமிழ் நாட்டிற்குப் பெருமை அளிக்கும் தொழில்களில் கைத்தறித் தொழிலும் ஒன்றாகும். தமிழ் நாட்டுக் கைத்தறித் துணி உலகப் புகழ் படைத்ததாகும். மிக முக்கியமான தொழில்களில் ஒன்றான கைத்தறித் தொழில் தமிழ் நாட்டிலில் அடைந்துள்ள வளர்ச்சி பற்றியும், தமிழ்நாடு அரசாங்கம் அந்தத் தொழிலை மேம்படுத்த எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் பற்றியும் குறிப்பிடுகிறது இக் கட்டுரை.— ஆசிரியர்.]

தமிழ்நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக, முக்கியத் தொழில் கைத்தறித் தொழில் தான். சுமார் இருபது லட்சம் மக்கள் கைத்தறித் தொழிலையே நம்பி வாழ்கின்றனர். ஆகவே, மாநில அரசாங்கம் கைத்தறித் தொழில் செம்மையான முறையில் வளர்ந்தோங்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில், மாநிலத் திட்டத்தின் கைத்தறித் தொழில்வளர்ச்சிக்காக மொத்தம் ரூ. 413.70 இலட்சத்திற்கு திட்டமிடப்பட்டது. ஆனால் உண்மையாக ஏற்பட்ட செலவானது ரூ. 658.85 இலட்சமாகும். மூன்றாவது திட்டத்தில் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காக பெருவாரியான முறையில் 800 இலட்சம் ரூபாய் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 800 இலட்சம் ரூபாயில், 160 இலட்சம் ரூபாய் முதல் ஆண்டிலும் (1961-62) 173.46 இலட்சம் ரூபாய் இரண்டாவது ஆண்டிலும் (1962-63) செலவிடப்படும்.

மூன்றாவது திட்டத்தில் கைத்தொழில் வளர்ச்சிக்காக வேண்டி மேற்கொண்டுள்ள பெரிய வேலைத் திட்டங்களில் சில, கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

**உற்பத்தி :**

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செய்யப்படும் கைத்தறித் துணி உற்பத்தி வேலைக்கு ரிசர்வ் பாங்கி (Reserve Bank) யிடமிருந்து கிடைக்கும் கடன் தொகைகளிலிருந்து, நிதி அளிக்கப்படுகிறது. இதற்காக, 1961-62ல் ரூ. 92.94 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. ஒரு தறிக்கு ரூ. 300 என்றுள்ள நடைமுறை மூலதனத்தை ரூ. 500 ஆக உயர்த்துவதென இப்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளது. நடைமுறை மூலதனக் கடன்கள் (Working captial loans) சங்கங்களுக்கு கூட்டுறவு பாங்குகளால் தாராளமாகக் கொடுக்கப்படுகின்றன. நெசவாளர் சங்கங்களுக்கு, பண உதவி அளிக்கின்ற விஷயங்களில், பாங்குகளுக்கு ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால், அந்த நஷ்டத் தொகையில் 90 சதவீத அளவுத் தொகையினை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று, அரசாங்கம் உத்தரவாதம் அளித்துள்ளது. நெசவாளர் சங்கங்கள் மூலதனக் கடன்களை, சாதாரணமாக உள்ள 5¼ சதவீத வட்டிக்குப் பெறுவது என்ற அளவில் இல்லாமல், 3 சதவீத வட்டி என்ற குறைந்த அளவில் கிடைக்கும் வகையில், பாங்குகளுக்குப் பண உதவி அளிக்கப்படுகின்றது.

**பண்டகசாலை வசதிகள் :**

உற்பத்திக்கும், பண்டகசாலை வசதிகளுக்காகவும் வேண்டி, ரிசர்வ் பாங்கும், மாநில அரசும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்குத் தாராளமாகக் கடன்கள் கொடுக்கின்றன. ஆயுதபூஜை, தீபாவளி, பொங்கல் முதலான பண்டிகைக் காலங்களில் சிறு சிறு சங்கங்களிலிருந்து துணிகளை மாநில சங்கம் வாங்கி சேகரித்து வைத்துக்கொள்வதற்காக வேண்டி, மாநில அரசு மொத்தம் 70 இலட்சம் ரூபாய் என்ற அளவில் சமீபத்தில் மாநில சங்கத்திற்கு கடன் உதவி அளித்துள்ளது.

**தொழில் நுட்ப முறைகளில் முன்னேற்றம் :**

கைத்தறி நெசவுத் தொழில் வேலை முறையை சீர்திருத்தி வளர்ச்சி காணும் முறையில், பல வேலைத் திட்டங்கள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. மூன்றாவது திட்ட காலத்தில், 100-க்கும் மேற்பட்ட அளவில் சிறிய அளவில் சாயப்பட்டறைகளை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தரமான உயர்ந்த உபகரணங்கள் வாங்குவதற்காக வேண்டி (purchase of improved appliances) கடன்களும் மானியத் தொகைகளும் (subsides) அளிக்கப் பெறுகின்றன. மாநிலத்தில் நுணுக வகைகளில் நெய்யக்கூடிய நான்கு உற்பத்தி சாலைகளை (patteru weaving factories) இன்னும் விரிவுபடுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. புத்தம் புதிய நுணுக்கங்களையும் நவீன ரகங்களையும் உற்பத்தி செய்வதில், பெருவாரியான நெசவாளர்க்குப் பயிற்சி அளிக்கவேண்டி, இவை விரிவு படுத்தப்படுகின்றன.

**கூட்டுறவு நூற்பு ஆலைகள் :**

தரமான நூல் நியாயமான விலையில் கைத்தறித் தொழிலாளர்களுக்கு தவறாமல் கிடைப்பதற்காக, இந்த மாநிலத்தில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஏற்படுத்தப்படுகின்றன. முன்பே அமைக்கப்பட்டுள்ள் மூன்று ஆலைகள் தவிர, மூன்றாவது திட்டத்தில், மேலும் நான்கு ஆலைகளை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**செயற்கைப் பட்டு நூல்**

செயற்கைப் பட்டு நூல் விநியோகம் நேர்மையான முறையில் நடைபெற வேண்டி, இந்தப் பொறுப்பினை, 1961-ம் வருஷ ஜூலை மீ 1-ந் தேதியிலிருந்து, பம்பாயிலுள்ள ஜவுளிக்கமிஷனரிடமிருந்து, தமிழ்நாடு கைத்தறி இயக்குநரே ஏற்றுக்கொண்டுள்ளார்.

தள்ளுபடி (Rebate)

கைத்தறித் துணி விற்பனையில் ரூபாயில் 5 ந. பை. வீதம் தள்ளுபடி தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. இன்றைய நிலையில், மூன்றாவது திட்ட காலத்தில் இந்தத் தள்ளுபடித் தொகையினால் ஏற்படும் மொத்தச் செலவு சுமார் 3·75 கோடி ரூபாயாக இருக்கும்.

மூன்றாவது திட்டக் காலத்தில், நெசவாளர்களுக்கு ரூபாய் 100 இலட்சம் செலவில் 2,500 வீடுகள் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது. ஒரு வீட்டுக்கு ரூ. 5,000 என்ற அளவில் பண உதவி அளிக்கப்படுகிறது. வீடு கட்டுகின்ற செலவில், 75 சதவீதம் கடனாகவும், மீதித் தொகை மானியமாகவும் அளிக்கப்படுகிறது.

கடன் தொல்லையிலிருந்து நிவாரணம் அளிக்கத் திட்டம்:

கைத்தறி நெசவாளர்களுக்கு மாஸ்டர் வீவர்களிடமிருந்து (Master weavers) கடன நிவாரணம் அளிக்கும் உத்தேசத்துடன், மாநில அரசாங்கம் சமீபத்தில் ஒரு திட்டத்தை அங்கீகரித்துள்ளது. அதன்படி, ஒரு நெசவாளருக்கு ரூ. 150/-க்கு மேற்படாத அளவில் கடன் உதவி அளிக்கப்படும்.

கைத்தறியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு பிராவிடண்ட் பண்டு நிதி (அதாவது சேம நிதி) (Provident Fund)

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உண்மையான உறுப்பினர்க்கு பிராவிடண்ட் பண்டு நிதி வசதி அளிக்கும் ஓர் கவர்ச்சிகரமான திட்டம், மாநில அரசாங்கத்தின் ஆலோசனையில் இப்பொழுது இருந்து வருகிறது. கூட்டுறவுச் சங்கத்தில் இரண்டாண்டுகளுக் குறையாமல் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு நெசவாளரும், அவருடைய கூலித் தொகையில் ரூபாயில் 6 ந. பை. வை அந்த நிதிக்கு அளிக்க வேண்டும். அந்த பிராவிடண்ட் பண்டு நிதிக்கு கூட்டுறவுச்சங்கமும், அரசாங்கமும் தங்கள் பங்கினை அளிக்கும் இந்த திட்டம் பற்றிய நடைமுறை விவரங்கள் இப்போது ஆராயப்பட்டு வருகின்றன.

கைத்தறி மூலதன வாணிக ஸ்தாபனம் (Handloom Finance and Trading corporation)

முதல் இரண்டு திட்டக் காலங்களிலும், அரசாங்க உதவி பெரும்பாலும் கைத்தறித் தொழிலின் கூட்டுறவு அமைப்புக்களுக்கே அளிக்கப்பட்டு வந்தன. கைத்தறி மூலதன வாணிக ஸ்தாபனம் (Trading corporation) என்ற பெயரால், நிறுவனம் (Private Limited Company) ஒன்றை அமைத்து, கூட்டுறவுச் சங்கத்தில் சேராத, கைத்தறி நெசவாளர்கள் செய்கின்ற கைத்தறித் துணி உற்பத்திக்கும் விற்பனை வசதிக்கும் நிதி உதவி அளிக்கச் செய்வதென்று மாநில அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்கான பங்கீட்டு மூலதனம் (Share Capital) விரைவில் எழுப்பப்படும். அதில் மாநில அரசாங்கம் தன்னுடைய பங்கீட்டு மூலதனமாக 10 இலட்ச ரூபாய் முதலீடு செய்ய உத்தேசித்துள்ளது.

வண்ணம் மாறும் சென்னைத் துணி (Bleeding Madras)

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பிளீடிங் மதராஸ் என்ற பெயரால் குறிக்கப்படும் ஒரு ரகத் துணிகளுக்கு ஏற்பட்டிருந்த பெரிய அளவு கிராக்கியில திடீரென்று நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. இதனால் தமிழ்நாட்டின் கைத்தறித் தொழிலில் திடீரென்று ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. தேங்கியிருந்த "மொத்த பிளீடிங் மதராஸ்" துணிகளையும், மாநில அரசாங்கம் கேட்டுக்கொண்டதற் கிணங்க, நெசவாளர்களிடமிருந்து கைத்தறித் துணி ஏற்றுமதி நிறுவனம் (Handloom Export Organisation) நியாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டது. அதன்படி அந்த நிறுவனம் 4 இலட்சம் கஜங்களுக்கு மேற்பட்ட துணிகளை வாங்கி, அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், உள்ளூர் மார்க்கெட்டில் விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்தது.

---

# முக்கிய அறிவிப்பு

"Additional Development Commissioner" என்ற பொறுப்பு வகிப்பவருக்கு, அரசாங்கம் அளித்துள்ள கடமைகளையும், அவர் ஆற்ற வேண்டிய அலுவல்களையும் நோக்கும்பொழுது, அவரை, "கிராம அபிவிருத்திக் கமிஷனர்" என்று அழைப்பதே, பொருத்தமுடையதாகும். இது பற்றி, முன்பே 1960 டிசம்பர் மாத 'கிராம நல' இதழில் அறிவித்திருந்தோம். அதைத் தொடர்ந்து எல்லா இதழ்களிலும், அவ்வாறே வழங்கி வருவதை, வாசகர்கள் கவனித்திருப்பர். ஆனால், பஞ்சாயத்து நிர்வாகம் சம்பந்தப்பட்டவர் பலர், இதைச் சரிவர கவனத்தில் கொள்ளவில்லை என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. அரசாங்கத்திற்கு வரும் கடிதங்களிலும், அச்சாகிவரும் அழைப்பிதழ்களிலும், பஞ்சாயத்து பற்றிய வெளியீடுகள் முதலியவற்றிலும் இன்னும் "கூட்டு அபிவிருத்திக் கமிஷனர்," "உதவி அபிவிருத்திக் கமிஷனர்" "இணை அபிவிருத்திக் கமிஷனர்," "உபரி அபிவிருத்திக் கமிஷனர்" என்று தவறான முறையில் குறிப்பிடப்படுகின்றன. ஒருசில பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் போன்ற நிர்வாக அலுவலர்களும், புதிய பஞ்சாயத்து ஆட்சியில் பொறுப்பு வகிக்கும் பொதுஜனப் பிரதிநிதிகளும், 'கிராம நல'த்தைச் சரிவரப் படிப்பதில்லை என்பதை இதிலிருந்து எளிதில் அறியமுடிகிறது. "Additional Development Commissioner" என்ற பதத்துக்கு, தமிழில் "கிராமஅபிவிருத்திக் கமிஷனர்" என்றே குறிப்பிட்டு எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். வேறு விதமாக உபயோகிப்பது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்,
"கிராம நலம்"

# கிராமப் பொருளாதார வளத்தைப் பெருக்கப் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்

[திரு சி. ரா. இலக்குமிகாந்தன்]

இப்பொழுதெல்லாம் எங்கும் "பஞ்சாயத்து" என்பது பற்றியே பேசப்பட்டு வருகிறது; எழுதப்பட்டு வருகிறது. இந்தியாவில் பல மாநிலங்களில் பஞ்சாயத்துக்கள் பணி புரியத்தொடங்கி விட்டன. பாரெல்லாம் புகழ் மணக்கும் நமது சென்னை மாநிலத்திலும் இது படிப்படியாக செயல்பட்டு வருகின்றது. இது ஒரு அமைதிப்புரட்சி. இதன் மூலம் காந்தியடிகளின் கனவு நனவாகி வருகின்றது. ஆனால் நாம் "பஞ்சாயத்து" "பஞ்சாயத்து" எனறு புகழ் பாடிக்கொண்டும், பேசிக்கொண்டும், எழுதிக் கொண்டும் இருநதுவிட்டால் மட்டும் போதாது. புதிய பொறுப்பேறகத் தொடங்கியுள்ள பஞ்சாயத்து, கிராமங்களில் பலதுறைகளில் கடுமையாக பணியாறற வேண்டியுளளது. கிராமததின் பொருளாதார வளத்தைப் பெருக்குவதில் ஈடுபடுவதுதான் யாவறறிலும் முக்கியமான—உடனடியாக செயலாற்ற வேணடிய ஒன்று. இன்று கிராமங்களில் பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்து விட்டால் ஒன்றன் பின் ஒன்றாக பல பிரச்சினைகள் ஒழிந்து விடும். கிராமப் பொருளாதார வளர்ச்சிக்காக பஞ்சாயத்து, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பல உள்ளன.

கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கக்கூடியவை—இருப்பவை மூன்று. (1) **விவசாயம்** (2) **கால்நடைச் செல்வம்.** (3) **சிறு தொழில் அல்லது குடிசைக் கைத் தொழில்கள்.** பெரிய தொழில்களை நம்பி கிராமங்கள் வாழ முடியாது.. ஆதலால் மேற்கண்டவைகளை சிறந்த முறையில் பயன்படுத்துவதைப் பொறுத்தே ஒரு கிராமத்தின் பொருளாதார வளர்ச்சி அமையும்.

**விவசாயம்** கிராமத்தின் உயிர்நாடி. ஆனால் அது எந்த நிலையில் இருக்கிறது? விவசாயத் துறையில் நாம் இன்னும் பழங்காலத்தில் இருக்கிறோம். இன்று புதிய முறைகள், புதிய கருவிகள், சிறந்த உரங்கள் ஆகியவைகள் வெளிப்பட்டுள்ளன. பழைய முறையைக் கைப்பிடிப்பதால் நமது உற்பத்தி பாதிக்கப்படுகின்றது. புதிய முறைகளைக் கடைப்பிடிப்பதால் இப்பொழுதுள்ளதைப் போன்று நிச்சயம் உற்பத்தியை இரட்டிப்பாக்கலாம். ஆனால் கிராமங்களுக்கு இதில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. புதிய முறைகளைப்பற்றிய அச்சம் சிலருக்கு—பொருள் வசதியில்லாததால் கடைப்பிடிக்க முடிவதில்லை சிலரால்—மற்றும் சிலர் தெரிந்தும் சோம்பல் காரணமாக ஈடுபடுவதில்லை—பலருக்கு இம்முறை தெரிவதே இல்லை. உதாரணமாக ஒன்று: நாங்கள் பணி புரியும் கிராமங்களுள் ஒன்றில் "ந" என்பவர் ஜப்பானிய முறை சாகுபடியைப் பின்பற்றுகிறார். அவருக்கு அடுத்த நிலத்தில் "கோ" என்பவர் பழைய முறையில் சாகுபடி செய்கிறார். இருவருடைய விளைவைப்பற்றி கேட்டோம். "கோ" என்பவரைவிட "ந" என்பவருடைய நிலத்தில் விளச்சல் ஒன்றரை மடங்கிற்குமேல் இருப்பது தெரிய வந்தது. இதைப்பற்றிக் கேட்டபொழுது "கோ" என்பவர் கூறினார்: "எனக்கு அந்த முறை தெரியவில்லை. மேலும் அதில் ஈடுபட பொருள் வசதி இல்லை. ஆலோசனையும் கிடைப்பதில்லை. நான் படிக்காதவன் என்ன செய்ய முடியும்?" ஆதலால் புதிய முறைகள், புதிய கருவிகள், உரங்கள் பற்றி மக்களுக்கு பஞ்சாயத்தாரே எடுத்துக் கூற வேண்டும். பொருள் வசதியில்லாதோருக்கு கடனுதவி செய்து அவர்களை இதில்ஈடுபடவைக்க வேண்டும். பஞ்சாயத்துக்களே உரங்கள், சிறந்த விதைகள், கருவிகள் போன்றவைகளை வழஙகுவதில் ஈடுபட வேண்டும்.

விவசாயத்தில் குறிப்பிடப்பட வேண்டிய மற்றொன்று **கூட்டுப்பண்ணை.** கூட்டுப்பண்ணையினால் நன்மையுண்டு என்பதை பொருளாதார நிபுணர்களும் அனுபவம் வாய்ந்தவர்களும் கூறுகின்றார்கள். அயல் நாடுகளிலும் இது வெற்றிபெற்றுள்ளது. சிறந்த அனுபவமும், அறிவும், ஆதரவும் பெற்றவர்களால்தான் பஞ்சாயத்து நிர்வாகத்தில் பொறுப்பேற்க முடியும். ஆதலால் அவர்கள் வாயிலாக கூட்டுப்பண்ணை பற்றிய உண்மைகள் வெளிப்படுமானால் மக்களுக்கு அதில் நம்பிக்கை ஏற்படும். ஆதலால், பஞ்சாயத்தினர் நிலம் பெற்ற மக்களை ஒன்று திரட்டி கூட்டுப்பண்ணையில் ஈடுபடச்செய்தால் அதனால் நிகழும் நமது பொருளாதார நிலையின் உயர்வைப் பற்றி நாம் கூறத் தேவையில்லை.

கிராமப் புறங்களில் எவ்வளவோ பேர் தங்கள் வீட்டு பின்புறத்தைப் (பின்புறத்தில் உள்ள வீட்டைச்சார்ந்த நிலப்பகுதியை) பயன்படுத்துவதில்லை. அது சிறிய இடமாக இருந்தாலும் நல்ல முறையில் பயன்படுத்தினால் நன்மை விளையும். மக்கள் ஒவ்வொரு வீட்டைச் சேர்ந்த பகுதியிலும் (அது சிறிய இடமோ பெரிய இடமோ) காய்கறி, கீரை வகைகள் இவற்றைப் பயிரிட ஏற்பாடு செய்ய வேண்டும். இதனால் அவர்களது சுயதேவைப் பூர்த்தியடைகின்றது. காய்கறிகளுக்காக செலவிடும் காசு மீதமாகின்றது. நாங்கள் பணி புரியும் கிராமங்களில் ஒரு சிலவற்றுள்ள இம்முறையைப் பரப்பினோம். நல்ல பலன் ஏற்பட்டுள்ளது. இம்முறையைப் பின்பற்றுவோரது வீடுகளில் காய்கறிகளுக்காக செலவிடப்படும் காசு மீத

மாகின்றது. அதை அவர்கள் வேறு தேவைக்குப் பயன்படுத்த முடியும். இம்முறைக்கு "புழக்கடைத் தோட்ட முறை" எனப்பெயர். இம்முறையை மக்களிடையே பரப்ப பஞ்சாயத்தினர் ஒரு சிறு இயக்கமே நடத்தினால் நல்ல பலன் ஏற்படும்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக நாம் கால்நடை விஷயத்தில் அக்கறை செலுத்தவேண்டும். நம் நாட்டில் கால் நடைகளின் எண்ணிக்கை மிக அதிகம். ஆனால் இதனால் வரும் வருமானம் மிக்க குறைவு. கால் நடைகளின் தரம் குறைந்ததாக உள்ளதே இதற்குக் காரணம். அதற்காகத்தான் இப்பொழுது "செயற்கை கருத்தரித்தல்" போன்ற சில முறைகளின் மூலம் புதிய இனத்தை உருவாக்க முயலுகின்றனர். இதனால் நமது வருமானம் பெருகி, பொருளாதார நிலை உயரும். நம் நாட்டில் உற்பத்தியாகும் பால் நமது தேவைக்குப் போதாமல் இருக்கிறது. ஆனால் அயல் ந ட்டில இத!கு நே.ர் எதிராக உள்ளது. ஆதலால், கால்நடைகளை சிறந்த முறைகளில் பராமரிக்கவும், புதிய இனத்தை உருவாக்கி பாலைப் பெருக்கவும் பஞ்சாயத்து பாடுபடவேண்டும்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக பஞ்சாயத்து தீவிரமாகப் பணியாற்றவேண்டியது சிறு தொழில் வளர்ச்சியே. நம்முடைய விவசாயிகளுக்கு ஆண்டில் சுமார் ஆறு மாதங்கள் வேலை இல்லை. மீதியுள்ள ஆறு மாதங்களிலும் முழு வேலையில்லை. இதில் பல நாட்களில் நிறைய ஓய்வு இருக்கிறது. "எந்த ஒரு சமுதாய மக்கள் தங்களது ஓய்வு நேரத்தை நன்கு பயன்படுத்துகின்றனரோ அந்த மக்கள் உள்ள சமுதாயமே வளரும்; வாழும்" என ஓர் அறிஞர் கூறுகிறார். எனவே கிராம மக்களுக்கு இத்தகைய நாட்களில் வருமானம் வரும்படியாக ஒரு தொழிலைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அத்தொழில் கிராம சூழ்நிலைக்கு உகந்ததாக, கிராமப்புறத்தின் தேவையையும், சுற்றுப்புறத்தின் தேவையையும் அடிப்படையாகக்கொண்டு அமையவேண்டும். கூடைமுடைதல், பாய் பின்னுதல், நூற்பு, மரச்சாமான்கள் செய்தல், நெசவு பொம்மைகள் செய்தல், பனைவெல்லம் தயாரித்தல், போன்றவை முதல் கோழி வளர்த்தல், சர்க்கரை தயாரித்தல் போன்றவை வரை பல தொழில்கள் உள்ளன. ஆனால் இவற்றைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உதாரணமாக ஆலைகள் அதிகம் உள்ள பகுதியில் "அம்பர் சர்க்காவைப் புகுத்தினால் அது நல்ல முறையில் நடப்பதில்லை. நாங்கள் ஒரு கிராமத்தில் "அம்பர் ராட்டை நிலயம்" துவங்க ஏற்பாடு செய்தோம்; ராட்டைகளுக்கும் வழங்கப்பட்டன. ஆனால் இன்று நூற்பார் யாரும் இல்லை. காரணம் மக்கள் இது கிடைப்பதைவிட அதிக வருமானம் கிடைக்கக் கூடிய நூற்பாலைகளில் வேலை செய்யச் சென்று விடுகின்றனர். கோவை மாவட்டத்தில் "அம்பர் ராட்டை" நல்ல முறையில் இயங்காததின் காரணம் இதுவே. ஆதலால், சூழ்நிலைக்கேற்ப வருமானத்தையும் அடிப்படையாகக்கொண்டு தொழிலை தேர்ந்தெடுக்க வேண்டும்.

"தேனீ வளர்த்தல்" வருமானம் அதிகம் தரக்கூடிய ஒரு செயல். இதைப்பொழுது போக்காகவே செய்யலாம். எவ்வளவோ கிராமங்களில் இவ்வாறு செய்து நிறைய வருமானம் பெறுகின்றனர். "மூர்த்தி சிறிது—கீர்த்தி பெரிது" என்பார்கள். அதுபோல மிகச்சிறிய உருவம் கொண்ட தேனீக்களால் நாம் அடையும் வருமானம் மிக அதிகம். நாங்கள் பணி புரியும் ஒரு கிராமத்தில் ஒருவர் தேனீ வளர்ப்பதின் மூலம் ஆண்டிற்கு சுமார் நூற்றைம்பது ரூபாய் வருமானம் பெறுகின்றார். ஆகவே பஞ்சாயத்து இதில் ஆர்வம் கொண்டு, ஒவ்வொரு வீட்டிலும் தேனீப் பெட்டிகள் அமைக்க ஏற்பாடு செய்யலாமே!

இறுதியாக ஒன்று. எந்தத் திட்டமானாலும் அதை செயலாக்கும் வகையைப் பொறுத்தே அதன் வெற்றி அமைகிறது. மேற்கண்டவைகள் கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். ஆனால், இதன் வெற்றி பஞ்சாயத்தினர் கையிலும், மக்கள் கையிலும் உள்ளது. பஞ்சாயத்தினரின் உற்சாகம், ஆர்வம், சேவை மனப்பான்மை, செயலில் தீவிரம், மக்களின் ஆதரவு, ஒத்துழைப்பு இவைகள் இணைந்தால் நாம் உயர்வோம்; நம் கிராமங்கள் உயரும்; நம் நாடும் உயரும். பாரதியார் கூறுகின்றார்:

மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே!
மரத்தை வெட்டி மனை செய்குவீரே!
உண்ணக் காய்கனி தந்திடுவீரே!
உழுது நன்செய்ப் பயிரிடுவீரே!
எண்ணெய் பால் நெய் கொணர்ந்திடுவீரே!
இழையை நூற்று நல்லாடை செய்வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்!
மேவிப்பார் மிசைக் காப்பவர் நீரே!

இதைப் பஞ்சாயத்தினர் பாரதியார் தங்களைப் பார்த்துப் பாடியதாக மனதிற்கொண்டு செயலாற்றினால் வெற்றி நிச்சயம்.

— · —

# சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்

## வளரும் இலக்கியம்பட்டி

(திரு கு. காளியப்பன், தருமபுரி)

முடியுடை மூவேந்தருள் ஒருவரான சேர குலத்தவரால், அன்னுளைய கொங்கு நாடு என பழந் தமிழ் இலக்கியங்களால் பாடப் பெற்ற நாட்டின் ஒரு பகுதி இன்று சேலம் மாவட்டம். அதன் பல வட்டங்களில் ஒருவட்டம் தருமபுரி. நல்ல சிரோடும், சிறப்போடும், அன்போடும் அறத்தோடும் நெறி பிறழா ஆட்சி புரிந்த அதியமான் நெடுமான் அஞ்சியின் ஆளுகைக்குட்பட்டிருந்த ஊர் தகடூர். கால வெள்ளத்தில் தகடூர் மருவி தருமபுரி என வழங்கலாயிற்று. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த தருமபுரியில் சமுதாய நலத் திட்டம் 1957-ம் வருஷம் எப்ரல் மாதம் 1-ம் தேதி துவங்கப்பட்டு 1960-ம் வருஷக் அக்டோபர் மாதம் 2-ம் தேதி நாளன்று பஞ்சாயத்து யூனியனுக மாற்றப்பட்டது. இந்தப் பஞ்சாயத்து யூனியனின் அங்கமே 'இலக்கியம்பட்டி பஞ்சாயத்து.' அந்த இலக்கியம்பட்டி பஞ்சாயத்தின் நடவடிக்கைகளை இவண் ஆய்ந்து பார்ப்பின், காந்தியார் அடிச்சுவட்டில் நாம் கடந்து வந்த தூரம் நமது சாதனைகளைப் பற்றிய உண்மை ஆகியவைகள் தெற்றெனப் புலனுகும் என்பது திண்ணம்.

சேலம்—பெங்களூர் நெடுஞ்சாலையில், தருமபுரி பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலிருந்து சுமார் ஒரு கல் தொலைவில் அமைந்துள்ள அழகிய சிற்றூர் இலக்கியம்பட்டி. 1951-ம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்குப்படி இக்கிராமத்தின் மொத்த ஜனத்தொகை 2,150. கிராமங்களுக்கே உரிய வழக்கமான சிறு சிறு பூசல்களால் கருத்து மாறுபாடு கொண்டிருந்த மக்கள், முதிர்ந்த அனுபவம் பெற்ற கிராமவாசிகளின் அன்பான அரவணைப்பால் ஒன்றுபடத் தொடங்கினர். உலகம் போற்றும் உத்தமர் அன்பு ஒன்றையே அறமாகக் கொண்டு தூய வாழ்க்கை நடத்திய காந்தியார் பிறந்த அக்டோபர் திங்களில் 1958-ம் ஆண்டில் ஒரு பஞ்சாயத்தை அமைத்து சமுதாய நலத் திட்டத்தில் பங்கு கொண்டு செயல்படத் தொடங்கினர்.

இலக்கியம்பட்டி, குள்ளனூர், வெண்ணும்பட்டி, ஜெட்டிஹள்ளி, பிடமனேரி என்ற ஐந்து சிற்றூர்களைத் தன்னுள் அடக்கிக்கொண்டு, பொலிவோடும் வலிவோடும் சுபிட்சப் பாதையில் பயணம் செய்துகொண்டிருக்கிறது. 2,150. மக்களைக் கொண்டுள்ள இவ்வூரில் 291 குடும்பங்கள் "உழைப்பு" ஒன்றையே மூலதனமாகக் கொண்டு அல்லும் பகலும் இடையருது எறும்புபோல் செயலாற்றி வருகின்றனர்.

> "உழுதுண்டு வாழ்வரே வாழ்வார் மற்றெல்லாம்
> தொழுதுண்டு பின் செல்பவர்."

என்ற வள்ளுவரின் மூதுரைக் கொப்ப, இங்கு வாழும் மக்கள் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டு இருக்கின்றனர். இங்கு தற்போது 1,754.62 எக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

இவற்றில் புன்செய் தானியங்கள் 1,606.18 எக்கரும் நன்செய் 148.44 எக்கரும் பயிரிடப்படுகின்றன. நெல் கேழ்வரகு போன்ற பயிர்கள் வருடத்தில் இரண்டு போகமு விளைகின்றன. முதல் போகத்தில் நெற் பயிர் 148.44 எக்கரும், இரண்டாம் போகத்தில் சுமார் 100 எக்கரும் பயிராகின்றன. நெல் சராசரி 2,500 இராத்தல் விளைகிறது. கேழ்வரகு 237.90 எக்கரிலும் சோளம் 521.35 எக்கரிலும், கம்பு 22.00 எக்கரிலும் பயிராகின்றன. கேழ்வரகு 960 இராத்தலும், சோளம் 640 இராத்தலும் கம்பு 490 இராத்தலும் விளைகின்றன. இப்பகுதி மக்கள் விவசாயத்திற்கு வட கிழக்குப் பருவ மழையையே பெரிதும் நம்பியிருக்கின்றனர். எனினும் இங்கு பெய்யும் சுமார் 30 அங்குல மழை போதாதெனினும் பாசனத்திற்குத் தனிப்பட்ட கிணறுகளும் ஏரிகளும் உள்ளன. 148.44 எக்கர் ஆயக்கட்டுகள் கொண்ட 4 பெரிய ஏரிகளும் 159 கிணறுகளும் உள்ளன. மேலும், இக்கிராம மக்கள் சமுதாய நலத் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டு வரும் கடன் வசதிகளை நன்கு பயன்படுத்தி வருகின்றனர். புதிய கிணறுகள் வெட்டவும், பழைய கிணறுகளை சீர்படுத்தி ஆழப்படுத்திக் கொள்ளவும் தருமபுரி வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலமாக பலம் கடனுகக் கொடுக்கப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தியினை மேலும் பெருக்கி கிராம சுய தேவையைப் பூர்த்தி செய்யும் நல்லெண்ணம் கொண்ட 11 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு "உணவு உற்பத்திக்

குழு" அமைக்கப்பட்டிருக்கிறது. தங்களின் தேவையான 386 டன் உணவுப் பொருட்கள் போக, உபரியாக 35 டன் மதிப்புள்ள உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய வழி வகை செய்யப்பட்டு செயல்படுத்தியும் வருகின்றனர்.

நவீன முறையில் இப்பகுதி மக்கள் விவசாயம் செய்வது போற்றுதற்குரியது. தற்போது ஜப்பானிய முறையில் நெல் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் பயிராகி வருவதைக் கண்டு மேலும் நடப்பு ஆண்டில் (1961-62) சுமார் 100 ஏக்கரில் இம்முறையைப் புகுத்தும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். இதுவல்லாமல், இங்கு கரும்பும் நிலக்கடலையும் பயிராகின்றன. வீணாகும் கழிவுப் பொருட்களை உரக் குழிகளில் தேக்கி நல் எருவாகவும் பயன்படுத்துகின்றனர். இம்முறையில் மொத்தம் 32 உரக் குழிகள் உள்ளன. விவசாய வளர்ச்சி அதிகாரியின் உதவி கொண்டு திரு வஜ்ரவேல் செட்டியார் என்பவர் ஒரு மாதிரி விவசாயப் பண்ணையை (4.75 ஏக்கர்) வைத்திருக்கிறார். இதில் தக்காளி, புடலை, பீர்க்கங்காய், வெண்டை போன்ற காய்கறிகள் மொத்தவும் செழுமையோடு பயிராகின்றது.

இக்கிராமத்தில் இரண்டு கூட்டுறவு ஐக்கிய நாணயச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. விவசாய அபிவிருத்திக்கான கடன்கள் கொடுப்பது சமுதாய நலத் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள நவீன விவசாயக் கருவிகளை மக்களுக்கு மிகக் குறைந்த வாடகையில அளிப்பது போன்ற முக்கிய பல வேலைகளைச் செய்துவருகிறது. இச்சங்கம் இதுவரையில் ரூ. 50,000 கடனாக அளித்துள்ளது. இச்சங்கத்திற்காக ஒரு விவசாயக் கிடங்கும் (ரூ. 10,000 மதிப்புள்ளது) அரசாங்கத்தாரால் சமுதாய நலத் திட்டத்தின் கீழ்க் கட்ட திட்டமிடப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதில் ரூ. 5,000 கடனாகவும், ரூ. 5,000 மானியமாகவும் அரசினரால் அளிக்கப்பட்டுள்ளது. பால் விற்பனையிலும் இக்கிராமம் நல்ல வழியைப் பின்பற்றுகிறது. மாடுகளை ஒரே இடத்தில் கூட்டி பால் கறந்து கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம் விற்று நல்ல பலனடைகிறார்கள். இப்பகுதியில் பனைமரங்கள் அதிக அளவில் உள்ளதால் பனை மரங்களிலிருந்து பதநீர் இறக்கிக் காய்ச்சிப் பனை வெல்லம் தயாரித்து விற்பனை செய்யவும் "பனை வெல்ல உற்பத்திச் சங்கம்" ஒன்றும் உள்ளது. இதன் மூலம் கிராமப் பொருளாதாரம் ஓரளவு உயரவும் வழி வகை செய்யப்படுகிறது. காலத்தின் அருமை அறிந்த இப்பகுதி மக்கள் தங்கள் ஓய்வு நேரத்தையும் வீணாக்காமல் கைத்தொழில் வளர்ச்சி அதிகாரியின் ஆலோசனை பெற்று தேனீ வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளனர். இந்த நன் முயற்சியால் இதுவரை 28 தேன் பெட்டிகள் வைக்கப்பட்டு 16-ல் தேன் எடுக்கப்பட்டு வருகின்றன.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற கருத்தையொட்டி, இப்பஞ்சாயத்து கழிவு நீர் தடையின்றி வெளியேற ரூ. 18,000 மதிப்புள்ள திட்டம் தீட்டி சுகாதாரத்திற்கு ஊறு நேராவண்ணம் சாக்கடைகளின் கட்டியிருக்கின்றது. குடிநீர் வசதியைப் பெருக்கும் வகையில் நடப்பு ஆண்டில் 5 குடிநீர்க் கிணறுகள் வெட்ட திட்டமிட்டு 2 கிணறுகள் முடிக்கப்பட்டு மீதுள்ள 3 கிணற்று வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

"பயிற்றிப் பல கல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திடல் வேண்டும்"

என்ற பாரதியாரின் வாக்குப்படி கல்வியின் மேன்மை உணர்ந்த இப்பஞ்சாயத்து குழந்தைகளுக்கு, ஆரம்பக் கல்வி புகட்ட "கட்டாயக் கல்வி முறையை" அமுலாக்குவதில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. சமுதாய நலத் திட்டத்தின் கீழ் ரூ. 7,000 மதிப்பீடு கொண்ட ஆரம்பப் பள்ளியொன்றும் கட்டப்பட்டிருக்கிறது.

காலை முதல் மாலை வரை கலப்பை ஏந்தி காடு வெட்டி கழனி திருத்தும் உழவர் பெரு மக்கள் வட்டார வளர்ச்சி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சமூகக் கல்வி நிலையங்களில் (Social Education Centers) வரும் பயனுள்ள ஏடுகளான "கிராம நலம்" "மேழிச் செல்வம்" பஞ்சாயத்து ராஜ்யம் போன்றவைகளைப் படித்தறிந்துகொள்வதோடு, ஏற்படும் ஐயங்களையும், அவ்வப்போது அப்பகுதிக்கு விஜயம் செய்யும் வட்டார வளர்ச்சி அதிகாரிகளின் மூலம் போக்கிக்கொள்கின்றனர்.

சமுதாய மனமகிழ் மன்றம் (Community Recreation Centre)ஒன்றும் இப்பஞ்சாயத்தில் உள்ளது. பொழுதுபோக்குக்குநடத்தும் காரியமும் பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்பதில் இப்பஞ்சாயத்து தனி கவனம் செலுத்துவது பாராட்டுக்குரியதாகும். "ஐந்தாண்டு திட்ட பிரசாரம்" "பஞ்சாயத்துக்களின் பணி" போன்ற பல கொள்கை விளக்க நாடகங்கள் மக்களாலேயே நடிக்கப்படுகின்றன. இந்நாடகங்களில் சிலவற்றுக்கு பஞ்சாயத்து யூனியனிலிருந்து நிதி வசதியும் அளிக்கப்படுகிறது.

இருபத்தி ஐந்து பேர் கொண்ட ஒரு சமூக சேவைக் குழு (Social Service league) சிரமதானம், பாதைச் செப்பனிடுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டு சிறந்த பணியாற்றி வருகின்றது. இவர்களுக்கு தேவையான மண் வெட்டி, கடப்பாரை போன்ற ஆயுதங்களை வட்டார வளர்ச்சி அலுவலகம் அளிக்கின்றது.

1958-ம் ஆண்டு பஞ்சாயத்து அமைத்து, வட்டார வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கத்தைப் புரிந்து கொண்டு பங்கேற்று "உண்மை, உழைப்பு, நேர்மை," என்ற மூன்று இலட்சியங்களின் அடிப்படையிலே ஆர்வத்தோடு பணி பல புரிந்து காண்பவரும் கேட்பவரும் வியந்து பாராட்டும் அளவுக்கு முன்னேறியிருக்கும் பஞ்சாயத்து "இலக்கியம்பட்டி பஞ்சாயத்து" எனக் கூறின் சாலவும் பொருந்தும். மூன்றாண்டுகளில் முப்பதாண்டின் வளர்ச்சியைப் பெற்றுள்ள இலக்கியம்பட்டி பஞ்சாயத்து மென்மேலும் ஆல்போல் தழைத்து அருகம் போல் படர்ந்து வளரும் என்பதில் ஐயமில்லை.

—o—

# கிராம சேவகர் அல்லது கிராம ஊழியர்

[திரு வி எஸ். சுப்பையா, ஐ. ஏ.எஸ்.]

[புதிய பஞ்சாயத்து ஆட்சியினால் கிராம மக்களிடையே ஏற்பட்டுள்ள மலர்ச்சியும் பொறுப்புணர்ச்சியும் பாராட்டற் பாலது. புதிய பஞ்சாயத்து ஆட்சி என்ற தொடர் சங்கிலியில் மிக முக்கியமான இடத்தைப் பெறுபவர் கிராம சேவக். அவருடைய கடமைகள், பொறுப்புக்கள் பற்றி இக் கட்டுரை அழகாக விமர்சிக்கிறது—
ஆசிரியர் ]

'பஞ்சாயத்து ராஜ்' என்ற ஒரு மாதப் பத்திரிகையை டெல்லியிலிருந்து அரசாங்கத்தார் வெளியிடுகிறார்கள். இந்தப் பத்திரிகையின் அக்டோபர் மாத இதழில் ஸ்ரீ ரக்பீர் ஸிங் மந்தாயின் உருவப்படத்தை 'ஆண்டின் தலை சிறந்த ஊழியர்' என்ற தலைப்பின் கீழ் வெளியிட்டு அன்னாரைப் பற்றிய சுருக்கமான செய்திகளையும் அத்துடன் வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது இவர், ஸ்ரீ ரக்பீர்ஸிங் மந்தர்—பஞ்சாப் மாகாணத்தில் லூதியானா என்ற அபிவிருத்தி வட்டாரத்திலுள்ள ஸனுவால் பகுதியின் கிராம சேவக் அதாவது கிராம ஊழியர். நமது தேச முழுவதிலுமே 1960–61-ல் கிராம ஊழியராகப் பணி புரிந்த பல்லாயிரக்கணக்கான கிராம ஊழியர்களில் இவரே தலை சிறந்த ஊழியர் என்று தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார் இத்துடன் இவரது முழுச் சரித்திரத்தையும் "பஞ்சாயத்து ராஜ்"ன் ஆகஸ்ட் இதழில் காண்க, என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். கிராம நலனில் அக்கரை கொண்டுள்ள எல்லோரும்—முக்கியமாக நாடு முழுவதிலும் பணி புரியும் கிராம சேவகர்கள் இவருடையச் சரிதையைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டியது மிக மிக அவசியம்.

அக்டோபர் மாதத்தில் உலகத்தில் தலை சிறந்த பரிசாக எண்ணப்படும் நோபல் பரிசுகளைப் பெற்ற விஞ்ஞானிகள், சமாதான தூதுவர்கள், பேர் இலக்கியக் கர்த்தாக்கள் ஆகியோரின் படங்களையும், அவர்களைப் பற்றிய வரலாறுகளையும் பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தார்கள். அந்த நோபல் பரிசுகளைப் பெற்ற மேதைகள் தங்கள் தங்கள் துறைகளில் எவ்வளவு அரும்பாடு பட்டிருப்பார்களோ, அதைப்போலவே இந்த சாதாரண கிராம ஊழியரான ஸ்ரீ ரக்பீர்ஸிங் மந்தரும் தம் சேவையில் ஈடுபட்டு செயலாற்றியிருக்கிறார். நமது அரசாங்கம் தலை சிறந்த ஊழியர் என்ற பட்டத்தைக் கொடுத்து கௌரவிக்கும் அளவுக்கு அவருடைய தலை சிறந்த சேவை பலன் அளித்திருக்கின்றது.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினர்"

என்ற பாட்டில் கூறியுள்ள கருத்துப்படி, ஸ்ரீ மந்தர் தம் சேவையில் ஈடுபட்டிருக்க வேண்டும். இந்தப் பாட்டில் கூறியபடியே எல்லா கிராம சேவகர்களும் பணி புரிய வேண்டும். ஏனெனில் அவர்கள் பணி அத்தகையது. பத்து மணிக்குக் காரியாலயத்துக்குச் சென்று ஐந்து மணிக்கு வேலையை மறந்து வீடு திரும்பும் பணி அன்று அவர்களுடையது. கிராம மக்கள் என்ன பத்து மணிக்கு ஆபீஸ் போகிறவர்களா? ஐந்து மணிக்கு வீடு திரும்புகிறவர்களா? காலையில் கோழி கூவும்போது உழவர்களின் வேலையும் ஆரம்பமாகிறது. மாலையில் அவர்கள் கழனிக்காட்டிலிருந்து எப்போது வீடு திரும்புவார்கள் என்று யாரால் சொல்ல முடியும்? உணவு, ஓய்வு, உறக்கம் எல்லாமே கழனியிலும், களத்து மேட்டிலுந் தான். அப்படியிருக்க அவர்களின் வாழ்வைத் திருத்தியமைக்க, கங்கணம் கட்டிக் கொண்டு அரசாங்கத்தின் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி வைக்க, அரசாங்கப் பிரதிநிதியாக அரசாங்க சேவகராக இவர்கள் கிராமப் பகுதிகளில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய பேர் என்ன? சேவகர். இவர்களுடைய பணி என்ன? கிராமங்களில் படிந்து கிடக்கும் வறுமையோடும் அறியாமையோடும் போராடி, அலை அலையாக எழும்பும் தீய சக்திகளைச் சமாளித்து சுபீட்ச வாழ்வான அமிர்தத்தைக் கொண்டு கிராம மக்களை உயர்த்த வேண்டும். அன்று ஸ்ரீராமன் தீய சக்தியை மாய்க்க கடலின் குறுக்கே அணை கட்டினார்; திருப்பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தைத் எடுத்து நல்லோர்களை உய்வித்தார். இந்த மாபெரும் செயலைக் கண்டு வியப்பால் ஆழ்ந்த குலசேகர ஆழ்வார் ஸ்ரீராமனை பாடிப் புகழ்ந்தார்.

"மலையதனால் அணைகட்டி மதின் இலங்கை அழித் [தவனே
அலைகடலைக் கடைந்து அமரர்க்கு அமுதருவிச் செய் [தவனே
கலைவலவர் தாம் வாழும் கனபுரத்தென் கரு மணியே
சிலைவலலா, சேவகனே ! சீராமா தாலேலோ ! "

"சிலை வலலா, சேவகனே ! சீராமா ! தாலேலோ ?" ஸ்ரீராமபிரான் செய்த அரும்பெருஞ்செயலைப் பாராட்டி அவனை என்ன சொல்லி அழைக்கிறார்? சேவகனே சீராமா! என்கிறார். ஆக, இந்தக் கிராமப் பணியாளர்களுக்கு அரசாங்கத்தார் பொருத்தமான பெயரைச் சூட்டி கௌரவம் அளித்திருக்கிறார்கள் அல்லவா?

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

இந்த கிராம சேவகர்கள் கிராம மக்களுக்கு, நண்பனாய், நல்லது பொல்லது இது இது வென்று அறிவுறுத்தும் ஆசிரியனாய், நல்லவழி இது, போகத்தகாத வழி இது என்று சுட்டிக்காட்டும் வழிகாட்டிகளாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். எனவே, கிராம மக்களின் வாழ்க்கையோடு தன் வாழ்க்கையை ஒன்று படுத்திக் கொள்ளும் இவர்களுக்கு ஒய்வேது? எந்த நேரத்திலும் தம் உதவியை நாடிவரும் கிராம மக்களுக்கு தூங்கா மணி விளக்காக இருந்து சேவை செய்ய அரசாங்கத்தார் இந்தப் புதிய உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள்.

நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், அதன் நிர்வாக அமைப்பில் பெரிய மாறுதல் அடைந்திருப்பதை எல்லோரும் அறிவார்கள். தேசபிதா காந்தி அடிகள் கனவு கண்ட லட்சிய கிராம அமைப்பை நாடு முழுவதிலும் நிர்மாணிக்க அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட உடனேயே நிர்வாகத்துக்காக அமர்த்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள், சமூக நல உத்தியோகஸ்தர்களாக மாற்றப்பட்டதையும் எல்லோரும் அறிவார்கள். சமூக நலத்துக்காக தனிப்பட்ட உத்தியோகத் துறையை அரசாங்கம் அமைக்கவில்லை. எனவே ஒரு காலத்தில் நிலவரி வசூலுக்கென்றும், அமைதியை நிலைநிறுத்துதற்கென்றும் வகுக்கப்பட்ட உத்தியோகத்துறை, சமூக நலத் துறையாக மாற்றப்பட்டு அவர்களோடு நாட்டு அபிவிருத்திக்காக ஏற்பட்ட, கூட்டுறவு, கால்நடை அபிவிருத்தி, தொழில் இயல் முதலிய துறையினரையும் சேர்த்து கிராம அபிவிருத்தி இலாக்காவாக இணைத்து விட்டார்கள். இந்த கிராம அபிவிருத்தி இலாக்காவின் ஆட்சிக்கும் நிர்வாகத்துக்கும் மாவட்ட ரீதியில் ஜில்லா கலெக்டர் அவர்களும் அவருக்குக் கீழ். சப் கலெக்டர் அல்லது ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் அவர்களும் அவர்களுக்கு கீழ் வட்டார அபிவிருத்தி அதிகாரியும் அமைகிறார்கள். வட்டார அபிவிருத்தி அதிகாரியின் நேர்பார்வையின் கீழ் பணி புரிகிறார் நமது கிராம ஊழியர் அல்லது கிராம சேவகர்.

### வட்டார வளர்ச்சியில் பங்கு கொள்வோர்

கிராம ஊழியரின் பொறுப்பையும் அலுவல்களையும் தெரிந்து கொள்ள இந்த வட்டார அபிவிருத்தி அதிகாரியையும் அவருக்குக் கீழ் பணி புரிய பல இலாக்காக்களிலிருந்து நியமிக்கப்பட்டிருக்கும் வளர்ச்சி அதிகாரிகளையும் அவர்களுடைய அலுவல்களையும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஒரு வட்டாரத்தில்—

ஒரு வட்டார அபிவிருத்தி அதிகாரி; இவர் வட்டார அபிவிருத்தி அலுவலகத்தை தலைமை தாங்கி நிர்வகித்து நடத்துபவர். இவருக்கு கீழ்:

ஒரு விவசாய வளர்ச்சி அதிகாரி
ஒரு கால் நடை வளர்ச்சி அதிகாரி
கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி
பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி

கட்டட நிர்மான அதாவது எஞ்சீனியரிங் வளர்ச்சி அதிகாரி

கிராமக் கைத்தொழில் வளர்ச்சி அதிகாரி
கல்வி விஸ்தரிப்பு அதிகாரி

ஆகியோர் முக்கியமானவர்கள். இந்த அதிகாரிகள் எல்லோரும் அவரவர் துறைகளில் வல்லுநர்கள். இவர்கள் எல்லோருடைய சேவையும் சுமார் மூன்னூறு ஆண்டு காலமாக வறுமையில் ஆழ்ந்து தேய்ந்து பலவீனமாகக் கிடக்கும் கிராம மக்களுக்கு இன்றியமையாததாகும். எனவே, அவர்களை அவர்களுடைய இலாக்காக்களிலிருந்து. எடுத்து வட்டார அபிவிருத்திக்காக வட்டார அபிவிருத்தி அதிகாரியின் ஆணைக்கு உட்பட்டு செயலாற்றும்படி வட்டார அபிவிருத்தி அலுவலகம் அமைந்திருக்கிறது இந்த பலவகைப்பட்ட அதிகாரிகளை கிராம மக்களுக்கு தயக்கம் இல்லாமல் கிடைக்கச் செய்வதற்குத் தான் கிராம சேவகர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருக்கு சுமார் ஐந்திலிருந்து பத்து கிராமங்கள் சேர்ந்த ஒரு பகுதி சேவைதளமாக அமைந்திருக்கிறது. சமூக நல நிர்வாகத்தில் கடைசியாக ஆனால் முக்கியமான படியாக அமைந்திருக்கிறார் கிராம ஊழியர். முன் சொன்ன வளர்ச்சி அதிகாரிகளின் திட்டங்களையும் யோஜனைகளையும் கேட்டு அதை கிராமங்களில் செயல்படுத்தி அமுலுக்குக் கொண்டு வரும் தலையாய கடமை கிராம ஊழியரைச் சேர்ந்திருக்கிறது.

முன்னெல்லாம் கிராம மக்கள் அரசாங்க அலுவலகத்தை நாடி சர்க்கார் அதிகாரியை நேருக்கு நேர் பார்த்துப் பேசுவதென்றால் அது எளிதில் நடந்த காரியமா? ஆனால் இப்போது எந்த கிராம மகனும் தயங்காமல் எந்த அதிகாரியையும் பார்க்கலாம். அந்த அதிகாரியின் சேவையை தயக்கமில்லாமல் தம் முன்னேற்றத்துக்குப் பயன் படுத்திக்கொள்ளலாம். இதற்கெல்லாம் வழி வகை செய்து கொடுக்கிறார் கிராம ஊழியர். அவருடைய முக்கியமான கடமைகள் கிராமத்தை வறுமையின் பிடியிலிருந்து மீட்பது. இதற்கென்று அரசாங்கம் சில திட்ட வட்டமான செயல்களை கிராம சேவகர்கள் செய்ய வேண்டும் என்று வகுத்திருக்கிறார்கள். அந்தச் செயல்கள் திட்டப்படி நல்ல முறையில் கிராம ஊழியர்களால் நிறைவேற்றப்பட்டுவிட்டால் கிராமங்களில் செல்வம் கொழிக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. அவைகள் என்னவென்று கேட்கிறீர்களா? தேசத்தில் தலை சிறந்த கிராம சேவகர் என்று அரசாங்கம் தேர்ந்தெடுத்த ஸ்ரீ ரக்பீர்ஸிங் மந்தர் அந்த கௌரவத்தைப் பெற என்ன செய்தார் என்பதைப் பார்த்தால் இந்தக் கடமைகள் என்ன என்பது சுலபமாக விளங்கும்.

வட்டார அபிவிருத்தித் திட்டத்தின் தத்துவத்தைப் புரிந்து கொண்ட ஸ்ரீ மந்தர் நவீன முறையில் நல்ல தேர்ச்சிப் பெற்றவர். அவருடைய சேவை தளமான ஸனுவால் கிராமப் பகுதியில் பதினொரு கிராமங்கள் உள்ளன. அங்கே அவர் சேவையிலீடுபட்ட பின்னர் விவசாய உற்பத்தி 25 சத விகிதம் உயர்ந்து விட்டது. கம்போஸ்ட் உரக் குழிகள் 127 எண்ணிக்கையிலிருந்து மூன்று வருஷ காலத்துக்குள் 685 ஆக உயர்ந்து விட்டது. 805 விவசாயிகளில் 769 விவசாயிகள் சரியான ரசாயன உரத்தை உபயோகிக்கக் கற்றுக் கொண்டார்கள். 275 டன் ரசாயன உரத்தை விவசாயிகளுக்கு விநியோகம் செய்தார். 365 ஏக்கர் நிலங்களில் தழை உரத்தைப் போடச் செய்தார். திருந்திய விதை உற்பத்தியில் 2,500 மணங்கு சிறந்த சோளமும், 8.000 மணங்கு சிறந்த கோதுமையும் பெருக்கினார். புதிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 600 ஏக்கர் நிலத்தைப் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டு வந்தார். ஒரு வருஷத்தில் 139 திருந்திய இரும்புக் கலப்பைகளை உழவில் புகுத்தினார். 69 பரீட்சார்த்த நிலங்களை ஏற்படுத்தி புதிய விவசாய முறைகளை மக்கள் மத்தியில் பரவச் செய்தார். வரிசை வரிசையாக விதைக்கும் நவீன முறையை 2,285 ஏக்கர்

(24-ம் பக்கம் பார்க்க.)

# மரம் வளர்ப்போம்

[திரு. வெ. பரஞ்சோதி, எம். ஏ.]

[மதுரை மாவட்டத்தில் டி, கல்லுப்பட்டி வட்டாரத்தைச் சேர்ந்த "காடனேரி" கிராமத்தில் மரங்களைப் பெருவாரியாக நட எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பற்றிக்கூறி, மேலும் அம் முயற்சிகள் பெருகி வளரவேண்டுமென்பதையும் இக் கட்டுரை வலியுறுத்துகிறது. டி. கல்லுப்பட்டி வட்டாரத்தைச் சேர்ந்த காரைக்கேணி என்ற கிராமத்தில் இத் துறையில் மேற் கொள்ளப்பட்டுள்ள முயற்சிகளைப் பற்றிய ஒரு கட்டுரை கிராமநலம் 1961 மார்ச் இதழில் முன்பே வெளிவந்துள்ளது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்—

ஆசிரியர்.]

"இந்தியாவில் மேற்கொள்ளப்படும் எத்திட்டமும் கிராம அடிப்படையில் அமைய வேண்டும். கிராம நிர்வாகத்தைக் கிராமப் பஞ்சாயத்து மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் கிராம ராஜ்ஜியம் மலரும்" என்பது காந்தியடிகளின் நம்பிக்கையும், அனுபவமுமாகும். ஆரம்பப் பள்ளி, கூட்டுறவுச் சங்கம், பஞ்சாயத்து ஆகிய மூன்றும் கிராம நலத்திற்குத் தேவையானவைகள். இம் மூன்று பிரிவையும் அபிவிருத்தி செய்து கிராம நலத்தைப் பேண அரசினர் மிக்க சிரத்தை எடுத்து வருகின்றனர். முக்கியமாக கிராமப் பஞ்சாயத்து வளர்ச்சியில் மிக்க ஆர்வம் காட்டப்பட்டு நாடு முழுவதும் பஞ்சாயத்து ராஜ்ஜியம் வளரத் திட்டங்கள் தீட்டப்பட்டு அமுல் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் பஞ்சாயத்துக்களின் பொறுப்பு அதிகரித்துள்ளது. கிராமப் பொருளாதாரம், கல்வி, கலாச்சாரம், சமுதாய நலம், கால்நடை அபிவிருத்தி, திருந்திய விவசாயம், சுகாதாரம், ஹரிஜன நலம், கூட்டுறவுக் கைத்தொழில் ஆகிய விஷயங்களில் கிராமப் பஞ்சாயத்து மிகவும் ஈடுபட்டு அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான ஆக்க வேலையில் ஈடுபட வேண்டும். இச்சிறு கட்டுரையில் பொது இடங்களில் கிராமப் பஞ்சாயத்து, மரங்களை நட்டுப் பராமரிப்பது சம்பந்தமாக சில அனுபவங்களைக் கூற முயலகின்றேன். அனுபவ ரீதியாகப் பெறும் சில ஆலோசனைகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

மரம் நடுவதைப் பற்றிக் கூறுமுன், மரம், மனிதன் வாழ்வில் பெற்றுள்ள இடம் என்ன என்பதை அறிந்து கொள்ளுவது அவசியமாகும். அப்போதுதான் மரத்தைப் பற்றி கிராம மக்கள் கொண்டுள்ள மனோ நிலை மாறும். மரம் மனித வாழ்விலும், மறை நூல்களிலும் சிறந்த இடம் பெற்றுள்ளது. மனிதனுக்கு வேண்டிய பூ, காய், கனிகளை அளிப்பதோடல்லாமல் அவனது ஏனைய தேவைகளையும் மரங்கள் பெருமளவுக்கு நிறைவேற்றுகின்றன. விறகு, கரி, கட்டடவேலை மரம், பசுந்தாள் உரம், மருத்துவ மூலிகைகள், பிசின், சந்தனம், மரத் தைலம் முதலானவைகள் மரத்திலிருந்தே கிடைக்கின்றன. நம் முன்னோர்கள் பசுமரத்தில் தெய்வங்கள் குடி இருக்கின்றன என்று நம்பினார்கள்.

பசு மரத்தையும், சிறு செடி கொடிகளையும் இரவிலே யாருக்கும் தெரியாமல் அறுத்துச் செல்லுவது பாவம்; இப்பாவம் அவனை எப்பிறவியிலும் தொடரும் என்று கிராம மக்கள் இன்றும் நம்புகின்றனர். கடந்த பதினைந்து ஆண்டுகளாக மதுரை மாவட்டத்தில் மழையின் அளவு குறைந்துள்ளது என்றும், இதற்குக் காரணம் பல மரங்கள் அடர்ந்த காடுகளை அழித்து விட்டதேயாகும் என்று இம்மாவட்ட மக்கள் நம்புகின்றனர். ஆனால் இவ்வளவும் அறிந்த கிராம மக்கள் தங்களது சொந்த இடத்தில்கூட மரங்களை வளர்க்க வேண்டும் என்று விரும்புவதில்லை. ஏதோ புஞ்சையில், புஞ்சைக் கரையில் முளைத்தது; எப்படியோ வளர்ந்தது; "மரம் வைத்தநாயன் தண்ணீர் ஊற்றுவான்" என்ற ஆர்வமற்ற மனோ நிலைதான் பல்லாண்டுகளாக நமது கிராம மக்கள் மத்தியிலே நிலவி வந்தது. 1950-ம் ஆண்டிலிருந்து மரம் நடுவிழா (வன மகோத்சவம்) நமது நாடு முழுவதிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டம் டி. கல்லுப்பட்டி வட்டாரத்தைச் சேர்ந்த "காடனேரி" கிராமத்தைப் பற்றி "கிராம நலத்"தில் பல கிராம மக்கள் படித்திருக்கக்கூடும். இந்த ஊரில் "தக்கர் பாபா வாலிபர் சங்கம்" ஒன்று உண்டு. இதில் 20 வாலிபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். மிக்க உற்சாக முள்ளவர்கள். இவர்களின் விடா முயற்சியால் தண்ணீர்கிணற்றைச் சுற்றியும், வாசக சாலைக்குப் பின்புறமும், ஊருக்கு வெளியே உள்ள வண்டிப் பாதையிலும் பன்னிரண்டு வேப்பங்கன்றுகள் நடப்பட்டன. வேப்பங்கன்றுகள் வளர்ந்து வருவதற்கேற்ற மண் மேற்கூறிய இடங்களில் அவ்வளவு நல்லதாக இல்லாத காரணத்தால் மூன்று கன்றுகள்தான் வளர்ந்து வந்தன. இவைகளை ஆரம்பத்தில் பேணிக்காப்பது மிகவும் கஷ்டம். ஊர் மக்கள் அனைவரும் தங்களால் இயன்றவரை இவைகளை சேதமடையாதவாறு காக்க சிறிது விரும்பினால் போதுமானது. ஆடு, மாடு, போன்ற கால் நடைகள் ஆரம்பத்தில் மரத்தை நாசம் செய்யக்கூடும். இக் கவனக் குறைவால் இப்போது ஒரே மரம்தான் நிழல் கொடுக்கும் நிலையில் உள்ளது. மூங்கில் தட்டிகளைக் கன்றுகளைச் சுற்றி அடித்து, இலந்தை முள்ளைத் தட்டிகளின்மேல் கட்டிவிட்டால் எவ்விதச் சேதமும் ஏற்படாது என்பது

அனுபவம். ஆர்வமிக்க ஒரு சிலர் செய்வதைக் காட்டிலும் ஊரின் நிர்வாகத்தை மேற்கொள்ளும் பஞ்சாயத்து, மரம் நட்டு வளர்த்தால் மிக்க நன்மை ஏற்படும் என்று எண்ணியவர்களின் எண்ணம் பஞ்சாயத்து ராஜ்ஜியம் மலர்ந்துள்ள இன்று பூர்த்தியடைகிறது.

எங்கள் ஊர் வாசகசாலைக்கு அடுத்துள்ள ஊர்ப் பொது நிலத்தில் மல்லிகை, ரோஜா போன்ற மலர்ச் செடிகளையும், மா, கொய்யா போன்ற கனி வர்க்கச் செடிகளையும் வாலிபர்களும், படித்த இளைஞர்களும் நட்டனர். ஆனால் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால் நல்ல வேலியிட்டு, எருவிட்டு பராமரிக்க இயலவில்லை. நாள் செல்லச்செல்ல மலர் தந்த செடிகளும் பட்டு விட்டன; கொய்யாச் செடிகளும் கால் நடைகளால் சேதமடைந்தன.

இந்த ஊர், ஊருணிக்கரையிலுள்ள வேம்பு, அரசு, மதுரம், புளி, அத்தி, முருங்கை, பூவரசு, சித்த அகத்தி ஆகிய மரங்களை நட்டு வளர்த்தவர் இங்குள்ள அய்யணன் சாமியார் ஆவார். கண்மாய்க்கரையில் இரண்டு புளிய மரங்களையும், ஆலமரத்தையும், சுடுகாட்டில் இரண்டு படர்ந்த ஆலமரத்தையும் வளர்த்து, கால் நடைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் நிழல் அளிக்கும் சிறப்பு இவரைச் சேரும். இவைகளை வளர்ப்பதற்கு நிதி வசதி தேவை. அதனை அவ்வப்போது மிகுந்த கஷ்டத்துடன் பஞ்சாயத்திடமிருந்து பெற்ற போதிலும், இவரது உழைப்பும், மரம் நடவேண்டுமென்ற உறுதியும்தான் இம்மரங்கள் வளர உறுதுணையாக இருந்தவைகள். "நான் வாலிபனாக இருக்கும்போது அனேக பச்சை மரங்களை வெட்டினேன். பச்சை மரங்களை வெட்டுவது பாவம் என்பது எனக்கு அப்போது தெரியாது. பின்னால்தான் நான் அப்பாவத்தை அனுபவிக்க நேர்ந்தது. அதற்குப் பிராயச்சித்தமாகத் தான் இப்போது மரம் வளர்க்கும் வேலையிலீடுபட்டுள்ளேன்" என்று அவர் கூறும்போது கிராமத்தில் எவராவது குற்றம் புரிந்தால் அவருக்கு அபராதம், ஓராண்டுக்கு பொது இடத்தில் வேப்ப மரம் ஒன்று வளர்த்துப் பேணுவது என்ற ஒரு வரம்பு ஏற்படுத்துவதும் சிறந்ததே என்று தோன்றுகிறதல்லவா?

ஊர்ப் பொது இடங்கள் எவை? கண்மாய்கள், அதன் உட் பகுதி, புறம்போக்குத் தரிசு நிலம், ஓடையின் இரு புறங்கள், ஊர்க் கிணற்றுப் பகுதி, இடுகாட்டிலுள்ள பகுதிகள், வண்டிப் பாதையின் இரு பக்கங்கள், ஊரணிக்கரை, அதன் உட்பகுதி, சாலைகள், சிறு குன்றுகளின் அடிப்பகுதி, புஞ்சை, நஞ்சைகளுக்கு மத்தியிலுள்ள மேட்டுப் பகுதிகள், அவற்றின் வழியாக ஓடும் ஆறு, ஆற்றின் கரை, ஆகிய யாவும் புதிய பஞ்சாயத்துச் சட்டப் பிரகாரம் கிராமத்தைச் சேர்ந்தவைகளே. கண்மாய்க் கரை இரு மருங்கிலும் பனை, புளிய மரங்களை நட்டால் மழை காலத்தில் கரைக்குச் சேதம் ஏற்படாது. கண்மாயின் உட் பகுதியில் கருவேல் மரங்களை வளர்த்தால் கால்நடைகளுக்குத்தீவனம், பிசின், விறகு, வேலி அமைக்க முள் ஆகியவை எளிதில் கிடைக்கும். இதன் மூலம் கிட்டும் வருமானம் கணிசமானதாகும். கண்மாயில் தண்ணீர் வற்றிய காலத்தில் வெள்ளரிச் செடியைப் பயிரிடலாம். இவ்விரண்டிற்கும் டி. கல்லுப்பட்டி வட்டாரத்தைச் சேர்ந்த காரைக்கேணி கிராமம் ஓர் சிறந்த உதாரணமாகும். ஓடை, குட்டை, ஊரணிக் கரையோரங்களில் தென்னை, புளிய மரங்களை நடலாம். நிலங்கள் வழியாகச் செல்லும் ஓடைகளின் இரு புறங்களிலும் மேற்கூறிய மரங்களையும், அவரை, கொழுஞ்சி, காட்டுமொச்சி, வேலப்பூவரசு போன்றதழை உரமளிக்கும் செடிகளையும் பயிர் செய்யலாம். சுடுகாடுகள், சாலை இரு புறங்கள் ஆய பகுதிகளில் வேப்ப மரமும், வாகை மரமும் நடலாம். பஞ்சாயத்தின் வருவாயை அதிகரிப்பதற்கான அரும்பணி இதுவாகும். கிராம நலத்திற்குப் பஞ்சாயத்து ஆற்றும் கடமைகளில் தலை சிறந்ததாகும் மரம் நட்டு வளர்த்தல்.

மரங்களைப் பராமரிப்பதில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். தண்ணீர் ஊற்றி காவல்காக்க மாதச் சம்பள வீதத்தில் ஆட்களை நியமிக்கவேண்டும். கிராமச் சாவடிகளையும், கோவிலையும் சுத்தம் செய்து கொண்டிருக்கும் சாமியார்களின் உழைப்பையும் இதற்கு உபயோகப்படுத்தலாம். ஆரம்பத்தில் பஞ்சாயத்துக்களுக்கு மானிய வசதியளித்து ஊக்குவிப்பது நல்லதாகும்.

எந்தக் கிராமத்திலும் அமைந்துள்ள ஊர்ப் பொது இடங்களில் மேலே கூறிய மரங்களை, மண் வளத்திற்கு ஏற்ப, பயிரிட்டு வளர்த்துப் பேணி வந்தால் சில ஆண்டுகளில் அந்த ஊருக்குத் தேவையான தழை உரம், விறகு, கால்நடைத் தீவனமும், வண்டி, கலப்பை போன்றவைகளுக்குத் தேவையான பலகை யாவும் கிடைக்கும்; உணவு உற்பத்தி பெருகும். சம்பந்தப்பட்ட கிராமத்தை விட்டு கிராமச் செல்வம் வெளியே செல்லும் வாய்ப்பு குன்றி, கிராம வளம் பெருகும்; மழை செழிப்புறப் பொழியும்; கிராம மக்கள் வளம் பெற்ற வாழ்வெய்தி, பஞ்சாயத்து ஆற்றும் பணியை மக்கள் போற்றுவார்கள்.

**மரம் வளர்ந்திட நட்டவர்**
**வாழ்க! அம்மரம் வேர் வலுக்கிற**
**வரையில் நீர்தினம் விட்டவர்**
**வாழ்க! நம்முடை நாட்டிலெங்கணும்**
**வானளாவிடும் சோலைகள்**
**வாழ்க! சத்திய சாந்த நல்வழி**
**வந்த இந்தச் சுதந்திரம்—**

என்னும்நாமக்கல் கவிஞரின் கவிதையைப் பாடும் கிராம மக்களைநாம் சாலைகளில் சந்திக்கும்போது, "கிராமம் வாழ, பள்ளியும், கூட்டுறவு சங்கமும், பஞ்சாயத்தும் வேண்டும்" என்பதில் புதிய சக்தி இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

———

## பாரத நாட்டில்

# கைத்தறித் தொழிலின் முன்னேற்றம்

['பாலாவி அன்ன ஆடை' என்று பாடுகிறது தமிழ் இலக்கியம். நாட்டிற்குப் பெருமை தரும் நல்ல தொழில்களில் ஒன்ருன கைத்தறித் தொழில் பாரத நாட்டில் எந்த அளவுக்கு முன்னேறியுள்ளது என்பதைக் கூறுகிறது இக்கட்டுரை— ஆசிரியர்.]

மூன்ருவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 1965-66-க்குள்ளாக உற்பத்தி செய்யப்படவிருக்கும் 930 கோடி கஜம் துணியில், கைத்தறி துணியின் அளவு 280 கோடி கஜமாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நமது நாட்டில் கைத்தறித் தொழில் மிகவும் முக்கியமான பங்கே வகித்து வருகிறது. ஏனென்ருல் மொத்தத் துணித் தேவையில் கைத்தறி துணி சுமார் 30 சத விகிதமாக இருக்கிறது. இரண்டாவதாக, இத்துறையில் வேலேவாய்ப்புக்கள் ஏராளமிருக்கின்றன.

கைத்தறித் தொழிலிக்குப் புத்துயிரூட்ட சர்க்கார் முன் வருவதற்கு முன், இத்தொழில் மிகவும் சிரமத்துக்குள்ளாயிருந்தபோது சுமார் 110 கோடி கஜம் துணி உற்பத்தியாயிற்று. இப்போது சுமார் 190 கோடி கஜம் துணி உற்பத்தியாகிறது. ஏராளமான கைத்தறி துணிகள் தேங்கிக்கிடந்தால் விளேந்த சிக்கலேத் தீர்த்துவைத்து, கைத்தறித் தொழிலுக்கு புத்துயிரூட்டி வளர்ப்பதற்காக 1952-ல் அகில இந்திய கைத்தறி போர்டு அமைக்கப்பட்டது.

கைத்தறி துணிகள், ஆடை அழகிலும், வண்ணச் சேர்க்கையிலும், நேர்த்தியான அமைப்பிலும் உலகிலேயே மிகவும் சிறந்து விளங்குகின்றன. ஒவ்வொரு துணியும் தனிக் கவர்ச்சி நிறைந்து விளங்குகிறது. இத்தகைய பாரம்பரியத் தொழில் வீழ்ச்சியுறுவதைச் சர்க்கார் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமுடியாது. ஆகவே இத் தொழிலே ஸ்திரமான அடிப்படையில் அமைப்பதற்காக, அகில இந்திய கைத்தறி போர்டு, கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளத் தொடங்கியது. தேவையான நூலே போதுமான அளவு கிடைக்கச் செய்வது, இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் விற்பனே ஏற்பாடுகள், ஆராய்ச்சி வடிவமைப்புகள், ஆகியவற்றுக்கு ஊக்கமளிப்பது, உற்பத்தி நுட்பத்தை மேம்படுத்துவது, சிப்பந்திகள் பயிற்சி, மேம்பட்டக் கருவிகள் கிடைக்கச் செய்வது ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சென்ற ஆண்டுகளில் இத்துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களேப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

ஆலேத் துணி மீது அதிகப்படியாக எக்சைஸ் தீர்வை விதித்துக் கிடைத்த செஸ் நிதியிலிருந்து பல்வேறு திட்டங்களுக்கு ராஜ்ய சர்க்கார்கள் மூலமாக உதவியளிக்கப்பட்டது. 1960-ல் இந்நிதி எடுக்கப்பட்ட பிறகு பொது ரெவின்யூ வருமானத்திலிருந்து நிதி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ராஜ்ய சர்க்கார்களின் பொறுப்பில் நிறைவேற்றப்பட்டு வருகிற இத்திட்டங்களுக்கு பொது உதவிப் பாணி அடிப்படையில் நிதியுதவி கிடைத்திருக்கிறது.

நெசவாளர்களேக் கூட்டுறவு சங்கங்களில் சேர வைத்து அவர்களேக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவரப் பட்டது. அதன் காரணமாக கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாக இருந்தவர்களின் எண்ணிக்கை 1951-ல் 7 லட்சமாக இருந்தது. இப்போது 12 லட்சமாக வளர்ந்திருக்கிறது. நெசவாளர்களின் உற்பத்தித் திட்டங்களுக்கு ஊக்கமளிப்பதற்காகவும் விற்பனே ஏற்பாடுகளே விரிவுபடுத்துவதற்காகவும் கடன்கள் வழங்கப்பட்டன. 1957 ஏப்ரல் 1-ந் தேதி முதல், ராஜ்ய பாங்குகளின் மூலமாகவும் கூட்டுறவு பாங்குகளின் மூலமாகவும் இந்திய ரிசர்வ் பாங்கிலிருந்து கடன் வசதிகளேப் பெற்று வருகின்றன.

### விற்பனே ஏற்பாடுகள்

கைத்தறி துணிகளே விற்பதில் நெசவாளர்களுக்கிருந்த சிரமங்களேத் தவிர்ப்பதற்காக விற்பனே டிப்போக்கள், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், வாகன ரீதியான விற்பனே நிலேயங்கள், கைவண்டி மூலம் விற்பனே ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. இப்போது 1,600 விற்பனே நிலேயங்கள், ராஜ்யங்களுக்கிடையேயான 33 நிலேயங்கள், 49 மத்திய நிலேயங்கள், 38 வாகன ரீதியான விற்பனே நிலேயங்கள் ஆகியவை மூலமாக கைத்தறித் துணி விற்பனே நடைபெற்று வருகிறது. கைத்தறித் துணி விற்பனே மீது வழங்கப்படும் ரிபேட்டுத் திட்டம் கைத்தறித் துணி விற்பனேயை அதிகரித்திருக்கிறது. இத்தொழிலே ஸ்திரப்படுத்தி ஆலேத் துணிகளுடன் சமமாகப் போட்டியிடச் செய்ய திருந்திய கருவிகளும் சப்ளே செய்யப்பட்டு வருகின்றன. இதனுல் உற்பத்தி பெருவதோடு அதன் தரமும் மேம்படுகிறது. சாயமிடும் நிலேயங்கள், மோஸ்தர் தயாரிப்பு நிலேயங்கள், முதலியவற்றுக்கு கடன்களும் மானியங்களும் அனுமதிக்கப்படுவதோடு ஜேக்கார்டு யந்திரங்கள், பேட்டுப்பேட்டிகள் முதலியவைகளும் சப்ளே செய்யப்படுகின்றன. நெசவாளர்கள் இம்மாதிரியான சௌகரியங்களேப் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

கைத்தறி நெசவாளர்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிய தொடர்பில்லாமல் சிதறிக்கிடப்பதால் ஜவுளித் தொழில் ஆராய்ச்சியின் முடிவுகள் அவர்களுக்கு எளிதில் கிடைப்பதில்லை. ஆயினும் மக்களின் விருப்பத்துக்கேற்ற மோஸ்தர்களில் துணியைத் தயாரிக்கவேண்டுவது அவசியமாகும். ஆகவே மாறுபட்டு வரும் நாகரிகத்துக்கு ஏற்ற விதத்தில் புத்தம் புதிய டிசைன்களையும், மோஸ்தர்களையும் தயாரிக்கவேண்டியது மிகவும் அவசியமாகி விட்டது. ஆகவே பம்பாய், சென்னை, கல்கத்தா, வாரணசி, ஆகிய இடங்களில் நெசவாளர் சேவை நிலையங்களையும், காஞ்சிபுரத்தில் துணை சேவை நிலையங்களையும் போர்டு ஏற்படுத்தியிருக்கிறது. இங்கு, உற்பத்தித் தேவைகள், நெசவு நுட்பம், நூலுக்குச் சாயமிடுதல், கெட்டிச் சாயம், முதலியவை பற்றி ஆலோசனை கூறப்படுகிறது. இங்கு நெசவுத் தொழில் நுட்பம் பற்றிய ஆராய்ச்சியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கூட்டுறவு சங்கங்களில் அல்லது சர்க்கார் ஸ்தாபனங்களில் வேலை பார்க்கிற நெசவாளர், சாயமிடுவோர், மோஸ்தர் தயாரிப்பாளர் ஆகியோருக்கு நான்கு மாதப் பயிற்சியளிக்கவேண்டுமென்று வேலைக்குக் குழு தெரிவித்த யோசனைக்கிணங்க பயிற்சித் திட்டமொன்றும் நடைபெற்றுவருகிறது. வாரணசியில் மத்திய கைத்தறித் தொழில் நுட்ப நெசவுப் பயிற்சி நிலையமொன்றும், சேலத்தில் ஜவுளி நிலையமொன்றும் இயங்கிவருகின்றன. கைத்தறித் தொழிலின் பல்வேறு அம்சங்களை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய தொழில் நுட்ப நிபுணர்களுக்கு இங்கு பயிற்சி யளிக்கப்படுகிறது.

நூற்பு ஆலைகளிலிருந்து கைத்தறிகளுக்கு நூல் கிடைக்கிறது. இது விரைவாகவும், சுலபமாகவும், மலிவாகவும் கிடைக்கும்படிச் செய்வதற்காக கூட்டுறவு நூற்பு ஆலைகளை நிறுவ முடிவு செய்யப்பட்டது. இது வரையில் அனுமதி வழங்கப்பட்ட 11 கூட்டுறவு நூற்பு ஆலைகளில், மூன்று ஏற்கெனவே இயங்கத் தொடங்கிவிட்டன.

சொந்தத் தறியில்லாதவர்கள் கூட்டாகச் சேர்ந்து தொழில் கூட்டுறவு சங்கங்களைத் தொடங்குவதற்குத் துணையாக நிதியுதவியளிக்கவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கேரளாவிலும் தமிழ் நாட்டிலும் இம்மாதிரித் தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வேலைக் குழு தெரிவித்துள்ள யோசனையின்படி சொந்தத் தறியில்லாத நெசவாளர்களுக்கு வேலை கிடைக்கச் செய்யும் முன்னோடித் திட்டம் தமிழ் நாட்டில் அமுலான பிறகு மேலும் ஏராளமான நெசவாளர்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்து, வேலை வசதிகளை ஏற்படுத்துவதிலும் சர்க்கார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். புதிய வீடுகளைக் கட்டுவதற்காகவும் பழைய வீடுகளைப் புதுப்பிப்பதற்காகவும் உதவியளிக்கப்படுகிறது. இதுவரையில், அனுமதிக்கப்பட்ட 6,372 வீடுகளில் 2,401 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன; 1,560 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

கைத்தறித் துணிகள் பற்றிப் போதுமான விளம்பரங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சீனு, ஜப்பான், ஹாங்காங் ஆகியவற்றின் போட்டியின் காரணமாகவும், பிறநாட்டு இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் விளைவாகவும் கைத்தறித் துணி ஏற்றுமதி பாதிக்கப்பட்டு வருகிறது. இந்திய கைத்தறித் துணிகளுக்கு வெளி நாடுகளில் மார்க்கெட்டுகளை ஏற்படுத்துவதற்காக அகில இந்திய கைத்தறித் துணி விற்பனை கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சங்கம் சிங்கப்பூர், பாங்காக், கொழும்பு, ஏடன், கோலாலம்பூர் ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்களை நடத்திவருகிறது. மாமூல் மார்க்கெட்டுகல்லாத அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டுபிடிப்பதற்காக ராஜ்ய வர்த்தகக் கார்ப்பரேஷன் கீழ் கைத்தறி ஏற்றுமதி ஸ்தாபனமொன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

கைத்தறித் துணிகளைப் பரிசோதித்துத் தர அடையாளமிடும் முறையும் அமுலில் இருந்துவருகிறது. கைத்தறித் துணிகளின் உயர்ந்த தரத்தைப் பாதுகாத்து வெளி நாடுகளில் நம்பிக்கை ஏற்படச் செய்வது இந்த ஸ்தாபனத்தின் நோக்கமாகும்.

கைத்தறி போர்டு ஏற்படுத்தப்பட்ட பிறகு, 1953 முதல் 1961 வரையில் பல்வேறு திட்டங்களுக்குக்காக கடனாகவும், மானியமாகவும் ரூ. 37.75 கோடி அனுமதிக்கப்பட்டிருக்கிறது; அதில் ரூ. 35 கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்ட காலத்தில் இத்தொழிலை வளர்ப்பதற்காக ரூ. 34 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டங்களின் பயனாக கைத்தறித் தொழில் கணிசமாக வளர்ந்து வருகிறது என்பதில் சந்தேகமில்லை. சர்க்காரின் உதவியும், ஆலோசனையும், மக்களின் ஆதரவும் தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருப்பதால் இத்தொழிலின் முன்னேற்றம் இன்னும் கணிசமாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய பொருளாதார வளர்ச்சியில் கைத்தறித் தொழில் இன்னும் கணிசமான ஸ்தானத்தை வகிக்கும்.

# சுவையான செய்திகள்

## கிராமப் புறங்களில் மின்சார வசதி

5,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக்கால முடிவுக்குள் மின்சார வசதி ஏற்பட்டு விடும். அத்துடன், இரண்டாயிரத்திலிருந்து ஐயாயிரம் வரையில் மக்கள் தொகை உள்ள கிராமங்களில் பாதி அளவுக்கு மின்சார சக்தி பெறப்படும். 1951-ம் ஆண்டில், 3,687 கிராமங்களில் மட்டும் தான் மின்சார வசதி இருந்தது. முதல், இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில், இந்த எண்ணிக்கை 23,000-க்கு உயர்ந்தது. பின்பு இது 1965–66-ல் மேலும் 43,000 ஆக உயர்ந்து விடும்.

5,000க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள பெரிய கிராமங்களில் 40 சத விகிதத்திற்கு, விவசாயம் செய்ய, வீட்டு வேலைகளுக்கு, தொழில் சம்பந்தமான வேலைகளுக்கு மின்சார வசதி கிடைக்கும்.

மூன்ருவது திட்டக் காலத்தில் கிராமப்புறங்களில் மின்சார வசதியினை விஸ்தரிக்க சில விசேஷ ஏற்பாடுகளை மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டுள்ளது. மின்சாரத்தைக் கொண்டு போதலில் உள்ள செலவைக் குறைப்பதற்காக பஞ்சாயத்துச் சமிதிகள், கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலமாக பொதுஜன ஒத்துழைப்பைப் பெறுவதும் இந்த ஏற்பாடுகளில் சேர்ந்ததாகும்.

மத்திய தண்ணீர், சக்தி கமிஷன் ஒரு விசேஷ அமைப்பினை ஏற்படுத்தியுள்ளது. மலைப் பிரதேசங்களிலும், ஒதுக்குப்புறமான பிரதேசங்களிலும் பத்திலிருந்து நூறு கிலோவாட் ஹைட்ரோ-பிளாண்டுகளை அமைப்பதற்கும், அமைப்பு வேலைகளில் ஒத்தாசை புரிவதற்கும் இந்த விசேஷ அமைப்பு இருக்கும். இன்னொரு குறிப்பிடத் தக்க அபிவிருத்தி வேலை என்னவென்ருல், சிறிய ஹைட்ரோ செட்டுகளை உற்பத்தி செய்வதை அதிகப் படுத்துவதேயாகும். இந்த முறைகளினுல், விவசாயமானது மெள்ள மெள்ள "தொழில் மயமாக்கப்பட்டு" வருங்காலத்தில் இந்திய நாட்டின் கிராமப்புற வாழ்க்கையையே இது மாற்றியமைக்கும்.

## பஞ்சாயத்து கோர்ட்டுகள் பற்றிய அறிக்கை இந்த வருடம் வெளியாகும்

பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் பற்றிய பரிசீலனை செய்வதற்காக மத்திய அரசாங்கத்தினுல் நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட குழு இது வரையில் பத்து மாநிலங்களுக்கு விஜயம் செய்துள்ளது. இந்த ஆண்டு (1961) ஆரம்பத்திலேயே இந்தக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## டெல்லி பல்கலை கழகத்தில் சமுதாய அபிவிருத்தி சம்பந்தமான ஒரு புலமை ஸ்தானம்

"சமுதாய அபிவிருத்தி—பஞ்சாயத்து ராஜ்" சம்பந்தமாக ஒரு தனியான புலமை ஸ்தானம் (faculty) பல்வேறு இந்திய பல்கலைக் கழகங்களிலும் சீக்கிரத்தில் ஏற்படுத்தப் படலாம்.

கூட்டுறவு முறையில் மாணவர்களுக்கு நேரடிப் பயிற்சி அளிப்பதற்காக வேண்டி, அடுத்த பரீட்சை ஆண்டுக்கு முன்பாகவே, மூன்று பல்கலைக் கழகங்களில் கூட்டுறவு ஸ்டோர்கள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன. முதலில் இது டெல்லி பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்து வைக்கப் படும். பல்கலைக் கழக கமிஷன் இதற்காக ஒரு மாதிரியான மூலதனத்தையும், ஒரு கடனையும் வழங்கும் எனக் கோடியிட்டுக் காட்டியுள்ளதாகத் தெரிகிறது.

("பஞ்சாயத்து ராஜ்" என்ற பத்திரிகையிலிருந்து.)

---

# எழுத்தாளர்களுக்கு ஓர் அறிவிப்பு

"கிராம நலம்" இதழுக்கு கதை, கட்டுரை, கவிதை எழுதி அனுப்புவோர் தங்களுடைய முழு தபால் முகவரியை தெளிவாக எழுதி அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிருேம். அவ்வாறு, எழுதியவரின் முழு தபால் முகவரி இல்லாத விஷயங்கள், வெளியிடப்பட்ட பின், அவற்றுக்குரிய சன்மானத் தொகை தவருன முகவரிக்குச் சென்று திரும்பிவருகின்றன.

உதாரணமாக, திரு. வி. பி. ரங்கசாமி, திரு. ஆர். கோவிந்தராஜன், முதலியோரின் கதை, கட்டுரைகள் கிராம நலத்தின் இதழ்களில் வெளியிடப்பெற்றிருந்தும், அவர்களுடைய சரியான தபால் முகவரி இல்லாமையால், அவர்களுக்கு உரிய சன்மானத் தொகை அனுப்பப்பெற முடியாமல் அலுவலகத்தில் உள்ளது. ஆகவே, மேற்குறித்தவர்கள் இந்த அறிவிப்பு கண்ட ஒரு மாதகாலத்துக்குள், தம்முடைய சரியான முகவரியும், தாமே அத்தொகைக்குரியவர் எனபதற்குத் தக்க சான்றும், அனுப்பிவைத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிருேம். இல்லையென்ருல், அவர்களுடைய அந்தத் தொகையை அவர்கள் இழக்க நேரிடும்.

எனவே, இத்தகைய சிக்கல்கள் இனிமேல் நேராமல் இருப்பதற்கு, "கிராம நலத்"திற்கு, கதை, கட்டுரை, கவிதை, அனுப்பிவைப்பவர் எல்லோரும், தவருமல் தம்முடைய சரியான முழு தபால் முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடுமாறு வேண்டுகிருேம்.

—ஆசிரியர்.

# அனுபவ உண்மைகள்

[கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த திரு. வேலப்பன் என்பவர் குடும்பக் கட்டுப்பாட்டுக்கான அறுவை முறை சிகிச்சையினைச் செய்துகொண்டார். அதை யொட்டி, அவருடைய அனுபவத்தையும், தமிழ்நாடு அரசாங்கப் பிரதமச் செயலாளர் திரு. ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி எஸ். அவர்கள் திரு. வேலப்பன் அவர்களைப் பாராட்டி எழுதியுள்ள கடிதத்தையும் இங்கே காணலாம்—ஆசிரியர் ]

"என்னுடைய பெயர் வேலப்பன். நான் பூலுவப்பட்டி பஞ்சாயத்தைச் சேர்ந்த நாதக் கவுண்டன் புதூர் கிராமத்தில் இருக்கும் கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்து வருகிறேன். என்னுடைய மாதச் சம்பளம் ரூ. 45. இந்தச் சிறிய வருமானத்தில் நானும் என் மனைவியும், நான்கு பெண் குழந்தைகளும், ஒரு ஆண் குழந்தையும் ஆக ஏழு பேர் ஜீவனம் நடத்துகிறோம். மேலும் என் குடும்பம் பெரிதானால் இந்தச் சிறிய சம்பளத்தை வைத்துக்கொண்டு என்னால் சமாளிக்கவே முடியாது. எனக்கு நிம்மதியும் இல்லை. இந்தச் சமயத்தில் சர்க்காரின் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றி கிராம சேவகர் மூலம் அறிந்தேன். ஆபத்தில்லாத, நிரந்தர முறையான அறுவை முறைச் சிகிச்சை சிலாக்கியம் என்று தெரிந்து கொண்டேன். இந்தச் சிகிச்சையை நான் பெற, முதலில் என் மனைவியின் சம்மதத்தைப் பெறுவது கடினமாயிருந்தது. ஆனால் இந்தத் திட்டத்தின் முழு விவரமும் அறிந்த பின் என் மனைவியின் சம்மதம் கிடைத்தது. மற்ற குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை விட ஆபத்தில்லாத நிரந்தர முறையான அறுவைச் சிகிச்சை முறையைப் பெற்றுக்கொள்வதெனத் தீர்மானித்தேன். சமூகக் கல்வி அதிகாரியிடமும், கிராம சேவக்கிடமும் என்னுடைய முடிவைத்தெரிவித்தேன். என் கிராமப் பஞ்சாயத்துத் தலைவரும் என் யோசனைக் கிணங்கி என்னை டீ சிகிச்சை பெறுவதற்கு சிபார்சு செய்தார். கோயம்புத்தூர் பெரிய ஆஸ்பத்திரியில் டீ சிகிச்சை பெறச் செல்ல செலவுக்கு ரூ. 10 எனக்கு அளிக்கப்பட்டது. 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9-ம் தேதி ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். முதலில் ஆஸ்பத்திரியில் மிகவும் பயந்தேன் ஆனால் இந்தச் சிகிச்சை பதினைந்து நிமிடங்களுக்குள் முடிந்து விட்டது. எனக்கு வலியே தெரியவில்லை. எனது குடும்ப அளவைக் கட்டுப்படுத்தியது குறித்து எனக்கு மிகுந்த சந்தோஷம். மேலும் என்னுடைய செலவுக்கு ரூ. 30 சர்க்கார் ஆஸ்பத்திரியில் எனனிடம் கொடுக்கப்பட்டது.

இந்த அறுவை சிகிச்சையினால் நான் எந்த விதத்திலும் பலஹீனமடையவில்லை. முன் போலவே சுறு சுறுப்பாய் இருக்கிறேன். என்னுடைய குடும்ப நலத்தைக் காப்பாற்றியது குடும்பக் கட்டுப்பாடு தான்.

—வேலப்பன்

அன்புள்ள வேலப்பன் அவர்களுக்கு,

குடும்பக் கட்டுப்பாட்டுத் தினத்தையொட்டி கோயம்புத்தூர் ஜில்லா, தொண்டாமுத்தூர் பஞ்சாயத்து யூனியன் வெளியிட்டுள்ள பிரசுரத்தைப் பெற்றுக்கொண்டேன். உங்கள் சொந்த அனுபவத்தை எல்லோருக்கும் தெரியும்படி எடுத்துரைத்து, அதன் மூலமாக குடும்பக் கட்டுப்பாடு விஷயத்தில் அறுவை சிகிச்சை முறையின் உபயோகத்தையும், தீங்கின்மையையும் உங்கள் வட்டாரத்திலுள்ள பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும்படிச் செய்தமைக்கு எனது மகிழ்ச்சி.

குடும்பக் கட்டுப்பாட்டின் விளக்கத்தை ஒவ்வொரு குடும்பத்திற்கும் எடுத்துச் சொல்லும் சிறந்த சேவையில் உங்கள் வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் நீங்கள் செய்திருக்கும் சேவை போற்றத்தக்கது.

தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாயத்துக்கள் நடத்திவரும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ள மற்ற நண்பர்களும் உங்கள் வழியைப் பின்பற்றுவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு, உங்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

ஆர். ஏ. கோபாலசாமி,
தலைமைச் செயலாளர்,
தலைவர், திட்டக் கமிட்டி, குடும்பக் கட்டுப்பாடு
திட்ட போர்டு.

# பஞ்சாயத்து ஆட்சி பயிற்சி நிலையங்கள்

## நூறு நிலையங்கள் ஏற்படுத்தப்படும்

யூனியன் சமுதாய அபிவிருத்தி-கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். கே. டே தலைமையில் 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ந் தேதி புதுடில்லியில் நடைபெற்ற, பயிற்சி ஆலோசனை போர்டு கூட்டத்தில், இந்தியாவின் பலவேறு பகுதிகளிலும், 100 பஞ்சாயத்து ஆட்சி பயிற்சி நிலையங்களை ஏற்படுத்த உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென்பதாக சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. சமுதாய அபிவிருத்தி மத்திய ஆராய்ச்சி நிலையத்தையும், சமுதாய அபிவிருத்தி பயிற்சி நிலையத்தையும் இணைத்து, தேசிய சமுதாய அபிவிருத்தி நிலையமென்று பெயரிடப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தில் தீவிர வேலை மேற்கொள்பவர்களுக்குப் பயிற்சி யளிப்பதற்காக ஒவ்வொரு நிலையத்துடனும் ஐந்து கிராமங்களை இணைக்க வேண்டுமென்ற யோசனையும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சமுதாய அபிவிருத்தி சிப்பந்திகள் பயிற்சிப் பாடத் திட்டத்தில் உடலுழைப்பு முக்கிய அம்சமாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தப் பட்டிருக்கிறது. இது, கிராமங்களில் பணியாற்ற வேண்டியிருக்கிற சிப்பந்திகளிடையே புதிய மனப்பான்மையை உருவாக்குமென்பதாகக் கருதப்படுகிறது.

பஞ்சாயத்து ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொள்கிறவர்களுக்கு, குறிப்பாக சர்க்கார் சார்பற்ற ஊழியர்களுக்குக் கிடைக்கும் பயிற்சியின் உயர்ந்த தரத்தைப் பொறுத்துத்தான் பஞ்சாயத்து ஆட்சி ஸ்தாபனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரம் பயனுள்ளதாக இருக்கும் என்பதாக திரு. எஸ். கே. டே தமது துவக்கவுரையில் குறிப்பிட்டார். ராஜ்ய சர்க்கார்களும் பல்வேறு மத்திய அரசாங்கத்துறைகளும் வழங்கும் ஆதார வசதிகளைப் பூரணமாகப் பயன்படுத்தும் விதத்தில் சமுதாய, சமூக, பொருளாதார ஸ்தாபனங்களை வளர்க்கும் பொறுப்பு, சமுதாய அபிவிருத்தி கூட்டுறவுத் துறையினுடையதாகும் என்பதாகவும் மந்திரி கூறினார்.

ஒவ்வொரு நிலையத்திலும், பயிற்சி வேலைகளைத் தீவிரமாக மேற்கொள்ளுவதற்காக, ஐந்து கிராமங்களை அதனுடன் இணைக்கும் திட்டம், விஸ்தரிப்பு நுட்பங்களின் பலாபலன்களைத் துல்லியமாகத் தெரிந்துகொள்வதற்கு உதவுமென்பதாகவும் மந்திரி கூறினார்.

# கிராம முன்னேற்றத்திற்கான மூன்று அறிகுறிகள்

"கிராமப் புறங்களில் பஞ்சாயத்து ஆட்சி அமுலுக்கு வந்த பிறகு, அதனால் ஏற்பட்டுள்ள நன்மைகளைப் பற்றி கிராம மக்கள் உணர்ந்து நல்ல முறையில் பாராட்டத் தொடங்கியுள்ளார்கள். உண்மையான மக்களாட்சி என்கிற சுதந்திர உணர்வு கிராமப் புறங்களில் ஏற்பட்டுள்ளதை யாவரும் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது....

கிராமங்களில் கிராம சபைகள், சீரிய பணியாற்றுகின்றன. தங்களுடைய தேவைகளை, அந்தப் பிரதேசத்தில் உள்ள கிராம மக்கள் வலியுறுத்திக் கூறவும், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில அங்கம் வகிக்கின்ற தங்களுடைய பிரதிநிதிகளிலிருந்து முன்பே ஆரம்பித்து நடைபெற்று வருகின்ற வேலைத் திட்டங்கள் பற்றிய தகவல்களையும், விவரங்களையும் கிராம மக்கள் கேட்டுப் பெறவும், சிறந்த சாதனமாக இக் கிராம சபைகள் திகழ்கின்றன..

இப்பொழுது கிராமப் புறங்களுக்கு விஜயம் செய்பவர்களை மூன்று விஷயங்கள் மிகவும் கவர்வனவாக உள்ளன..

அவையாவன.—

(1) கிடைக்கின்ற புறம்போக்கு நிலங்களில் எல்லாம் ஏராளமான மரங்கள் பெருவாரியான வகையில் நடப்பட்டிருத்தல்; (சில கிராமங்களில் இப்படி நடப்பட்டுள்ள மரங்களின் எண்ணிக்கை நாற்பதாயிரம் என்றுள்ளது).

(2) இதுநாள் வரையில், நெடுஞ்சாலைகள், பெரிய ரோடுகளுடன் தொடர்பில்லாமல் துண்டிக்கப் பட்டிருந்த பிரதேசங்களை, ரோடுகள் போட்டு இணைப்பதிலும், சிறிய நீர்ப் பாசன வேலைகளை ஏற்று நடத்துதலிலும் கிராம மக்கள் காட்டுகின்ற நல்ல ஒத்துழைப்பு மனப்பான்மை ;

(3) குடிதண்ணீர் வசதி செய்து தருவதற்காக ஏராளமான மேல் மட்ட தண்ணீர்த் தொட்டிகள் (Overhead Tanks) கட்டுவதில் கிராம மக்கள் காட்டப்படுகிற வேகமும் ஆர்வமும்."

(சமீபத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் பத்து தினங்கள் விஸ்தாரமாகச் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் திரும்பியதும், கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு. கோ. வேங்கடாசலபதி அவர்கள் வெளியிட்ட கருத்துரை.)

# வான் நிலை

திரு. K. S. மகாதேவன், எம்.ஏ.பி.எஸ்சி.

[அறிவியல் கட்டுரை வரிசையில் 'கிராம நலம்' அளிக்கும் ஆறுவது கட்டுரை இது. சென்ற இதழில கதிரவனைப் பற்றி ஆராயப்பட்டிருந்தது. இந்தக் கட்டுரை, மக்கள் மனங்குளிர வைக்கும் மழையைப் பற்றிக் கூறுகிறது "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்று மங்கல வாழ்த்துக் கூறி "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என்று பாடுதல் தமிழ் மரபல்லவா ?—
ஆசிரியர்.]

வானம் கருத்தால்.....!

**பழனி.**—யார் வருகிறது ? ஓ ! கந்தையா தாத்தாவா ? தேங்காய் மூடி, பழம், பாக்கு வெற்றிலை எல்லாம் கொண்டுவருகிறீர்களே ! கோவிலுக்குப் போய்விட்டு வருகிறீர்களா ?

**கந்தையா.**—அட ! நீ ஒரு பக்கத்திலே தம்பி ! கோவிலுக்கும் இல்லை ; குளத்திற்கும் இல்லை. நேரே பூசாரி வீட்டிலிருந்து வருகிறேன் !

**பழனி.**—ஓ! குறி கேட்கப் போய் இருந்தீர்களா ? உங்கள் பையன் கல்யாணம் எப்பொழுது நடக்கும் என்று கேட்டீர்களா ?

**கந்தையா.**—அட, நீ சும்மா இரு தம்பி ! அவனுக்கு இப்பொழுது என்ன அவசரம் வந்து விட்டது ? அதற்கு இல்லை தம்பி , நான் போனது.

**பழனி.**—பின்னே எதற்கு தாத்தா ?

**கந்தையா.**—நீ வருத்தம் தெரியாத பிள்ளையா இருக்கிறீயே ! இந்தப் பாழும் வானம் ஆறு மாதமா மழையையே காட்டமாட்டேன் என்கிறதே.........

**பழனி.**—அப்படிச் சொல்லுங்கள் தாத்தா ! எப்பொழுது மழை பெய்யும் என்று பூசாரியிடம் குறி கேட்கப் போனீர்களா ? பூசாரி எப்பொழுது பெய்யும் என்று சொன்னர் ?

**கந்தையா**—அந்தக் கதையை நீ ஏன் கேட்கிருய் தம்பி ! இந்த நாளிலேதான் பெய்யும் என்று ஒரு வார்த்தையிலே சொல்லத் தெரியவில்லை...... பாட்டுப்பாட ஆரம்பித்து விட்டான் பாட்டு !

**பழனி.**—ஓ! பாட்டுப் பாடினரா ? அந்தப்பாட்டைக் கொஞ்சம் சொல்லுங்க தாத்தா. பாட்டு என்றல் எனக்கு மிகவும் ஆசை !

**கந்தையா.**—அது பாட்டு இல்லை தம்பி ! வெறும் பிதற்றல் ! மழை எப்பொழுது அப்பா வரும் என்று கேட்டால்,

இன்றையானுலும்
நாளையானுலும்
ஒரு வாரமானுலும்
ஒரு மாதமானுலும்
ஒரு வருசமானுலும்
வானம் கருத்தால்
மழையும் பெய்யுமே !

என்று உடுக்கடித்து உளறுகிறன். என் தம்பி, பழனி ! இதுவா குறி சொல்லுகிற அழகு ?

**பழனி.**—ஆ ! ஆ!! அருமையாகச் சொல்லியிருக்கிறரே ! பூசாரி! தாத்தா !பூசாரி சொன்னது தான் சரி. வானம் கருத்தால்தான் மழை பெய்யும்.

**கந்தையா**—என்ன, தம்பி ! நீயும் அந்தப் பூசாரி பக்கம் சேர்ந்து கொண்டு என்னிடம் விளையாடுகிருயா ? வானம் கருத்த பொழுது மழை வருகிற செய்தி அறுபது வயதுக்கு மேல் ஆன எனக்குத் தெரியாத என்ன ? அது எப்பொழுது கருக்கும் என்பது தானே இப்பொழுது யாருக்கும் புரியாமல் இருக்கிறது

**பழனி.**—நன்ருய்ச் சொன்னீர்கள், தாத்தா ! என்றைக்கு மழை பெய்யும் என்று சொல்வது தான் இன்று யாருக்கும் முடியாத ஒரு செயலாக இருக்கின்றது !

நல்லவரும் மழையும் !

**கந்தையா.**—என்னவோ, தம்பி ! நல்லவர் இருக்கிற இடத்தில் தான் மழை பெய்யும் என்று நாங்கள் அந்தக் காலத்திலே கேட்டது இப்பொழுது நினைவுக்கு வருகிறது ! இப்பொழுது மனிதர்கள் கெட்டுப் போய் விட்டார்கள்—மழையும் இல்லாமல் போய்விட்டது !

**பழனி.**—வருத்தப்படாதீர்கள் ; தாத்தா ! எல்லோரும் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்று நம் பெரியவர்கள் அந்தக்காலத்தில் அப்படிச் சொல்லி வைத்தார்கள் ! ஆனல், அதை அப்படியே நம்பி விட்டால உலகத்தின் வெப்ப மண்டலப் பகுதிகளாகிய நடு ஆப்ரிக்கா, கிழக்கிந்தியத் தீவுகள் போன்ற இடங்களில் தாம் நல்லவர்கள் நிறைந்திருக்கிருர்கள்என்று என்று ஆகிவிடும் ! ஏனென்றல், அந்த இடங்களில் தான் பெருத்த அளவில் மழை பெய்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 100 அங்குலத்திற்கும் அதிகமாக மழை பெய்கிறது! இதில் மூன்றில் ஒரு பங்கு தான் வெப்பமும் தட்பமும் மீதமாக இருக்கும். சம நிலை மண்டலங்களில் பெய்கிறது. இன்னும் பூமியின் வட தென் கோடி மண்டலங்களில் பெய்யும் மழையோ எட்டில் ஒரு பங்கு கூட இருப்பதில்லை ! உலகத்திலேயே மிகுதியான மழை—ஓர் ஆண்டில் 805 அங்குலம் ஆசாமில் பெய்திருக்கிறது. அதே போல் உலகத்திலே

மிகவும் குறைவான மழை—அங்குலத்தில் நூற்றில் மூன்று 3/100 ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையில் உள்ள வால்பிஷ் விரிகுடாரிவில் பெய்தது !

**கந்தையா.**—அதனாலே, நல்லவர்களுக்கும் மழைக்கும் தொடர்பு சொல்லக் கூடாது என்கிறாய் !

**பழனி.**—ஆம் தாத்தா ! நம் ஊரில் மழை பெய்யவில்லை! என்பதற்காக நம் ஊரில் உள்ள நல்லவர்கள் எல்லோரையும் பொல்லாதவர்கள் ஆக்கிவிடக் கூடாது.

### கோள்களும் மழையும்

**கந்தையா.**—அது போகட்டும் தம்பி ; நல்லவர்களுக் காக இந்த வானம் பெய்ய வேண்டாம். இந்தப் பஞ்சாங்கத்திலே "மழைத் தேதி" என்று போன வாரம் நாலு நாட்கள் இருந்தனவே, அப்பொழு தாவது பெய்திருக்கக்கூடாதா ?

**பழனி.**—தாத்தா ! அதோ அந்த மேகத்தைப் பாருங்கள் இன்னும் ஐந்து நிமிடம் கழித்து அது எப்படி இருக்கும் என்று உங்களால் சொல்லமுடியுமா ?

**கந்தையா.**—அது எப்படி முடியும் ? அது தான் பார்த் துக் கொண்டிருக்கும் போதே உருமாறிக் கொண்டே போகிறதே ! முன்னாலே கொக்கு மாதிரி இருந்தது இப்பொழுது வாத்து மாதிரி ஆகிவிட்டது ; இன்னும் கொஞ்சம் நேரம் போனால் பஞ்சு பஞ்சாகப் பிரிந்து பறந்து போய்விடும் !

**பழனி .**—மழையைத் தரப் போவது இம்மாதிரி மாறிக் கொண்டிருக்கும் மேகம்தான். இந்த மேகம் எப் பொழுது எப்படி மாறி மழையைத் தரப் போகிறது என்று ஆறு மாதத்திற்கு முன்பு நீங்கள் வாங்கிய பஞ்சாங்கத்தால் சொல்ல முடியும் என்று நம்பு கிறீர்களா தாத்தா ?

**கந்தையா.**— நீ சொல்கிறதும் சரியாகத்தான் படுகிறது. அப்பொழுது, எதை வைத்துக் கொண்டுதான் பஞ் சாங்கத்தில் "மழைத் தேதி" போடுகிறார்கள் ?

**பழனி.**—அப்படிக் கேளுங்கள் தாத்தா ! சோதிடம் என் றால் தான் உங்களுக்கு என்ன என்று தெரியுமே ! அந்தச் சோதிட நம்பிக்கையில் தான் "மழைத் தேதிகள்" என்று சில நாட்களைப் பஞ்சாங்கத்தில் குறிப்பிடுகிறார்கள்.

**கந்தையா.**—நீ சோதிடமும் தப்பு என்கிறாயா ? என் தம்பி ! இன்னும் ஐம்பது வருடம் கழித்து எந்த நேரத்தில் எந்த இடத்தில் எந்தக்கோள் இருக்கும் என்று இப்பொழுதே கணக்கிட்டுச் சொல்லும் பெரிய வர்களை நான் பார்த்திருக்கிறேனே ?

**பழனி.**—தாத்தா ! தாத்தா !! கோபித்துக் கொள்ளா தீர்கள் ; அந்தப் பெரியவர்களை நான் குறை சொல்ல வில்லை. கோள்களின் நிலையை முன் கூட்டிக் கணக் கிட்டுக் கூறும் கலை வானநூல் கலையாகும் ; அது ஒரு சிறந்த கலை ; அறிவியலை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது. ஆனால், இன்னின்ன கோள்கள் இன்னின்ன இடத்தில் இருக்கும் போது மழை பெய்யும் அல்லது பெய்யாது என்று சொல்வது தான் சோதிடம் ! கோள்கள் வெவ்வேறு காலங் களில் வெவ்வேறு இடங்களில் இருப்பது உண்மை ; ஆனால், அவற்றின் இயக்கம் மழைக்குக் காரணம் என்று கொள்வது வெறும் நம்பிக்கை !

**கந்தையா.**—ஏன் அப்படிச் சொல்கிறாய் ?

**பழனி.**—கோள்களின் நிலையை முன் கூட்டியே கணிப்பது போன்று மழை பெய்வதை அவ்வாறு நடை முறை யில் சொல்ல முடியாததே கோள்களுடன் மழையை முடி போடுவது பொருத்தமற்றது என்பதை விளக்கும்

### விண்மீனும் மழையும்

**கந்தையா.**—ஏன் தம்பி ! இந்த வானத்துமீன்கள் இருக் கின்றனவே—அவைதாம் தம்பி, நட்சத்திரங்கள்—அவைகளின் பெயரைக் கூட மழையோடு தொடர்புப் படுத்திப் பேசுகிறார்களே ?

**பழனி.**—அப்படிப் பேசுவதும் தவறுதான் தாத்தா! வானத்தில் விண்மீன்கள் நகர்வதில்லை ; நகர்வதாகத் தோன்றுவதெல்லாம் நம் பூமியின் அசைவால் ஏற்படும் கண்மயக்கே ஆகும் ! நாள் தோறும் நம் பூமி சுழன்று கொண்டே இருக்கிறது. எனவே ஒவ்வொரு விண்மீனும் பூமியின் ஏதாவது ஒரு பகுதிக்கு மேல் ஒளி வீசிக் கொண்டு தான் இருக்கிறது. சில சில விண் மீன்கள் சில பருவங்களில் மட்டுமே நமக்குத் தோன்றுவது உண்மை யானாலும், அவற் றிற்கும் நம் பருவகாலங்களுக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. அந்த விண்மீன்கள் ஒளி குன்றி அணைந்து இருண்டு விட்டால் கூடப் பருவகாலங்கள் யாவும் இப்பொழுது போலவே தான் வந்துபோய்க் கொண்டிருக்கும் !

### வேண்டுதலையும் மழையும்

**கந்தையா.**—ஏன் தம்பி ? நாம் எல்லோரும் சேர்ந்து வேண்டிக் கொண்டால் மழை பெய்யாதா ?

**பழனி.**—தாத்தா ! நல்லது நடக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளும் போது மனத்திற்கு ஆறுத லும் இன்பமும் ஏற்படுவது உண்மைதான். இருந் தாலும் . . . .

**கந்தையா.**—என்ன தம்பி ! இருந்தாலும் என்று சந் தேகப்படுகிறாய் ?

**பழனி.**—தாத்தா ! இந்த ஊரில் இருப்பவர்கள் எல் லோருக்கும் சேர்ந்து நாளை இரவு முழுமதி ஒளி வீச வேண்டும் என இன்று வேண்டிக் கொண்டால் நாளைக்கு அப்படியே நடந்து விடுமா ?

கந்தையா.—நன்ருகப் பேசுகிருயே! நாளேக்குத் தான் அமாவாசை என்று நமக்குத் தெரியுமே! வேண்டிக் கொள்வதால் மட்டும் எப்படி அது முழுமதி நாளாகி விடும்?

பழனி.—சரியாகச் சொல்லிவிட்டீர்கள் தாத்தா! உலகத்தின் ஒரு மூலேயில் இருப்பவர்கள் வேண்டிக் கொள்வதற்காக வானத்தில் இயங்கும் மேகங்கள் அவர்களுக்கு ஏற்ற அளவில் மாற்ற மடைந்து மழையைக் கொட்ட வேண்டும் என்று எதிர் பார்ப்பதும், சந்திரன் தன் இயக்கத்தை மாற்றிக் கொண்டு குறிப்பிட்ட ஒரு நாளில் முழுமதியாக காட்சி தரும் என்று வேண்டிக் கொள்வது மாதிரிதான்!

கந்தையா.—தம்பி! நீ சொல்வதும் பொருத்தமாகத் தான் தோன்றுகிறது. இயல்பாக இருப்பது தானே இயற்கை. நம் விருப்பப்படி எப்படி அது மாறி விடப்போகிறது?

பழனி.—ஆம். தாத்தா! சந்திரன், சூரியன், கோள்கள் ஆகிய பொருள்களின் இயக்கத்தை இன்று மனிதன் நன்ருக அறிந்து கொண்டிருக்கிருன். இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் கூட அவை எப்படி இருக்கும் என்று விளக்கி எழுதி வைத்திருக்கின்ருன். அதனுல் அவற்றில் மாற்றம் விரும்பி யாரும் வேண்டிக் கொள்வதில்லே! அது போன்று மேகங்களின் இயக்கம் பற்றி முன் கூட்டிய அறிந்து கொள்ளக் கூடிய நிலே வந்தால் மழையை விரும்பி யாரும் வேண்டுதலேயில் இறங்க மாட்டார்கள்! மேல் நாட்டிலே மழைக்காக வேண்டிக் கொள்ளும்படி ஒரு பாதிரியாரைக் கேட்டார்கள்.

கந்தையா.—அதற்கு அவர் என்ன செய்தார்?

பழனி.—ஒன்றும் செய்யவில்லே! "நண்பர்களே! காற்று மேற்குத் திசையிலிருந்து வீசுவதைப்பார்க்கின்றீர்கள்; இப்பொழுது வேண்டிக்கொள்வதால் என்ன பயன் கிட்டும்?" என்று திருப்பிக் கேட்டார்!

## செயற்கை மழை.!

கந்தையா.—தம்பி, பழனி! இன்னென்று கேட்கவேண்டுமென்று தோன்றுகிறது. விஞ்ஞானிகள் கூடிக் கொண்டு செயற்கை முறையிலே மழை பெய்யும்படி செய்கிருர்கள் என்று செய்தித் தாளில் பலரும் படித்ததைக் கேட்டுக்கிறேனே? அப்படியும் நடக்கிறதா தம்பி?

கந்தையா.—நல்ல கேள்வி கேட்டீர்கள் தாத்தா! செயற்கை மழை பற்றியும் பலரும் தவருகப் புரிந்து கொண்டிருக்கிருர்கள்! மழைக்கு வேண்டிய சூழ்நிலே இயற்கையிலேயே இருக்கும்போது விஞ்ஞானிகள் பனிக்கட்டித் தூள் போன்ற சில பொருள்களே மேகத்தில் எடுத்துச் சென்று வீசி மழை பெய்வதைத் தூண்டுகிருர்கள். அவ்வளவுதான் அவர்கள் செய்வது! மழைக்கு வரவேண்டிய அறிகுறியே இல்லாத இடத்தில் காற்றில் உள்ள ஈரத்தை மழைத் துளிகளாக மாற்றுவது என்பது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒரு செயற்கை! அத்தகைய முயற்சியில் ஈடுபடுவதும் பொருளேப் பிடித்த கேடு என்று அறிஞர்கள் கூறியிருக்கின்றனர்! பெரிய வெடிகளே வெடித்து வானத்தில் மாற்றம் செய்ய முயன்ற ஒரு சோதனையை உடன் இருந்து பார்த்த அறிஞர் ஒருவர், விண்ணிலே வெடித்த அவ்வெடிகள் ஓர் அறையில் கிழித்த தீக்குச்சியை விட அதிக மாற்றம் எதையும் உண்டாக்கி யிருக்க முடியாது என்று குறிப்பிட்டார்!

## அடிப்படைக்காரணம்.

கந்தையா.—அப்பொழுது மழை பெய்வதற்கும் பெய்யாமல் இருப்பதற்கும் என்ன தான் காரணம் என்று நீ சொல்கிருய்?

பழனி.—அப்படிக் கேளுங்கள் தாத்தா! மழைக்குமட்டுமல்ல; மழை, பனி, புயல். . . . எல்லாவற்றிற்கும் மூன்று அடிப்படைகள் தாம் காரணமாக இருக்கின்றன.

கந்தையா.—மூன்று? அவை என்ன வென்று கொஞ்சம் சொல்லு தம்பி!

பழனி.—அவை ஒன்றும் புதுமையானவை அல்ல! நீங்கள் அறிந்தவை தாம்; அவைகள்

வெப்பம் 1

காற்று 2

நீர் 3

கந்தையா.—என்ன! மிகவும் எளிமையாகச் சொல்லி விட்டாயே கொஞ்சம் விவரமாகத்தான் சொல்லேன் தம்பி!

பழனி.—நீர் காற்றிலே நிறைந்திருக்கிறது. காற்று வெப்பத்தால் ஒரு இடத்திலிருந்து மற்ருெரு இடத்திற்கு நகருகிறது. எனவே இவற்றின் கூட்டுச் செயலால் நமக்கு மழை நாள், மப்பு நாள், வெய்யில் நாள், பனி நாள், புயல் வீசும் நாள் போன்ற பல வகை காலநிலே ஏற்படுகின்றன.

கந்தையா.—அப்படியா? அவை எப்படி உண்டாகின்றன!

பழனி.—தாத்தா! அவை பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமானுல் வெப்பம், காற்று, நீர் ஆகியவை பற்றிக் கொஞ்சம் விவரமாகத்தான்தெரிந்துகொள்ள வேண்டும். முதலில் வெப்பத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன் கேட்கிறீர்களா?

கந்தையா.—ஓ! நன்ருய் கேட்கிறேன்! இவற்றையெல்லாம்தெரிந்து கொள்ளாமல் இவ்வளவு காலம் இருந்து விட்டேனே என்று எனக்கே வெட்கமாய் இருக்கிறது!

பழனி.—இதில் வெட்கப்படுவதற்கு என்ன இருக்கிறது தாத்தா! வாய்ப்பு வரும் போதெல்லாம் புதிய செய்திகளேத் தெரிந்து கொள்ள வேண்டியதுதான். யார் தாம் பிறக்கும் போதே எல்லாவற்றையும் கற்றுக் கொண்டு பிறக்கிருர்கள்?

கந்தையா.—தம்பி! வெறுங்காலோடு இந்தச் சுடுமணலிலே என்னுல் நின்று கொண்டு பேச முடியவில்லே! வா அந்த ஆலமர நிழலில் சென்று அமர்ந்தபடி மெதுவாகப் பேசலாம்!

# கேள்வியும் பதிலும்

**கேள்வி.**—1958-ம் ஆண்டு தமிழ்நாடு "பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் பிரிவு 60 (2)-ல் கண்டுள்ள "பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் யாதொரு அதிகாரி, அல்லது வேலையாள்" என்பதில் பஞ்சாயத்து யூனியனில் உள்ள வளர்ச்சி அதிகாரிகளையும் சேர்த்து தேசிய வளர்ச்சிப் பணித் துறை சிப்பந்திகள், மானேஜர், அக்கவுண்டெண்டுகள், மேல்தர குமஸ்தாக்கள், ஜீப் டிரைவர்கள் ஆகியவர்களையும் உள்ளடக்கியயுள்ளதா? இல்லையா?

**பதில்.**—வளர்ச்சிப் பணித் துறையைச் சேர்ந்த மேற் கண்டவர்கள் அரசாங்கத்தின் அதிகாரிகள்—வேலையாட்கள்; அரசாங்க நிதியிலிருந்து அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய சேவை பஞ்சாயத்து யூனியன்கள் வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. இதனால் அவர்களை "பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின்" அதிகாரிகள்—வேலையாட்கள் என்ற வகையில் சேர்க்கப்படுவதற்கு இல்லை. ஆகவே, 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 60 (2)-வது பிரிவின்கீழும், 1961-ம் ஆண்டு மே மாதம் 10-ம் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத் துறை அரசாங்க ஆணை எண் 1335-ல் திருத்தப்பட்ட 1960-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் தேயிட்ட தல நிர்வாகத் துறை ஆணை எண் 76-லும் கண்டுள்ள வழி வகைகள், வளர்ச்சிப் பணித்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடையாது என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது. மேற்கண்டதற்கு ஒரே விதிவிலக்கு, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்தான். ஏன் என்றால் 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 60 (2)-வது பிரிவு, கமிஷனரை திட்டவட்டமாக உள்ளடக்கியுள்ளது.

2. பஞ்சாயத்து, யூனியன்கள் அமைக்கப்படுவதற்கு முன்னால் (கமிஷனரைத் தவிர) வளர்ச்சிப் பணித் துறையின் அங்கத்தினர்களை மாற்றுவதற்கோ, நியமனம் செய்வதற்கோ தகுதி பெற்றிருந்த அதிகாரிகளே, பஞ்சாயத்து யூனியன்கள் அகைமக்கப்பட்ட பிறகும், தொடர்ந்து இந்த அதிகாரங்களைச் செலுத்தி வருவார்கள். இந்த விஷயங்களில் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தினிடம் எந்த விதமான கலந்தாலோசிப்பும் தேவையில்லை. அது மட்டுமல்லாமல், 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 60 (2)-வது பிரிவின் கீழ் அனுமதிக்கப் பட்ட மாதிரி, இவர்களை நகராட்சி மன்ற பணித் துறைக்கு மாற்றுவதும் கூடாது.

(கிராம நல தல, நிர்வாகத் துறையின் 19—12—1961 தேதியிட்ட அரசாங்க ஆணை எண்3327-ன் சாரம்.)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

[கிராமக்கட்டு வேலைகள் மானியத்தைப் பற்றிய விளக்கங்களை அளிக்கும் கேள்வி பதில்கள் சென்ற இரண்டு இதழ்களிலும் தொடர்ந்து வெளியிடப்பட்டு வந்தன. அதனுடைய தொடர்ச்சியாக கீழ்க்கண்ட மூன்று கேள்வி பதில்களும் இந்த இதழில் இடம் பெறுகின்றன. இத்துடன் இத்தொடர் முடிவுபெறும்.

**கேள்வி 14 : கிராமவேலைகள் மானியத்தின் கீழ் செய்யப் படுகிற வேலைகளைச் செயல்படுத்தவேண்டி ஒப்படைப்பதில் உள்ள நடைமுறை என்ன?**

**பதில் :** வேலைகள் எந்தப் பிரதேசத்தில் உள்ளனவோ, அவை, சாதாரணமாக, அந்தந்தப் பஞ்சாயத்துக்களிடம், குறிப்பிடப்பட்டுள்ள வீத அடிப்படையில், ஒப்படைக்கப்படவேண்டும். அந்த முறையில் அவைகளை பஞ்சாயத்து ஏற்றுக்கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். ஏதாவது ஒரு காரணத்தினால், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து வேலையை செயல்படுத்த ஏற்றுக்கொள்ள முடியாமல் போய் விட்டால், அந்த வேலையை, பஞ்சாயத்து நியமிக்கின்ற ஒரு 'நலம் பெறுகிறவர்' (Benificiory) வசம், அப்படி அது ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு, ஒப்படைக்கலாம். வேலையைத் தானே எடுத்துக் கொண்டு பஞ்சாயத்து செய்ய இயலாமல் போனாலும், ஒரு நலம்பெறுகிறவரை நியமிக்க முடியாமல் போனாலும், அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், அந்த வேலையானது, ஒப்பந்தப் புள்ளிகள் (Tenders) வரவைழக்கப் பட்டு, காண்டிராக்டில் விடப்படலாம்; அல்லது, நியமனம் செய்கின்ற முறையைக் கையாண்டு, ஒரு காண்டிராக்டர் வசம், விதி முறைகளின்படி ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்காமலேயே, கொடுக்கப்படலாம்.

**கேள்வி 15 : இந்த வேலைகளைச் செயல்படுத்த பஞ்சாயத்துகளுக்கு ஏதாவது நிதி வசதி அளிக்கப் படுமா?**

**பதில் :** அளிக்கப்படும். சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துக்களுக்கு ஒரு முன்பண மானியத்தை அநுமதிக்கலாம்.

**கேள்வி 16 : முன்பே 'ஒப்படைப்பு' நடந்துள்ள பிரதேசங்களில், கிராம வேலைகள் மானியத்தின் கீழ் செய்யப்படுகிற வேலைகளைச் செயல்படுத்த அரசாங்கத்தின் ஒப்புதலான அனுமதி தேவையா?**

**பதில் :** தேவையில்லை. பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பது சம்பந்தமாக உள்ள வரவு செலவுத் திட்ட அறிவிப்புகளில், மூன்றாவது திட்டக் காலத்தில் ஒரு பஞ்சாயத்து யூனியன் எவ்வளவு பெற தகுதியுடையது என்று கிராமக் கட்டு வேலைகள் மானிய நிதி வசதி செய்யப்பட்டுள்ளதோ, அதில், ஐந்தில் ஒரு பங்கினை, கடனாக எடுத்துக்கொள்ளும்படி பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஆலோசனை சொல்லப் பட்டுள்ளது. வேலைகளை எடுத்துச் செயலாற்ற இதற்கு மேல், மேலும் அரசாங்க அனுமதி ஒன்றும் அவசியமில்லை.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

19. பஞ்சாயத்து யூனியன்களின் கடமைகளாவன :—

(i) குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து தவருமல் அறிவுரை வழங்குவதற்கு ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏற்பாடுகள் செய்தல் ;

(ii) அந்த வட்டாரத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் எந்த அளவுக்கு முன்னேறியுள்ளது என்பது குறித்து முறைப்படிப் பரிசிலனை செய்தல் ; எல்லாப் பஞ்சாயத்துக்களும் இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அவைகளுக்கு உதவியும், ஊக்கமும், ஒத்துழைப்பும் நல்குதல்.

20. ஐந்தாண்டுகளுக்கு முன்னர், அரசினர் இத் திட்டம் பற்றி முதல் நடவடிக்கை எடுத்துக்கொண்டபோது, ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மக்கள் தலைவர்கள் ஒரு மகாநாட்டில் ஒன்று கூடி, இந்த முறையில் தங்கள் கடமைகளைப் பற்றித் தீவிரமாக ஆராய்வார்கள் என்று நாம் நினைத்திருக்கவே முடியாது. இப்போது அவர்கள் அவ்வாறு ஒன்று கூடியதே இங்கே சொல்லியுள்ள மூன்று உண்மைகளைவிட நமக்கு மிகவும் நம்பிக்கை ஊட்டுகிறது.

மேற்சொன்ன உண்மைகள் என்ன நம்பிக்கையூட்டுகின்றன ?

முதலாவதாக, குடும்பக் கட்டுப்பாடு குறித்துத் துவங்கிற முன்னேடித் திட்டத்தை நாம் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளோம்.

இரண்டாவதாக, மக்கட் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் அடிப்படைப் பிரசினையை, தமிழ் நாடு பூராவிலும் செயலாற்றும் பணியை நல்ல முறையில் துவங்கிவிட்டோம்.

மூன்ருவதாக, தமிழ்நாடு அடுத்த பத்து ஆண்டுக் காலத்தில் இப் பிரச்சினையை, ஜப்பானைப் போலவே நிச்சயம் தீர்க்க முடியும்.

---

## எழுத்தாளர்களுக்கு

கிராம நலந்தில் வெளியிட ஏரானமான கவிதைகளை எழுத்தாள நண்பர்கள் அனுப்பிக்கொண்டே இருக்கிருர்கள். கவிதைகளை அனுப்பிவைப்பதைக் குறைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேம், கட்டுரைகள் வரவேற்கப் படுகின்றன. "கிராம நலத்தில்" இரண்டு பக்கங்களுக்கு மேல் போகாத வகையில் கட்டுரைகள் இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

ஆசிரியர்,
" கிராமநலம் "

---

## பிழை திருத்தம்

1961-ம் ஆண்டு நவம்பர் மாத 'கிராம நல' இதழில் பஞ்சாயத்து கெஜெட்டில் பக்கம் X-ல் அரசாங்க ஆணை எண் 2339-ன் தமிழ் மொழிபெயர்ப்பில் 'ஆண்டொன்றுக்கு' என்பதை "மாதமொன்றுக்கு" என்று திருத்திப் படிக்கவும்.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் கைக்கொள்ளச் செய்தார். 4,650 மணங்கு கோதுமையை சூரிய முறையில் பதப்படுத்தும் படி செய்தார். 985 ஏக்கர்களில் பயிர் பாதுகாப்பு முறையை அனுஷ்டிக்கும்படிச் செய்தார்.

இன்னும், கால் நடை அபிவிருத்தியில் நோஞ்சான் மாடுகளை விலக்கி நல்ல இனக் காளைகளை வளர்க்கும்படி செய்தார். 5,700 நல்ல இனக் கோழி முட்டைகளை வினியோகம் செய்தார்.

அவருடைய 11 கிராமங்களில் 10 கிராமங்களுக்கு சேவா கூட்டுறவு சங்கங்களை அமைத்து விவசாயிகளுக்கு கடன் வசதிகளைப் பெருக்கினர்.

ஸ்ரீ மந்தரின் இரண்டு முக்கிய கொள்கைகள், நேரந் தவருமையும், மனப்பூர்வமான சேவையும் என்று சொல்லியிருக்கிருர்.

எதையும் அறைகுறைவாக அவர் செய்ததில்லை. எந்த வேலையைக் கொடுத்தாலும் "செய்வனத் திருந்தச் செய்" என்ற முறையில் கடமையை ஆற்றியிருக்கிருர்.

" மெய் வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்ளஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணுயினர் "

என்ற கருத்தமைந்த பாடலுக்கு இலக்காக அமைந்திருக்கவில்லையா இந்த கிராம சேவக் !

(திருச்சி வாஞெலியில் 11—12—61ல் ஒலி பரப்பப்பட்டது.)

---

## கிராம அதிகாரிகளுக்கும், பஞ்சாயத்துப் பொறுப்பாளர்களுக்கும் . . . .

தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி முதல் மாநிலம் பூராவும் அமுலுக்கு வந்து விட்டது. பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 120, 121, 122 பிரிவுகளின் கீழ், எல்லாப் பஞ்சாயத்துக்களும் தங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட பிரதேசங்களில் வீட்டு வரி, தொழில் வரி, வாகன வரி ஆகிய வரிகளை கட்டாயமாக விதித்து வசூல் செய்ய வேண்டும். மேலும், சட்டத்தின் 132-வது பிரிவின் கீழ், கிராமப் பஞ்சாயத்துக்கள், அவைகள் வசூலிக்கின்ற வீட்டு வரித் தொகைக்கு சமமான ஒரு தொகையை, வீட்டு வரி ஈட்டு மானியமாகப் பெறலாம். ஆனல், அநேகப் பஞ்சாயத்துக்கள், இந்த வரிகளை விதிப்பதில்லை என்று தெரிகிறது. விஷயங்கள் தெரியாததினுலும், இந்த மாதிரி வரி விதிப்பதை பஞ்சாயத்துக்கள் செய்யாமல் விட்டுப் போய் இருக்கலாம். சட்ட பூர்வமாக பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைக்கப் பட்டுள்ள அதிகாரங்களை பஞ்சாயத்துக்கள் தவருமல் உபயோகிக்கவேண்டும். இந்த வரி விதிப்புகள் சட்ட பூர்வமானவை. ஆகவே எல்லாப் பஞ்சாயத்துக்களும் தங்களுடைய அதிகாரங்களைப் புரிந்து கொண்டு, இந்த விஷயங்களில் அக்கறை எடுத்துக்கொண்டு செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுறது.

கிராம நலம்- பகுதி-2. பஞ்சாயத்து-அரசினர் இதழ்

GRAMA NALAM PART II PANCHAYAT GAZETTE

## 'பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம்'—பஞ்சாயத்துக்களில் வானொலிப் பெட்டிகளை அமைத்தல், பராமரித்தல்—வானொலிப் பெட்டிகள் வாங்குவதற்காகப் பஞ்சாயத்துக்களுக்குப் பண உதவி அளித்தல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன

**[Panchayat Radio Maintenance Organisation--Installation and Maintenance of radio receiver sets in the Panchayats—Payment of subsidy to the Panchayats for the purchase of radio receiver sets—Orders issued.]**

[G.O. Ms. No. 1. R.D & L.A., dated 1—1—62.]

பஞ்சாயத்துக்களில் வானொலிப் பெட்டிகளை அமைத்துப் பராமரிக்கின்ற வேலையையும், மூன்றாவது திட்டக் கால முடிவுக்குள்ளாக மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு வானொலிப் பெட்டி இருக்க வேண்டும் என்ற வேலையைக் கவனிப்பதற்காகவும், 'பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு ஸ்தாபனம்' ஒன்றினை அமைத்து 1961-ம் ஆண்டு ஆகஸ்ட 28-ம் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 2337-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பேட்டரிகளையும, அதற்கு வேண்டிய சாமான்களையும், மாற்றி அமைப்பதற்கான செலவையும், அத்துடன், பேட்டரி செட்டாக இருந்தாலும் சரி, மெயின் செட்டாக இருந்தாலும் சரி, அதைச் சரி பார்த்து வைத்துக் கொள்வதற்கான செலவு என்று செட் ஒன்றுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ. 20 என்ற செலவுத் தொகையையும் பஞ்சாயத்துக்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், குறிப்பிட்ட சில ஸ்டேஷனகளை மட்டும்தான், ஒரு நாளைக்கு இரண்டு மணிநேரம்தான் கேட்கலாம் என்று, இப்பொழுதுள்ள கட்டுப்பாடானது 1961-ம் ஆண்டு செப்டெம்பர் 1-ம் தேதியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்றும், மாநில ஒலி பரப்பு இலாகா மூலம் பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்படும் செட்டுகள், சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்பெறும் செட்டுகளைப் போல் இருக்க வேண்டுமென்றும், அதே உத்தரவில் கண்டுள்ளது. பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு ஸ்தாபனம் அமைக்கப்படுவதற்கு முன்னால், சமூக ரேடியோ ரிஸீவர் செட்டுகள் பஞ்சாயத்துக்களில் அமைப்பதற்காக, மாநில ஒலிபரப்பு இலாகாவினால் இந்திய அரசாங்கத்தினிடமிருந்து பெறப்பட்டன. இப்படி இந்திய அரசாங்கத்தினிடமிருந்து பெறப்பட்ட சமூக ரேடியோ ரிசீவர் செட்டுகள், அகில இந்திய ரேடியோவில் சில குறிப்பிட்ட நிலையங்களிலிருந்து மட்டுமே நிகழ்ச்சிகளைக் கேட்கும் நிலையில் இருந்து வந்தன. மேலே சொல்லப்பட்டுள்ளபடி, கட்டுப்பாடு எடுபட்டுவிட்டபடியால், இந்திய அரசாங்கத்தினிடமிருந்து பெறப்படும் வானொலிப் பெட்டிகள் பஞ்சாயத்துக்களில் பொருத்துவதற்குத் தகுதியுள்ளதாக இரா. பஞ்சாயத்துக்களுக்கு வானொலி ரிசீவர் செட்டுகள் எப்படி வழங்கப்பட வேண்டும், ரேடியோ ரிசீவர் செட்டுகளை பஞ்சாயத்துக்களில் பொருத்தி அமைப்பதற்காக பஞ்சாயத்துக்களுக்கு பண உதவி அளிக்கின்ற முறை பற்றியும் அரசாங்கம் பரிசீலனை செய்தது. மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ரேடியோ ரிசீவர் செட்டு வைக்க வேண்டுமெனில், சுமார் 8,000 புது ரேடியோ செட்டுகள் அமைக்கப்பட வேண்டுமென்று மதிப்பிடப்பட்டு இருக்கிறது. 1962-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதிக்கு முன்னால் பஞ்சாயத்துக்களில் 8,000 ரேடியோ ரிசீவர் செட்டுகளை அமைக்கப்பட வேண்டும் என்றும், 1962-ம் ஆண்டு மார்ச்சு 31-ம் தேதி முடிவுக்குள், 500 ரேடியோ செட்டுகள் அமைக்கப்பட்டாக வேண்டும் என்ற இலக்கினை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கம் உத்தரவிடுகிறது.

2. இந்திய அரசாங்கத்தின் மூலமாகப் பெறப்படுகின்ற வானொலிப் பெட்டிகள், பஞ்சாயத்துக்களில் அமைப்பதற்கு பொருத்தமாக இல்லாதபடியால், அரசாங்கம் அனுமதித்துள்ள மாடல்களிலிருந்தும், வகைகளிலிருந்தும், பஞ்சாயத்துக்கள் தங்களுக்குப் பிடித்தமான வானொலிப் பெட்டியைவாங்கிக் கொள்ள பஞ்சாயத்துக்களுக்கு அரசாங்கம் அனுமதி அளிக்கிறது. இப்படி ரேடியோ செட்டுகளை பஞ்சாயத்துக்கள் வாங்குவதில், அரசாங்கம் பஞ்சாயத்துக்களுக்கு பண உதவி அளிக்கும். இதுபற்றி எப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றிய விவரங்கள் இந்த உத்தரவின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

3. ரேடியோ செட்டுகளை, பஞ்சாயத்துக்கள் வாங்குவதில் பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கப்படும் பண உதவி என்பது சுமார் 10 லட்சம் ரூபாய்க்கு என்றிருக்கும் என்று மதிப் பிடப்படுகிறது. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ்' "சமூகக் கல்வி" என்ற தலைப்பின்கீழ், ரேடியோ செட்டுகள் வாங்குவதற்கு மானியத் தொகை வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. சமூகக் கல்வித் திட்டத்திற்காக பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ், பஞ்சாயத்து யூனியனில் உள்ள ஜனத் தொகையில் தலைக்கு 10 நயா பைசா என்ற வீதத்தில் இப்பொழுது வழி வகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையானது, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனிய னிலும் ஓராண்டுக்கு கிட்டத்தட்ட ரூ. 7,000 என்று வரும். சமூகக் கல்வித் திட்டத்திற்காக கிடைக்கின்ற நிதிகள் பஞ்சாயத்துக்களுக்கு ரேடியோ ரிசீவர்கள் வாங்குவதற் காக பண உதவி வழங்குவதற்காக தொடர்ந்து பயன் படுத்தப்படலாம். பஞ்சாயத்துக்களில் ரேடியோ ரிசீவர் செட்டுகளை அமைப்பதற்குப் பஞ்சாயத்துக்களுக்கு பண உதவி வழங்க ரூ. 2,500 என்ற தொகையை ஒதுக்கி வைக்குமாறு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கப்பட வேண்டிய பண உதவியில் பாக்கியுள்ள நிதிக்கு வழி வகை செய்வதற்கான உத்தரவுகள் தனியாக பிறப்பிக்கப்படும்.

(கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 1)

---

# இணைப்பு I

## பஞ்சாயத்துக்கள் ரேடியோ ரிசீவர் செட்டுகளை வாங்குவதற்கான முறைகள்

பஞ்சாயத்துக்களில் பொருத்தமாக அமைக்கப்படுவதற் கான ரேடியோ ரிசீவர்களின் மாதிரிகள், வகைகள்பற்றி அரசாங்கம் முடிவு செய்யும். மாநிலத்தில், அருகில் உள்ள ரயில் நிலையத்தில் அவைகளை ஒப்படைப் பதற்கான விலை விவரங்களை வியாபாரிகளிடமிருந்து அரசாங்கம் கேட்கும்.

2. வியாபாரிகளிடமிருந்து இப்படிக் கிடைக்கின்ற விலை விவரங்களை இதற்கென்று அரசாங்கத்தினால் அமைக்கப் பட்டுள்ள விசேஷக் குழு ஒன்று பரிசீலனை செய்து பார்க்கும். குழு அவைகளைப் பரிசீலனை செய்து பார்த்த பிறகு, எப்படி நன்ருக வேலை செடன்றனவா என்று மாடல் செட்டுகளைப் பரிசீலனை செய்து பார்த்த பிறகு, பஞ்சாயத்துக்களில் அமைப்பதற்கான பொருத்தமான ரேடியோ செட்டு வகைகளைத் தேர்ந்தெடுத்து, அவை களின் விலைகளுக்கும் ஒப்புதல் அளிக்கும். இப்படி பஞ்சா யத்துக்களில் அமைப்பதற்கான ரேடியோ செட்டு மாடல் வகைகளும், குழுவினால் ஒத்துக்கொள்ளப்பட்ட விலை விவரங்களும், எல்லாக் கலெக்டர்களுக்கும், ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகளுக்கும், பஞ்சாயத்து யூனியன் கமி ஷனர்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் தெரியப்படுத்தப் படும். அவைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலிலிருந்து, அங்கீகரிக்கப்பட்டுள்ள மாடல் வகைகளிலிருந்து எந்த மாடலை வேண்டுமானாலும், பஞ்சாயத்துக்கள் தங்களுடைய கிராமங்களில் அமைத்துக்கொள்வதற்காகத் தேர்ந்தெடுத்து கொள்ளலாம். அப்படித் தேர்ந்தெடுத்துள்ள செட்டை அருகில் உள்ள வியாபாரியிடமிருந்து, நேரடியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள விலைக்கு, பஞ்சாயத்து வாங்கிக் கொள்ளலாம். பஞ்சாயத்துக்கள் பெற்றுக்கொண்ட செட்டின் விலைக்காக, வியாபாரிகள் பஞ்சாயத்துக்களுக்கு ஒரு ஸ்டாம்பு இட்ட ரசிதினை அளிப்பார்கள்.

3. அதன் பிறகு, ரேடியோ செட்டு வாங்கினதற்காக மாநில அரசாங்கத்தினிடமிருந்து, இதற்கான பண உத வியைக் கேட்டுப் பெற பஞ்சாயத்துக்களுக்கு உரிமை உண்டு. அங்கீகரிக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து பஞ்சாயத்து எந்த வகையான செட்டுகளைத் தேர்ந்தெடுத்திருந்தாலும், அங்கீ கரிக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள விலைக்குறைவான செட்டின் விலையில், ஒரு பாதி பஞ்சாயத்துக்களுக்கு பண உதவியாக அனுமதிக்கப்படும். பஞ்சாயத்துக்களுக்கு திட்ட வட்டமாக அளிக்கப்படக்கூடிய பண உதவித் தொகை எவ்வளவு என்பதுபற்றிய விவரம், அதற்கென்று நிய மிக்கப்பட்டுள்ள குழுவானது பரிசீலித்து முடிந்த பிறகு, அங்கீகரிக்கப்பட்டுள்ள செட்டுகள் இவை என்ற விவரங்கள் பஞ்சாயத்துக்களுக்கு தெரியப்படுத்தப்படும்பொழுது, அனுப்பப்பெறும். அங்கீகரிக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள செட்டுகளில் இல்லாமல் வேறு ரேடியோ செட்டுகளை வாங்க பஞ்சாயத்து பிரியப்பட்டால், அதற்கான தகவல்களை பிரதம ரேடியோ அதிகாரிக்கு சம்பந்தப்பட்ட பஞ்சா யத்து அனுப்பி வைக்க வேண்டும். அவர் பஞ்சாயத்தின் வேண்டுகோளை, தன்னுடைய சிபாரிசுகளுடன், குழுவிற்கு, அதனுடைய முடிவுக்காக, அனுப்பி வைப்பார். அந்த சிபாரிசுகளைக் கமிட்டி பரிசீலனை செய்து பார்த்து, அமைப் பதற்குப் பொருத்தமானதுதான் என்று கருதினால், அந்த ரேடியோ செட்டையே வாங்குவதற்குத் தன்னுடைய ஒப்புதலை அளிக்கும். அப்படிப்பட்ட சமயங்களில், பஞ்சாயத் துக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள செட்டின் விலைக்கு சமமான தொகையையோ, அல்லது பஞ்சாயத்து வாங்கின செட்டின் விலையில் 50 சத விகிதத்தையோ, இந்த இரண்டில் எது குறைவாக இருக்கிறதோ, அந்தத் தொகை பண உதவி யாக அளிக்கப்படும்.

4. ரேடியோ செட்டுகளை வாங்கின பிறகு, பஞ்சாயத்து, அந்தப் பிரதேசத்தில் ரேடியோவை பொருத்துவதற்காக, சம்பந்தப்பட்ட ரேடியோ சூபர்வைசருக்கு தகவல் தெரிவிக்கும். ரேடியோ செட்டுகளை வாங்கி பணம், செலுத்தப்பட்டதற்கான கொடுக்கப்பட்ட ரசீதினை, ரேடியோ சூபர்வைசரின் எதிர்க் கையெழுத்துடன், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு, பண உதவித் தொகையை அனுமதிப்பதற்காக, பஞ்சாயத்து அனுப்பி வைக்கும். பஞ்சாயத்துக்கள் அனுப்பி வைத்துள்ள அந்த ரசீதுகளை பரிசீலனை செய்து பார்த்த பிறகு, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து பஞ்சாயத்துக்களுக்கு பண உதவித் தொகையை அனுமதிப்பார். அதன் பிறகு அந்தச் செலவை வேலை முடிந்த பிறகு பெறுகின்ற மானியமாக அவர் கோருவார். ஒவ்வொரு மாத முடிவிலும், சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிக்கு, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் பண உதவி அளிக்கப்பட்டதினால் உண்டான செலவு விவரங்கள்பற்றிய தகவல்களையும் அத்துடன், "சமூகக் கல்வி" தலைப்பின்கீழ் உண்டாகிய செலவினங்களை, மாநில அரசாங்கத்தினிடமிருந்து கிடைக்கிற மானியத் தொகை பாக்கியுள்ள வைகளையும் அனுப்பி வைப்பார். ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி மானியத் தொகைகளை "47-எ. சமுதாய அபிவிருத்தி வேலைகள், தேசிய வளர்ச்சிப் பணி, பிரதேச அபிவிருத்தி வேலைகள்—VI—சமூகக் கல்வி—2. மற்ற செலவுகள்—திரும்பத் திரும்ப உண்டாகாதவை" என்ற தலைப்பில் பற்று வைத்துக்கொண்டு, அனுமதிப்பார்.

—o—

## 1958-ஆம் தமிழ்நாடு மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் சட்டம்—மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள்—மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் பொதுக் குழுவினை அமைத்தல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## (Madras District Development Councils Act, 1958-District Development Councils—Formation of a General Committee of the District Development Council-Orders Issued).

### (G.O. Ms. No. 3389 R.D.L.A. dated 27—12—1961.)

அபிவிருத்தி சம்பந்தமான பல்வேறு விஷயங்கள் சம்பந்தமாக அரசாங்கத்திற்கு ஆலோசனை கூற மாவட்ட அளவில் ஆலோசனைக் குழு ஒன்றினை அமைப்பதற்கு 1958–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் சட்டம் வழி வகை செய்கிறது. அதே சட்டத்தின் 8 (1)–வது பிரிவு அப்படி அமைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி மன்றம், அரசாங்கம் வேண்டும் என்று விரும்பினால், கீழ்க்கண்ட விஷயங்களைப் பற்றி கவனிக்க நிலைக் குழுக்கள் அமைக்கலாம் :—

(அ) உணவு, விவசாயம்.

(ஆ) தொழில், தொழிலாளர்.

(இ) பொது வேலைகள்.

(ஈ) கல்வி.

(உ) சுகாதாரம், நலன், (மதுவிலக்கையும் சேர்த்து.)

2. 16-6-61 தேதியிட்ட கிராமநல—தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 1694–ல் மேற்குறிப்பிட்ட விஷயங்கள் பற்றி ஐந்து நிலைக் குழுக்களை ஒவ்வொரு மாவட்டஅபிவிருத்தி மன்றமும் அமைக்க வேண்டும் என்று அரசாங்கம் விரும்பியது. ஒவ்வொரு நிலைக் குழுவும் என்னென்ன விஷயங்களைக் கவனிக்க வேண்டும் என்றும், அந்தக் குழுக்களுக்கு உறுப்பினர்களைப் பொறுக்குகின்ற முறை பற்றியும் அதே ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. மேற்சொன்ன அரசாங்க ஆணையில் கண்டுள்ளபடி, எல்லா மாவட்ட அபிவிருத்தி மன்றங்களிலும் நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தங்கள் சம்பந்தமான எல்லா அபிவிருத்தி வேலைகள் விஷயத்திலும் இந்தக் குழுக்கள் மாவட்ட அபிவிருத்தி மன்றங்களுக்கு ஆலோசனை சொல்லிவருகின்றன.

4. திட்டம், அபிவிருத்தி சம்பந்தமான எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியுள்ள சில வேலைத் திட்டங்கள் உள்ளன. அவைகளை எந்த நிலைக் குழுவுக்கும் குறிப்பிட்டு ஒதுக்க முடியாது என்று இப்பொழுது கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறு சேமிப்பு, திட்டம், பிரசாரம்—விளம்பரம் போன்றவை இதன் பால் அடங்கும். இந்த அம்சங்களைப் பற்றி கவனிக்க, அதிகார பூர்வமில்லாத முறையில் ஒரு பொதுக் குழுவானது ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலும் அமைக்கப்பட வேண்டுமென்று யோசனை சொல்லப்பட்டுள்ளது.

5. அரசாங்கம் இந்த யோசனையைப் பரிசீலனை செய்து பார்த்து அதை ஒப்புக்கொள்ளுகிறது. 1958–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் சட்டத்தின் 8–வது பிரிவின் துணைப்பிரிவு 1 (பி)யின் கீழ், ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்தி மன்றமும் ஒரு பொதுக்குழுவினை அமைக்க வேண்டுமென்றும், அதற்கு மாவட்டக் கலெக்டர் தலைவராகவும், ஐந்து நிலைக் குழுக்களின் தலைவர்கள் உறுப்பினர்களாகவும் இருக்க வேண்டுமென அரசாங்கம் விரும்புகிறது. திட்டம், அபிவிருத்தி சம்பந்தமான எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியுள்ள முறையில், பொதுவான தன்மையில் உள்ள வேலை இனங்களைப் பொதுக் குழு கவனிக்கலாம். மாவட்ட அபிவிருத்தி மன்

றத்தின் செயலாளராக உள்ள அதிகாரியே, பொதுக் குழுவின் செயலாளராகவும் செயலாற்ற வேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது.

6. பொதுவாக மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் கூட்டம் நடைபெறுவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்கு முதல் நாள் பொதுக் குழுவின் கூட்டம் நடைபெற வேண்டுமென அரசாங்கம் விரும்புகிறது. அதனால் உறுப்பினர்கள் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் கூட்டம், பொதுக் குழுவின் கூட்டம் ஆகியஇரண்டு கூட்டத்திற்கும் சேர்த்து கூட்டம் நடக்கும் இடத்திற்குச் செல்லும் இரண்டு பயணத்தையும் ஒன்றுக்கிக் கொள்ளலாம். தேவையென்று கருதினுல், பொதுக்குழுவின் கூட்டம், மன்றத்தின் கூட்டம் நடைபெறுகின்ற தேதி சமயத்தில் இல்லாமல், வேறு சமயங்களிலும் கூட்டலாம்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961 ம் ஞு டிசம்பர் மாதம் 27 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 3389)

---

## விதிகள் 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம்—ஒப்பந்தப் புள்ளிகளை வரவழைத்து பைசல் செய்தல்—விளக்கங்கள் பிறப்பிக்கப்படுகின்றன

## (Rules—Madras Panchayats Act. 1958—Invitation and disposal of tenders Clarifications Issued.)

### (Memo No- 137218 p/3 61-1. R. D. & L. A. dated 9-12-1961).

காவேரிப்பட்டணம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் பின்வரும் பிரச்சினைகளை எழுப்பி விளக்கம் கோரியுள்ளார் :—

(1) மாவட்டக் கழகத்தின் வேலைகளைக் காண்டிராக்ட் எடுத்துச் செய்ய, முன்பே பதிவு செய்துகொண்டுள்ள நபர்களுக்கு, புதிதாக, பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் பதிவு செய்யாமலேயே, பஞ்சாயத்து யூனியன் வேலைகளைக் காண்டிராக்ட் விடலாமா ?

(2) டிவிஷனல் இன்ஜினியரினுல் (நெடுஞ்சாலைகள்—கிராம வேலைகள் உபயோகப்படுத்தப்படும் ஒப்பந்தப் படிவம் (Tender Form) பஞ்சாயத்து யூனியன் வேலைகளுக்கு உபயோகப்படுத்தலாமா ?

(3) ஒப்பந்தப் படிவத்தின் விலையை பஞ்சாயத்து யூனியன் நிர்ணயிக்கலாமா ?

2. இந்த மூன்று கேள்விகளுக்கும் கீழ்க்கண்ட முறையில் பதில்கள் அளிக்கப்படுகின்றன :—

முதலாவது.—மாவட்டக் கழகத்தில் பதிவு செய்யப்பட்ட காண்டிராக்டர்கள் பட்டியலில் உள்ள காண்டிராக்டர்கள் மறுபடியும் யூனியன் புத்தகங்களில் புதிதாகப் பதிவு செய்துகொள்ளாமலேயே, யூனியன் வேலைகளைக் காண்டிராக்ட் எடுத்து நடத்த அனுமதிக்கப்படலாம். ஏன் என்ருல் பஞ்சாயத்து யூனியன்கள் மாவட்டக் கழகங்களின் வாரிசுகள்தான்.

இரண்டாவது.— டிவிஷனல் இன்ஜினீயரால் உபயோகப்படுத்தப்பட்டுள்ள படிவத்தை (Form) பஞ்சாயத்து யூனியன் உபயோகப்படுத்திக்கொள்ள தடை ஒன்றும் கிடையாது. ஆனுல், பஞ்சாயத்து யூனியன் வேலைகளுக்காக ஒப்பந்த விதிகளுக்குப் பொருந்தும்படியாக போதிய திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

மூன்ருவது.— ஒப்பந்தப் படிவங்களுக்கான (அட்டவணைகள், குறிப்புகளையும் சேர்த்து) விலையை யூனியன் இன்ஜினீயருடன் கலந்தாலோசித்து, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் நிர்ணயிக்கலாம்.

(196 -ம் ஞு டிசம்பர் 9 தேதியிட்ட கிராம நல-தல நிர்வாகத் துறையின் மெமோ எண் 1372 8)

—0—

## மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள்—கூட்டங்கள்—அரசாங்க ஆணைகளைப் படித்தல்—விளக்கங்கள் பிறப்பிக்கப்படுகின்றன

## (District Development Councils and Panchayat union Councils—Meetings—Reading of Government Orders—Instructions Issued)

### (Memorandum No. 245328 L spl-61-1, R. D. & L. A. dated, 20-12-1961)

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 36 (4) வது பிரிவின் படி, அரசாங்கத்திற்கும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்குமிடையே நடைபெறும் எல்லா வகையான கடிதப் போக்கு வரத்துக்களும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர் மூலமாகச் செல்ல வேண்டும். அரசாங்கத்தினுல் பிறப்பிக்கப்படுகின்ற எல்லா முக்கியமான அறிவிப்புகளும், உத்தரவுகளும், பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும், அங்கத்தினர்களுக்கும்,

தெரிய, இந்த முறையானது அவ்வளவு போதியதாக இல்லை. பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் பஞ்சாயத்து யூனியன் தலைவரும், உறுப்பினர்களும், திறம்பட பங்கு கொண்டு வெற்றியுடன் செயலாற்ற வேண்டுமானால், அரசாங்கத்தினால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகிற பல் வேறு உத்தரவுகளையும், அறிவிப்புகளையும், பஞ்சாயத்து யூனியன் தலைவரும், உறுப்பினர்களும் உடனடியாகவும், போதுமான அளவிலும், தெரிந்துகொள்ளும் படியாகச் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

2. மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும்/அல்லது பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தெரியப்படுத்த வேண்டிய அரசாங்கத்தின் முக்கிய உத்தரவுகளும், மெமோக்களும் இனிமேல் மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் ஆகியவற்றின் பேரில் குறிப்பாக முகவரியிட்டு அனுப்பப்படும். இப்படி மாவட்ட அபிவிருத்தி மன்றங்களுக்கு அனுப்பப்படும் எல்லா தகவல்களும், அத்துடன், முக்கியம் என்று கருதப்படுகிற மற்ற தகவல் குறிப்புகளும், முன் கூட்டம் நடந்த தேதியிலிருந்து சேகரிக்கப்பட்டு, மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் அடுத்த கூட்டத்தில் படிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு அவை பற்றி விளக்கம் அளிக்கப்பட்டு, அந்த மாதிரி செய்த பிறகு பதிவு செய்யப்படும்படியாக மாவட்டக் கலெக்டர் பார்த்துக்கொள்ள வேண்டும். பஞ்சாயத்து யூனியன் மன்றங்களைப் பொறுத்த வரையில், எல்லாப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் இதே மாதிரி முறையைக் கையாள வேண்டும்.

(1961ஆம் டிசம்பர் 20-ம் தேதியிட்ட கிராமநல, தல நிர்வாகத் துறையின் அரசாங்க மெமோ எண் 245328)

---

## பஞ்சாயத்து யூனியன் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் நிலையில் உள்ளவர்களிலிருந்து கல்வி வளர்ச்சி அதிகாரிகள் ஸ்தானங்களுக்கு ஆட்களைச் சேர்த்தல்—1961ஆம் ஜூலை மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2032-க்குத் திருத்தம்

**(Establishment-Recruitment for the post of Education Extention officers from the category of Headmasters of Panchayat Union Schools–Amendment to G. O. Ms. No. 2032, R.D. & L.A. dated 17-7-61 Issued.)**

**(G.O. Ms. No. 3237, R.D. & L.A., dated 9-12-1961)**

17-7-1961 தேதியிட்ட கிராமநல—தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 2032, மூன்றாவது பாராவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு கீழ்க்கண்ட முறையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது :—

பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், அல்லது இது நாள் வரையில் மாவட்டக் கழகங்களின் மத்திய பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளில் செகண்டரி கிரேடு அசிஸ்டெண்டுகளாக உள்ளவர்கள் ஆகியவர்கள் கீழ்க்கண்ட யோக்கியதாம்சங்களைப் பெற்றிருந்தால், கல்வி வளர்ச்சி அதிகாரிகளாக, நியமிக்கப்படலாம் :—

(அ) அவர்கள் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக இருந்து, இதுநாள்வரையில் மாவட்டக் கழகப் பள்ளிகளில், அல்லது பஞ்சாயத்து ஆரம்பப்பள்ளிகள், அல்லது பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளிகளில் குறைந்த பட்சம் மூன்று வருடங்களுக்குக் குறையாமல் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்றியிருக்க வேண்டும் ;

அல்லது

2-10-1961 தேதிக்குப் முன்னால் மாவட்டக் கழகங்களின் நிர்வாக மேற்பார்வையில் இருந்த செகண்டரி பள்ளிகளில், செகண்டரி கிரேட் அசிஸ்டெண்டுகளாக—அவர்கள் முன்பே மாவட்டக் கழக ஆரம்பப் பள்ளிகளில், அல்லது பஞ்சாயத்து ஆரம்பப் பள்ளிகளில் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல் பணி புரிந்திருக்க வேண்டும்.

(ஆ) எந்த ஆண்டில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அந்த ஆண்டில், ஜூலை முதல் தேதியில் அவர்கள் நாற்பது வயதை அடைந்திருக்க வேண்டும்.

(1961-ஆம் டிசம்பர் 9-ம் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண். 3237)

---

## பஞ்சாயத்து யூனியன்களின் கிராமக் கட்டு வேலைகள் மானியம்—நிறைவேற்றி வைத்தல்—மேற்கொண்டும் அறிவிப்புகள்.

## Village Works Grant Programme of the Panchayat Union—Execution—Further Instructions]

**[Circular Memorandum No. 14999/L3-61-16, dated, 4-12-1961 of the Chief Engineer (Highways and Rural Works.)]**

பிரதம என்ஜினீயரின் (நெடுஞ்சாலைகள்—கிராமப் பணி கள்) 2-6-1961 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 14999/R.W /3/60—3 ல், கிராமக் கட்டு வேலைகள் மானிய வேலைத் திட்டம் சுமுகமாக நடைபெறவும், தொழில் முறையில் வழி காட்டவும், இந்த வேலைகளைக் காலா காலத்தில், ஒழுங்காகவும், நிறைவேற்றி வைப்பதற்கு வேண்டிய காலத்தில் யோசனைகள் சொல்லவும், இலாகா அதிகாரிகள்—இந்தத் திட்டத்தைத் தொடங்கி நடத்துப வர்கள் ஆகியோரிடையே, சேர்ந்து வேலை செய்கின்ற ஒரு நிலையினை ஏற்படுத்தவும் வேண்டிய அறிவிப்புகள் பிறப் பிக்கப்பட்டிருந்தன.

2. இந்த நோக்கம் நிறைவேற வேண்டி, மேற்கொண் டும் கீழ்க்கண்ட அறிவிப்புக்கள் பிறப்பிககப்படுகின்றன :

யூனியன் நிர்வாக அதிகாரிகள—நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள் சிப்பந்திகள் ஆகியோரிடையே ஒரு நெருக்கமான தொடர்பு ஏற்படும் வகையில், துணை என்ஜினீயர்கள் தங்களுடைய சுற்றுப்பயண நிரல் களை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். செய்யப்பட்டு உள்ள வேலைகளில் கண்டுள்ள முன்னேற்றம் பற்றிய விஷயங்களைப் பற்றி, பஞ்சாயத்து யூனியன் தலைவர், கமிஷனருடனும், யூனியன் என்ஜினீயருடனும் கலந்தா லோசிக்க மாதத்திற்கு ஒரு முறை தங்களுடைய அதி கார எல்லையில் உள்ள ஒவ்வொரு பஞ்சாயத்து யூனிய னுக்கும் துணை என்ஜினீயர் விஜயம் செய்ய வேண்டும். இந்த வேலைகளைச் செயல்படுத்தி வைப்பதில் ஏதாவது இடையில் சிக்கல்கள் ஏற்பட்டால், அவைகளைத் தீர்த்து வைக்கவும் அவர்களால் இயல வேண்டும். இப் படி கலந்தாலோசித்து, அதனுலும் துணை என் ஜினீயர்களால் தீர்த்து வைக்க முடியாத பிரச்சினைகள் என்று இருந்தால், அவைகளை டிவிஷனல் என்ஜினீயர் களின் (நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள்) கவனத்திறகு துணை எனஜினீயர் கொணடுவர வேணடும். அவர் அதற்குப் போதிய விளக்கம் அளிப்பார். . அப்படி கலந்தாலோசிப்பதறகாகச் செயயபபடும் சுற்றுப் பயண விவர நகல் யூனியன் தலைவருக்கும், கமிஷனருக்கும் அனுப்பி வைக்கப்பட வேணடும்.

நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் பிரதம என்சனியரின் 1961-ம் டிசம்பர் மாதம் 4-ம் தேதியிட்ட சுற்றறிக்கை எண : 14999L3/61-13

---

## கிராம வேலைகள் திட்டம்—3,000 ரூபாய்க்குக் குறைந்த மதிப்புள்ள வேலைகளை, விவரமான உத்தேசக் கணக்கு இல்லாமல் செய்வது பற்றிய பொதுத்துறையின் ஆணையில் பிறப்பிக்கப் பட்ட உத்தரவுகளை நீக்க ஆணை

## [Village Works Programme—Work costing less than Rs. 3,000—Execution without detailed estimates-Orders in G.O. No. 640, Public, dated 28-2-1955 Rescinded]

**(Memorandum No. 78587, deted 24-10-1961.]**

பொதுத் துறையின் 28—2—1955 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 640-ல், தல அபிவிருத்தித் திட்ட வேலைகள், சமுதாய நல வேலைகள், தேசிய வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றின்கீழ், ரூ. 3,000-மும், அதற்குக் குறைந்தும் செலவாகும் வேலைகளுக்கு, விளக்க மான உத்தேசக் கணக்கு (Estimates) இல்லாமல் வேலை செய்ய அனுமதித்து அவ்வப்போது செய்யப்பட்ட திருத்தங்களை ஒட்டி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. சமு தாய நல வேலைகளின் தேசிய வளர்ச்சிப் பணி வேலை களைப் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப் பட்டதை ஒட்டி, மேற்படி ஆணையில் அங்கீகரிக்கப்பட்ட சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்படவேண்டியது தேவை தானு என்னும் பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது.

2. இந்தப் பிரச்சினையை அரசாங்கம் நன்கு ஆலோசித்து உள்ளது. இனிமேல், கிராம வேலைகள் திட்டம், பஞ்சா யத்துக்களினுலும், பஞ்சாயத்து யூனியன்களினுலும் நிறை வேற்றப்படும். நிர்வாக அங்கீகாரம் பற்றிய முழு அதிகார மும் பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கு இருக்கிறது. வட்டார ஜூனியர் எஞ்சினியர்/மேற்பார்வையாளர் (Supervisor) ரூ. 3,000, வரை உத்தேசிக்கப்பட்ட வேலைகளுக்கு, வேலை முறைபற்றிய அங்கீகாரத்தை அளிக் கின்ற அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறுர். வட்டார மேற் பார்வையாளரின் துணையுடன் எல்லா வேலைத் திட்டத் திற்கும், வருட ஆரம்பத்திலேயே உத்தேசக் கணக்கு (Estimates) தயார் செய்துவிட முடியும். ஆகவே பொதுத் துறையின், 28—2—1955 தேதியிட்ட அரசாங்க ஆணையில் காட்டப்பட்ட சலுகைகள் தொடர்ந்து அமுலில் இருக்கவேண்டிய தேவையில்லை. ஆகவே மேற்படி ஆணையில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளும், விவர மான உத்தேசக் கணக்கு தயாரிப்பது சம்பந்தமான மற்ற ஆணைகளும் ரத்து செய்யப்படுகின்றன.

(கிராம நல, தல நிர்வாகத்துறையின் 24-10-1961 தேதியிட்ட அறிக்கை எண். 78587)

## பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள் பயணப்படி பெறுவது பற்றிய விளக்கங்கள்

## [Allowance-Travelling Allowance-Chairmen of panchayat union councils-Drawal-Instructions issued—R. D. & L. A. G. O. Ms. No. 2901 dated 1-11-61.]

கிராம நல, தல நிர்வாகத் துறையின் 8—10—1960 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1677-ல், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள், அவற்றின் குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோரின் பயணப்படி செலுத்துவது பற்றி பிறப்பிக்கப் பட்ட விதிகளில் 3-வது விதியின்கீழ், ஓராண்டில், பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் முறையே, மொத்தம் ரூ. 500, ரூ. 300 வரையில் பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. பயணப்படி, அந்தத் தொகைக்கு மேற்படுவதாக இருந்தால், கலெக்டரின் விசேஷ அனுமதி பெற்ற பின்னரே, பெறலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. அந்த விதியின் கீழ், தலைவரால் கீழ், குறிக்கப்பட்ட வேலைக்காகப் பயணப் படி பெறலாம் என்று குறிக்கப்பட்டுள்ளது.

(i) மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ள அல்லது அதன் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ள

அல்லது,

(ii) சட்டப்படி குறிக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் கடமைகள், வேலைகளைக் கவனிப்பது சம்பந்தமாகச் செல்ல பயணப்படி பெற அனுமதிக்கப்பட்டு உள்ளது. தலைவர் பயணப்படி பெறத் தகுதியுடைய பயணங்களுள், பஞ்சாயத்து யூனியன் மன்ற நிர்வாகத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிகளைப் பார்வையிடச் செல்வதும் ஒன்றாகும்.

2. மேற்குறிப்பிடப்பட்ட விதிகளுள் 5-வது விதியின் கீழ், பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவரின் இருப்பிடம் (குடியிருக்கும் இடம்), பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் இருக்கும் இடமல்லாது வேறு இடமாக இருக்கும் விஷயங்களில், பயணப்படிக் கணக்குக்காக அவருடைய இருப்பிடமே, அவருடைய தலைமை நிலையமாகக் (Headquarters) கருதப்படும். மேற்குறிப்பிடப்பட்ட விதிகளின் 6-வது விதியின்படி பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவரின் இருப்பிடம், அவர் தலைவராகவுள்ள பஞ்சாயத்து யூனியன் எல்லைக்கு வெளியே இருக்குமானால், அவர் தலைவராக உள்ள பஞ்சாயத்து யூனியன் எல்லையில், செய்யும் பயணத்திற்கு மட்டுமே, அவர், படிச் செலவுகளைப் பெறத் தகுதி யுடையவராவார்.

(கிராம நல, தல நிர்வாகத்துறையின் 1-11-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 2901)

---

## பஞ்சாயத்து யூனியன் அலுவலக அமைப்பு—மன்றத் தலைவருக்குத் தனிக் குமஸ்தா

## [Establishment-Panchayat union office-Personel clerk for chairman—Orders issued] [R. D. & L. A., G. O. Ms. No. 3223 dated 8-12-61.]

கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1225 யிலும், 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் தேதி யிட்ட அரசாங்க ஆணை 109லும், 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1941லும், 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், 57 (3) பிரிவின்கீழ் பஞ்சாயத்து யூனியன் அலுவலகப் பணி யாளர்களை நியமித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கும் ஐந்து கீழ்நிலை குமஸ்தாக்களை (Lower division clerks) அமர்த்த, அந்த ஆணைகளில் வகை செய்யப் பட்டுள்ளது. அவ்வாறு அமர்த்தப்படும் ஐந்து குமஸ்தாக் களில் இரண்டு பேர் பொது நிர்வாகப் பிரிவுக்கென்றும், ஒருவர் வரவு செலவுத் திட்டம்-கணக்குகள் பிரிவுக்கென் றும், இருவர் கல்விப் பிரிவுக் கென்றும், வகைப்படுத்தப்பட் டுள்ளனர். பொது நிர்வாகப் பிரிவுக் கென்று வகைப்படுத் தப்பட்ட இரண்டு குமஸ்தாக்களில் ஒருவர், "அலுவலக நிர்வாகி" (Manager) யினால் வரையறுக்கப்படும் பொதுத் தபால் தொடர்புகள், மன்ற வேலை, மன்றத் தலைவரின் வேலைகள் ஆகிய வேலைகளைச் செய்ய வேண்டும் என்று 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 164207ல் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தக் குமஸ்தா, பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவரின் அலுவலக வேலைக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்பதே, இந்த ஆணைகளின் நோக்க மாகும். இந்த வகையில் அந்தக் குமஸ்தாவுக்கு முழுநேர வேலை இருக்காது என்று கருதப்பட்டதால் வேறு சில வேலைகளும் அவருக்குக் குறிக்கப்பட்டன.

2. ஆனால் பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர், மேற்குறித்த வகையில் ஒதுக்கப்பட்ட குமஸ்தாவுக்கு இதர வேலைகளே போதுமான அளவு இருப்பதால், வேண்டிய உதவியை, அவரிடமிருந்து பெறமுடியவில்லை என்று, இப்பொழுது அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன் தலைவருடைய வேலைகளைக் கவனிக்க என்றே மேலும் ஒரு குமாஸ்தாவை நியமிக்க வேண்டும் என்று கருத்து

தெரிவிக்கப்பட்டுள்ளது. இது விஷயத்தை அரசாங்கம் தீர ஆலோசித்த பின்னர், பஞ்சாயத்து யூனியன்களின் அலுவலகத்தில், தலைவருக்கு ஒரு முழு நேர தனிக் குமஸ்தா (a full time personal clerk) இருக்கவேண்டியது அவசியம்தான் என்று கருதுகிறது. 1958-ம் வருட தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 57 (3) வது பிரிவின் கீழ், பஞ்சாயத்து யூனியன் பணியாளரின் எண்ணிக்கையை இவ்வளவென்று அரசாங்கம் வரையறை செய்துள்ளபடியால், அந்தத் தொகைக்கு மேல் பணியாளரை நியமிக்க அரசாங்கத்தின் அனுமதி தேவைப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன் மன்றம், தலைவருக்கு ஒரு தனிக் குமாஸ்தா, பஞ்சாயத்து யூனியன் செலவில் அமர்த்தப் படவேண்டியது அவசியமும், நேர்மையும் ஆகும் என்று அபிப்பிராயப்பட்டால் ஒரு தனிக் குமஸ்தாவைத் தலைவருக்கு அமர்த்த மன்றத்துக்கு அரசாங்கம் அனுமதி அளிக்கிறது. அந்தத் தனிக் குமஸ்தா பஞ்சாயத்து யூனியன் அலுவலக அமைப்பைச் சேர்ந்தவராக, பஞ்சாயத்து யூனியன் நிதிகளிலிருந்து ஊதியம் அளிக்கப் படுவார். இந்தக் குமஸ்தாவும் பஞ்சாயத்து யூனியனின் ஏனைய அலுவலகப் பணியாளரைப் போன்றே, ஒழுங்கு முறை, மேற்பார்வை முதலிய விஷயங்களில் அந்த அலுவலக அமைப்பின் ஒரு அங்கமாகவே விளங்குவார். பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் அமர்த்தப்பட்டுள்ள கீழ்நிலைக் குமஸ்தாக்களுள் (Lower division clerks) யாரைத் தனக்குத் தனிக் குமாஸ்தாவாகத் தேர்ந்தெடுத்துக்கொள்வது என்பதுபற்றி தலைவர் தம் விருப்பத்தின்படி செயல்பட உரிமை உண்டு என்னும் விஷயம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பதவிக்கென்று குறிக்கப்பட்ட வேலைகள் விஷயத்தில் தலைவரின் அனுமதியுடனே எந்த மாற்றமும் செய்யப்படும்.

(கிராம நல, தல நிர்வாகத்துறையின் 8-12-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 3223)

---

## கோயம்புத்தூர் மாவட்டம் தாளவாடி வட்டாரத்தில் வேலைசெய்யும் அரசாங்கப் பணியாளருக்கு அதிகச் செலவுப்படி (Expensive Localities allowance) அங்கீகாரம்

**(Special compensatory Allowances—Expensive Localities allowance to Governmen tservants in Talvadi block, Coimbatore District--sanctioned—Finance Department G.O. Ms. No. 1281 dated 25—10—61.]**

தாளவாடி வட்டாரப்பகுதி மிகவும் பின் தங்கிய பகுதி என்றும், அபிவிருத்தி அடையாத இடம் என்றும், அந்தப் பகுதியில் வேலை செய்யும் பணியாளர்களுக்கு மிகக் குறைந்த வசதிகளே உள்ளன என்றும்,அதனால் அந்தப் பகுதி V-வது வகுப்பு நஷ்ட ஈட்டுப் படி (compensatory allowance) அளிக்கத் தகுந்த அதிகச் செலவுப் பகுதியாக (expensive locality) கருதப்படலாம் என்று கோயம்புத்தூர் கலெக்டர் ஆலோசனை தெரிவித்துள்ளார். அவருடைய கருத்தை ரெவினியூ போர்டு ஏற்றுக்கொண்டு அரசாங்கத்துக்கு சிபாரிசு செய்துள்ளது. அரசாங்கம் இது விஷயத்தை ஆராய்ந்து பார்த்து, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தாளவாடி வட்டாரம் அதிகச் செலவுப் பகுதியாகக் கருதப்படவும், அதனால் V-வது வகுப்பு நஷ்டஈட்டுப்படி (அதிகச் செலவுப் பகுதிப்படி) அளிக்க அனுமதித்தும் ஆணை பிறப்பிக்கிறது. இந்த ஆணை 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதியிலிருந்து அமுலில் இருக்கும்.

(நிதித்துறையின் 25-10-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 1281-ன் சுருக்கம்)

---

## ' பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம் '—புதிய ஒலி அலை அளவு மாற்றத்துக்கு ஏற்ப வானொலிப் பெட்டிகளை மாற்றிக் கொள்ளுதல்

**(Panchayat Radio Maintenance Organisation–Maintenance of Radio receiver sets–Returning of radio receiver sets to the new frequency of—All India Radio, Tiruchirappalli)**

**(R. D. and L. A. Memorandum No. 167861 dated 2-11-61.)**

திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் புதிய, அதிக சக்தியுள்ள ஒலிபரப்புக் கருவி (Transmitter) அமைக்கப்பட்டு, புதிய ஒலி அலை அளவில் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ம் தேதியிலிருந்து செயல்பட்டு வருவதாக திருச்சிராப்பள்ளி வானொலி நிலைய எஞ்சினியர் அறிவித்துள்ளார்.

பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சில சமுதாய வானொலிப் பெட்டிகள் (Community radio receivers), திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தின் பழைய ஒலி அலை அளவுகளை மட்டுமே ஒலி பரப்பும் படி அமைக்கப்பட்டனவாக உள்ளன. அவை இந்தப் புதிய மாற்றத்துக்குப் பயன்படாதனவாக உள்ளன.

அதற்காக அரசாங்கம், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனப் பணியாளர் ஆகியோரின் தெளிவுக்காக கீழ்க்கண்ட விளக்கத்தைப் பிறப்பிக்கிறது :

i. இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் (Indian standard institution) குறிப்புக்களுக்கு ஒப்ப பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகளை, பெரிய பாகங்களை மாற்ற வேண்டிய தேவையின்றி, ஒலிபெருக்கியை (tuning condensor) திருத்தி அமைப்பதன் மூலம் எளிதில் புதிய ஒலி அலைகளுக்கு மாற்றிவிடலாம்.

ii. பழைய, மாநில ஒலிபரப்பு இலாகாவினால் சுமார் 600 சமுதாய வானொலிப் பெட்டிகள் செய்யப்பட்டு, பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்பட்டன. இந்த வானொலிப் பெட்டிகளில், இரண்டு சக்தி சேகரிப்புக் கருவிகளை (capacitors) மாற்றிப் புதியவைகளை அமைப்பதன் மூலம் புதிய நிலைக்கேற்ப திருத்திக்கொள்ளலாம். இவ்விரண்டு கருவிகளின் (capacitors) விலை ஒரு ரூபாய்க்கு மேல் இருக்காது.

iii. பஞ்சாயத்துக்களின் வசதிகளுக் கேற்ப, வட்டாரத்தலைமை நிலையத்துக்கோ (Block Headquarters) அன்றி ரெவினியூ கோட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள ரேடியோ மேற்பார்வையாளரின் நிலையத்துக்கோ (service station) எடுத்துச் சென்று இந்த மாற்றங்களைச் செய்து கொள்ளலாம். இவ்வாறு திருப்பிப் பெற, பஞ்சாயத்துக்களிடமிருந்து, கிராமநல, தலநிர்வாகத்துறையின் 1961–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2337–ல் குறிப்பிடப்பட்ட சரி செய்யும் செலவாகிய ரூபாய் 20 தவிர வேறு தனியாக யாதொரு கட்டணமும் வசூலிக்கப்படமாட்டாது.

(கிராம நல, தல நிர்வாகத்துறையின் 2-11-61 தேதிய அறிக்கை எண். 167861-ன் சுருக்கம்)

—o—

## பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள்—ஆசிரியர்களை வேலைக்குத் தேர்ந்தெடுக்கின்ற விஷயத்தில் "வேலை தேடித்தரும் நிறுவன"த்தைக் கலந்தாலோசித்தல் பற்றிய விளக்கம்

## (Establishment-Elementary Education-Panchayat Union Councils – R cruitment of teachers Consultation with Employment Exchange—Instructions issued—Edu ation and Public Health Department, Memorandum No. 11653, (Education) dated 29—12—61]

1961ஆம் ஜனவரிமீ 23தேதியில் நடந்த மாநிலக் கல்வி ஆலோசனைக் குழுவின் பதினோராவது கூட்டத்தில் கல்வித் துறை இயக்குனர் (Director of Public Instruction) பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்துவதில் எற்படுகின்ற காலதாமதத்தைக் குறைப்பதற்கு ஒரு யோசனை கூறியுள்ளார். அதாவது, வேலை தேடித்தரும் நிறுவனங்களிடமிருந்து (Employment Exchanges) பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் பட்டியலை பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் தருவித்து, பயிற்சிப் பள்ளி தேர்வு முடிவுகள் வெளியானதும், பட்டியலில் உள்ள தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம். இந்த யோசனை மாநிலக் கல்வி ஆலோசனைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. ஆசிரியர்களை அமர்த்தும் விஷயத்தில் மேற்கூறப்பட்ட முறையை எல்லா பஞ்சாயத்து யூனியன் மன்றங்களும் பின்பற்ற வேண்டுமென்று அரசாங்கம் ஆணையிடுகிறது.

(கல்வி, பொது சுகாதாரத் துறையின் 29—12—61 தேதியிட்ட அறிக்கை எண் 11653)

—o—

## கிராமப் பஞ்சாயத்துக்களின் குமஸ்தா வேலையைச் செய்ய பகுதி நேர குமஸ்தாவை அமர்த்துவது பற்றியும், அந்த வேலைக்கான படி விதம் (Scale of Allowance) பற்றியும் விளக்கம்

## Panchayat Development—Performance of Clerical duties of Village Panchayats—Employment of part-time Clerks and scale of allowances for such cle ks—Certain Clarifications Issued—) (R. D. & L. A. Memorandum No. 182769 dated 22—11—'61)

கிராமநலத் துறையின் 9-8-1960 தேதியிட்ட அரசாங்க ஆணை 644-ன் 10-வது பாராவில், கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளைத் தயாரித்தல், வரவு செலவுக் கணக்கு எழுதுதல் முதலான பொது நிர்வாகம் சம்பந்தமான குமஸ்தா வேலைகளைச் செய்ய கர்ணத்தை அமர்த்திக் கொள்வது, அல்லது வேறு பொருத்தமான ஏற்பாட்டைச் செய்து கொள்வது ஆகிய எதைச் செய்து கொள்ளவும் பஞ்சாயத்துக்கள் உரிமை அளிக்கப்பட்டுள்ளன ; ஆனால் அந்த ஏற்பாட்டினால் ஆகும் செலவு, பஞ்சாயத்தின் பொது வருவாயுடன் ஒப்பிடும்பொழுது பொருத்தமற்ற வகையில் அதிகமாக இருக்கக் கூடாது. கிராம நல, தல நிர்வாகத்துறையின் 16-2-1961 தேதியிட்ட அரசாங்க

ஆணை 411-ன் 8-வது பாராவில், மேற்குறித்த வேலைக்கு, கிராமக் கர்ணம் பயன்படுத்தப்படாமல் வேறு குமஸ்தா அமர்த்தப்பட்டால், அத்தகைய குமஸ்தா வேலையினால் சட்ட பூர்வமில்லாத எல்லா அரசாங்க மானியங்கள் நீங்கலாக, கிராம வீட்டு வரி ஈட்டு மானியத்துடன் சேர்த்து, பஞ்சாயத்தின் சாதாரண வருட வருமானத்தில் 6¼ சத வீதத்துக்கு மேல் செலவு ஆகக் கூடாது என்று விளக்கப்பட்டுள்ளது.

2. கிராம நல, தல நிர்வாகத்துறையின் 28-8-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 2339-ல் கிராமப் பஞ்சாயத்துக்கள், தனி பஞ்சாயத்து குமஸ்தாக்களை அமர்த்திக் கொள்ளவும், அந்த ஆணையில் கூறப்பட்ட சம்பள வீதத்தில் சம்பளம் கொடுக்கவும், திருத்தப்பட்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

3. மேற்படி ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள வீதத்தில், செயலாளரின் வேலைக்கு அளிக்கப்படும் ஊதியத்தை, கிராமக் கர்ணங்களுக்கு அளிப்பதனால் அவர்களுடைய உற்சாகத்துக்கு ஒரு தூண்டுதலாக இருக்கும் என்றும், ஆனால் அவ்வாறு செயலாளரை நியமிக்கின்ற அதிகாரம் பஞ்சாயத்துக்களுக்கே இருப்பதால், பல பஞ்சாயத்துக்கள் தனி முழுநேரச் செயலாளரை அமர்த்துவதிலேயே ஆர்வம் காட்டுகின்றன என்றும் வடார்க்காடு மாவட்டக் கலெக்டர் அறிவித்துள்ளார். அவர், கிராமப் பஞ்சாயத்துச் செயலாளராக கர்ணங்களை நியமிக்க எற்கெனவே பஞ்சாயத்துக்கள் தீர்மானித்து, முதலில் அவர்கள் செய்த முடிவை மாற்றிக்கொண்டு, அந்தத் தீர்மானத்தின்படி கர்ணங்களை நியமிப்பதை அனுமதிக்கலாமா என்று ஒரு பிரச்சினையை எழுப்பி உள்ளார். மேலும் அவர், இந்த ஆணை (அ. ஆ. எண் 2339) எந்தத் தேதியிலிருந்து அமுலுக்கு வருகிறது என்றும் கேட்டிருக்கிறார்.

கிராம நல, தல நிர்வாகத்துறையின் 28-8-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 2339, எந்த விஷயத்தையும் சார்ந்ததல்ல. அது முடிந்த முடிவாகக் கூறப்படுவது என்று வடார்க்காடு மாவட்டக் கலெக்டர் அறிவிக்கப்படுகிறார். கர்ணத்தைப் பகுதி நேர குமஸ்தாவாக (அரசாங்க ஆணை 644-ன்படி "செயலாளராக") நியமிக்கும் விஷயம், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களின் விருப்பத்துக்கே விடப்பட்டுள்ளது. ஆகவே, அவை, தாம் கர்ணங்களைச் செயலாளர்களாக அமர்த்திக் கொள்வதாக, முன்னர் செய்து கொண்ட முடிவுகளை மாற்றிக்கொண்டு வேறு யாரையாவது பகுதி நேர குமஸ்தாவாக அமர்த்திக் கொள்ள உரிமை பெற்றிருக்கின்றன. கிராம நல, தல நிர்வாகத்துறையின் 28-8-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 2340-லேயே கர்ணம், பகுதி நேர குமஸ்தாவின் வேலைகளைச் செய்யவும், அதற்குரிய ஊதியமாக ஆணை 2339-ல் கூறப்பட்ட படித் தொகை (Allowances) பெறவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கிராம நல, தல நிர்வாகத் துறையின் 28-8-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 2339—அது பிறப்பிக்கப்பட்ட 28-8-1961 தேதியிலிருந்து அமுலில் இருக்கும்.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 22—11—61 தேதியிட்ட அறிக்கை எண் 182769.)

---

## பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பொருளாதார உதவி—வேலை நடைபெற்ற பின்னர் வழங்கப்படும் மானியத்தை கோட்ட ஆட்சித் தலைவர்/மாவட்ட விவசாய அதிகாரி அங்கீகாரம் செய்யும் நமூனா

**(Accounts-Panchayat Unions-Procedure for financial assistance-payments of grants on Post execution basis—Form of sanction order to be issued by the Revenue Divisional Officer/District Agricultural Officer—Prescribed—R. D. & L. A. Department Memorandum No. 221263 dated 21—12—61.)**

கிராம நல, தல நிர்வாகத் துறையின் 9-8-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 2228, 8-9-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 2460—ஆகியவற்றின்படி பஞ்சாயத்து யூனியன்களுக்கு, திட்ட நிறைவேற்றத்துக்குப் பின்னால் அளிக்கப்படும் வகையில், கீழ்க்கண்ட மானியங்கள் வழங்கப்பட உள்ளன :—

1. கிராம வேலைகள் மானியம்.
2. சமூகக் கல்வி மானியம்.
3. மாதர், குழந்தைகள் நல மானியம்.
4. விவசாய மானியம்.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை விநியோகிக்கப்படும் விவசாய மானியத்தைத் தவிர, ஏனைய மானியங்கள் மாதா மாதம், செலவை ஈடு செய்ய வழங்கப்படும். ஆகவே, மேற்படி மானியங்களை வழங்குவதற்கு உபயோகப்படுவதற்கென்று இந்த ஆணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டபடி, ஒரு நிரந்தரமான நமூனாவைப் பயன்படுத்துவது நல்லது என்று அரசாங்கம் கருதுகிறது. அங்கீகார உத்தரவின் அசல் பிரதிகள், கோட்ட ஆட்சித் தலைவரால் (Revenue Divisional Officer) / மாவட்ட விவசாய அதிகாரியால் நேரடியாகக் கையெழுத்து இடப்பட வேண்டும்.

# இணைப்பு

எண் :

கோட்ட ஆட்சித் தலைவர் (R.D.O.) அலுவலகம்

மாவட்ட விவசாய அதிகாரி (D.A.O.) அலுவலகம்.

........................ ............

கோட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து

மாவட்ட விவசாய அதிகாரியிடமிருந்து

........................................

கிளைக் கஜானா அதிகாரிக்கு,

தமிழ்நாடு கஜானா சட்டம் பாகம் I, கஜானா விதி 17-ன் 2-வது உட்பிரிவின்படி, . . . . . . . பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு (i) இந்த ஆணை (ii) இதனுடன் இணைக்கப்பட்டுள்ள இந்த ரசீதுப் பட்டியலில் (எம்.டி.சி. நமூனா எண் 40-ல்) குறித்த ரூ. . . . . . . . . (ரூபாய் . . . . . . ) செலுத்த இதன் மூலம் உம்மை நான் அனுமதிக்கிறேன்.

2. இந்தத் தொகை, கணக்குச் சரிகட்டுதலில் மூலம் உங்கள் கஜானா/கிளைக் கஜானாவில் வைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன் எல். எப். முன்பணம் கணக்கு I-ல் செலுத்தப்படும். ரொக்கமாகப் பணம் செலுத்தக்கூடாது.

இந்தத் தொகை . . . .மாதத்துக்காக * கிராம வேலைகள் மானியம் ( † )/சமூகக் கல்வி மானியம் /மாதர், குழந்தைகள் நலன் மானியம்/ . . . . . மூன்றுமாத முடிவுக்காக/விவசாய மானியம் . . . . . . . ."க்குப் பற்றுவைக்கப்படும்.

3. இந்தக் கணக்குச் சரிக்கட்டுதல் அக்கௌண்டண்ட்-ஜெனரலுக்கும் . . . . . . . . மாவட்டக் கலெக்டருக்கும் அறிவிக்கப்பட வேண்டும். அத்துடன் பணம் செலுத்தியதற்கு கஜானா அதிகாரியின் மூலம் சான்றிதழ், அவ்வப்போது இந்த அலுவலகத்திற்கு அறிவித்து அனுப்பிவைக்க வேண்டும்.

கோட்ட ஆட்சித்தலைவர் (R.D.O.)

மாவட்ட விவசாய அதிகாரி (D.A.O.)

பிரதிகள்—

. . . . . . பஞ்சாயத்து யூனியன் தலைவர் மூலம் கமிஷனருக்கு.

சென்னை அக்கவுண்டன்ட் ஜெனரல் அவர்களுக்கு.

. . . . . . . கலெக்டருக்கு.

குறிப்பு.—தமிழ்நாடு கஜானாச் சட்டம் பாகம் I, 17-வது விதியின் 2-வது துணைவிதியின் படி இந்த மானியம், இந்த அனுமதியின் மேல், சரிகட்டப்படுகிறது. அக்கௌண்டன்ட் ஜெனரலின் அனுமதி வேண்டியதில்லை.

* தேவையற்ற பகுதியை அடித்துவிடவும்.

†எந்தவகைக் கிராமவேலை என்பதைக் குறிக்கவும்.

கிராமவேலைகள் மானியம் :—

கிராம வேலைகள் மானியம் அங்கீகார உத்தரவில் எந்த வகை வேலையின் செலவுக்கு ஈடு செய்வது சம்பந்தமானது என்பதைக் குறிப்பிட வேண்டும். கிராமநலத் துறையின் (கணக்குப் பிரிவு) 1961 செப்டெம்பர் மாதம் 5-ம் தேதியிட்ட அறிக்கை எண் 154036-ன் 3, 5 பாராக்களில் கணக்குத் தலைப்புக்கள் குறிக்கப்பட்டுள்ளன.

விவசாயமானியம்.—கிராம நல, தலநிர்வாகத் துறையின் 1961 செப்டெம்பர் 8-ம் தேதியிட்ட அறிக்கை 2460-ன் இணைப்பு III—பாராக்கள் 6-1, 6-3—ல் இதற்கான கணக்குத் தலைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

மாதர், குழந்தை நலம் மானியம் & சமூகக்கல்வி மானியம்.—பற்றுவைக்கவேண்டிய கணக்குத் தலைப்பு :

" 47-A. சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்—தேசிய வளர்ச்சிப் பணி, தல அபிவிருத்தி வேலைகள், (b) அபிவிருத்தித் திட்டங்கள்—மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள திட்டங்கள்—சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் VI—சமூகக் கல்வி—பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியங்கள் "

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் (கணக்குப் பிரிவு) 21—12—1961 தேதியிட்ட அறிக்கை எண் 221263.)

——o——

## பஞ்சாயத்துக் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்கள், விவாதிக்கப்பட்ட மாறுபட்ட கருத்துக்களின் நடைமுறை விளக்கம் ஆகியவற்றைப் பிரதி எடுத்து கோட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பிவைத்தல்

**(Meeting—Panchayats—Copies of Procedings and minutes of dissent—Submisson to Revenue Divisional Officer—Instructions issued—R. D. & L. A. Dept. G. O. Ms. No. 3032 dated 10—11—1961).**

1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 49-வது பிரிவின்கீழ், ஒவ்வொரு கூட்ட நடைமுறைகளைப் பற்றிய நிகழ்ச்சிக் குறிப்புகளின் பிரதியும், இத்தகைய நடைமுறை பற்றிய மாறுபட்ட கருத்துக்கள், கூட்டத்தில் கலந்துகொண்ட யாராவது ஓர் உறுப்பினரால் கூட்டத்தில் கூட்டம் முடிய 48 மணி நேரத்துக்குள், கொண்டு

வரப்பட்டால் அதைப்பற்றிய விவரங்களும் இன்ஸ்பெக்டருக்கு (கலெக்டருக்கு) கூட்டம் நடந்த நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்படவேண்டும். மேற்படி பிரிவின் விதிப்படி, அந்த நிகழ்ச்சிக் குறிப்புகளை இன்ஸ்பெக்டர் (கலெக்டர்), அவருடைய அதிகாரம்பெற்ற அதிகாரிக்குப் பொதுவாகவோ, அன்றி குறிப்பிட்ட விஷயங்களை, அவை சம்பந்தமான அதிகாரிக்கோ—சமர்ப்பிக்கும்படி ஆணையிடலாம்.

1950-ம் வருஷத்திய தமிழ்நாடு கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்கீழ், தமிழ்நாடு, நகரமன்றங்கள், ஸ்தல ஸ்தாபனங்களின் இன்ஸ்பெக்டர் (Inspector of Municipal Councils and Local Boards, Madras) அந்தச் சட்டம் 36-வது பிரிவின் விதிப்படி, பஞ்சாயத்தின் ஒவ்வொரு கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பையும், கூட்டத்தில் கலந்து கொண்ட எந்த ஓர் உறுப்பினராலாவது கூட்ட முடிவுக்கு 48 மணி நேரத்திற்குமுன் எழுப்பப்பட்ட மாறுபட்ட கருத்துக்கள் பற்றிய நடைமுறையையும், சம்பந்தப்பட்ட மாவட்ட பஞ்சாயத்து அதிகாரியிடம் (District Panchayat Officer) கூட்ட நாளிலிருந்து 3 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இன்றைய அமைப்பு முறையில், கோட்ட பஞ்சாயத்து அதிகாரிகள் (Divisional Panchayat Officers) தனிப்பட்ட விளங்கும் அதிகாரிகளாக இல்லாமல் கோட்ட ஆட்சித் தலைவரின் Revenue Divisinal Officers) அலுவலகத்தின் பகுதியாக விளங்குவதோடு, கோட்ட ஆட்சித் தலைவர்களும் பஞ்சாயத்துகளின் தணிக்கை, மேற்பார்வை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே கோட்ட ஆட்சித்தலைவர்கள் (Revenue Divisional Officers) 1958 வருடத்திய, தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 49-வது பிரிவின்படி, பஞ்சாயத்துக் கூட்ட நடைமுறை நிகழ்ச்சிக் குறிப்புகளைப் பெற்றுச் சேர்த்துவைக்கவேண்டியவர்களாகிறார்கள். ஆகவே, பஞ்சாயத்துக் கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள், கூட்டம் முடிய 48 மணிநேரத்துக்குள் கூட்டத்தின் முன்கொண்டு வரப்பட்ட மாறுபட்ட கருத்துக்கள் பற்றிய நடைமுறைக் குறிப்புகள், 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 49-வது பிரிவு விதியின்படி, சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சித் தலைவருக்கு (Revenue Divisional Officer) கூட்டம் நடந்த நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள் சமர்ப்பிக்கப் படவேண்டும் என்று (சென்னை, கன்யாகுமரி நீங்கலாக, ஏனைய) எல்லா மாவட்டக் கலெக்டர்களும் ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 10—11—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 3032.)

———o———

[ஆந்திரப் பிரதேசத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு மாற்றப்பட்ட பிரதேசங்களுக்கு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தை விரிவுபடுத்தி தமிழ்நாடு அரசாங்கம் பிறப்பித்துள்ள அறிக்கையைக் கீழே வெளியிட்டுள்ளோம். கேரளா, மைசூர் மாநிலங்களில் பஞ்சாயத்துச் சட்டங்கள் இயற்றப்படவில்லை. இன்னும் பஞ்சாயத்து ஆட்சி அங்கெல்லாம் அமுலுக்கு வரவில்லை. பஞ்சாயத்து ஆட்சி அமுலுக்குவந்துள்ள ஆந்திரப் பிரதேசத்திலிருந்து மாற்றப்பட்டுள்ள பிரதேசங்கள் பற்றிய அறிக்கையை மட்டும் தமிழ்நாடு அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

ஆசிரியர்.]

## அறிக்கை

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் (சென்னைச் சட்டம் 35/1958) 178-வது பிரிவை 1961-ம் ஆண்டு சென்னை மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள், பஞ்சாயத்துக்கள் (சேர்க்கப்பட்ட பகுதிக்கு விரிவுபடுத்தல்) சட்டத்தின் 4-வது பிரிவுடன் சேர்த்து வாசிக்கையில் ஏற்படுகிற அதிகாரங்களைக் கொண்டும், இவ் விதிகள் செய்வதற்கான மற்றெல்லா அதிகாரங்களைக் கொண்டும், 1959-ம் ஆண்டு ஆந்திரப் பிரதேச பஞ்சாயத்து சமிதிகள், ஜில்லா பரிஷத்துக்கள் சட்டத்தின் கீழ் (ஆந்திரப் பிரதேசச் சட்டம் 35/1959) செய்யப்பட்ட அதிகாரங்களையும், விதிகளையும் ரத்து செய்து அவற்றிற்குப் பதிலாகவும், தமிழ்நாடு கவர்னர் அவர்கள், அடியிற்கண்ட விதியை இதனால் செய்கிறார்கள் :—

## விதி

1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ்ச் (சென்னைச் சட்டம் 35/1958) செய்யப்பட்டவையும், கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டம் இவை நீங்கலாகத் தமிழ்நாடு மாநிலத்தில் சகல பகுதிகளிலும் 1959-ம் ஆண்டு ஆந்திரப் பிரதேச—சென்னை (எல்லைமாற்றச்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 56/1959) 2 வது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பகுதிகளிலும் அமுலிலுள்ளவையுமான விதிகள் யாவும் ஷை 2-வது அட்டவணையில் குறிப்பிட்ட பகுதிகளுக்குப் பயன்படும்.

கிராம-நல தலநிர்வாகத்துறையின் (9—10—1961 தேதியிட்ட அரசாங்க ஆணைஎண் 3732-ன் இணைப்பு).

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.

1, 2, 3, 4. புறம்போக்கு நிலங்களில் சுமார் ஆயிரம் புளியமரங்களை நட்டு, வளர்ப்பதற்கான திட்டத்தை பாப்பரம்பாக்கம் பஞ்சாயத்து நிறைவேற்றிவருகிறது. புளியஞ்செடிக்கு நீர் ஊற்றும் காட்சியையும், செடிகள் வளரும் புறம்போக்கு நிலப்பகுதியையும் சுற்றுப்புறத்தையும் படங்கள் காட்டுகின்றன. (விளக்கம் 26ம் பக்கக் கட்டுரையில்.)

கடம்பத்தூர் பஞ்சாயத்து யூனியன் வளர்ச்சியில் தனியார் பங்கு. 5. பாக்கம் கிராமம் "அம்பிகா" பண்ணையில் பயிர் விளைச்சல்.

6. தேனீ வளர்ப்பு நிலையம். கிராமவாசிகள் வருவாயைப் பெருக்குவதற்கு தேனீ வளர்ப்புத் தொழில் சாலவும் சிறந்தது.

## 7, 8. கைத்திறன் கலைப் பொருள்கள் உற்பத்தி

கைத்தொழிலின் மேன்மையையும், கிராமியக்கலை எழிலையும் பிரதிபலிக்கும் பல பொருள்களை சிறு கூடல் (செவ்வாப்பேட்டை) கிராம குலாலர் பயிற்சி நிலையத்தில் உற்பத்தி செய்கிறார்கள். இக்கிராமம் திருவள்ளூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ளது.

Regd. N. M. 7277

©
தமிழ்நாடு அரசாங்கம் 1962.

## மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் பொறுப்பு

அபிவிருத்தி வேலைகளைத் திட்டமிட்டு நிறைவேற்றும் பொறுப்பை, மாவட்ட அபிவிருத்தி மன்றம் ஏற்றுள்ளது. கலெக்டர் தலைமையில், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், மாவட்ட அதிகாரிகளும், கலந்தாலோசித்து, கிராம நல வேலைகளை ஊக்கமுடன் நிறைவேற்றும் சாதனமாக, இம் மன்றம் நல்ல முறையில் செயல்படவேண்டும் என்பது, அரசாங்கத்தின் நோக்கம்.

செங்கல்பட்டு மாவட்ட அபிவிருத்தி மன்றக்கூட்டம், சமீபத்தில் சைதாப்பேட்டையில் நடந்தபோது, தல அபிவிருத்தி வேலைகளைப் பற்றி கலெக்டர் திரு. கே. எஸ். சிவசுப்பிரமணியம் அவர்களும், உறுப்பினர்களும், தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். அம்மன்றம் நடைபெற்றபோது எடுத்த படங்கள் சிலவற்றை இங்கே காணலாம்.....




## பஞ்சாயத்து யூனியன் ‘செய்தி நிலையம்’

தமிழ் நாடெங்கும் உள்ள பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களில் அமைக்கப்பட்டிருக்கும் செய்தி நிலையங்கள் (Information Centres) கிராம மக்களுக்கு கிராம நல வேலைகளைப் பற்றிய எல்லா விவரங்களையும் விளக்குவதோடு, பயனுள்ள நூல்கள், படங்கள் முதலியவற்றைத் தந்து உதவி புரியவேண்டும். ஒவ்வொரு யூனியனிலும், சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துகளைப் பற்றிய அழகிய புகைப்படங்களையும் அங்கே வைக்க ஏற்பாடு செய்வது நலம். (படம் 2.)

# விசேஷ அனுபந்தம்

# தமிழ்நாடு
# பஞ்சாயத்துக்கள் பட்டியல்

வெளியீடு :

இராம நல, தல நிர்வாகத் துறை, சென்னை-9.

தமிழ்நாடு

பஞ்சாயத்துக்கள் பட்டியல்

# பொருளடக்கம்


| | பக்கம் |
| --- | --- |
| பஞ்சாயத்துக்களின் பட்டியல் : | 1—131 |
| வடார்க்காடு மாவட்டம் | 1—15 |
| தென்னுர்க்காடு மாவட்டம் | 16—31 |
| செங்கற்பட்டு மாவட்டம் | 32—43 |
| சேலம் மாவட்டம் | 44—58 |
| கோயமுத்தூா மாவட்டம் | 59—68 |
| நீலகிரி மாவட்டம் | 69 |
| திருச்சிராப்பள்ளி மாவட்டம் | 70—84 |
| தஞ்சாவூர் மாவட்டம் | 85—99 |
| மதுரை மாவட்டம் | 100—108 |
| இராமநாதபுரம் மாவட்டம் | 109—121 |
| திருநெல்வேலி மாவட்டம் | 122—130 |
| கன்னியாகுமரி மாவட்டம் | 131 |
| பஞ்சாயத்து யூனியன்களின் பட்டியல் | 132—136 |
| புள்ளி விவரக் கணக்குகள் | 137 |

# வட ஆர்காடு மாவட்டம்

## திருப்பத்தூர் கோட்டம்

## (Tiruppathur Revenue Division)

### திருப்பத்தூர் பஞ்சாயத்து யூனியன்

### திருப்பத்தூர் தாலூகா

#### நகரப் பஞ்சாயத்து

| வரிசை எண் | பஞ்சாயத்து. | தபால் நிலையம். |
|---|---|---|
| 1 | ஜோலார்ப்பேட்டை | ஜோலார்ப்பேட்டை. |

#### கிராமப் பஞ்சாயத்துக்கள்

| வரிசை எண் | பஞ்சாயத்து. | தபால் நிலையம். |
|---|---|---|
| 1 | ஆண்டியப்பனூர் | ஆண்டியப்பனூர். |
| 2 | அம்மணங்கோயில் | புதுப்பேட்டை. |
| 3 | அக்ரகாரம் | புதுப்பேட்டை. |
| 4 | அகரம் | மடவாளம் |
| 5 | அண்ணாண்டப்பட்டி | திருப்பத்தூர். |
| 6 | அச்சமங்கலம் | புதுப்பேட்டை. |
| 7 | அனேரி | திருப்பத்தூர். |
| 8 | பூரிகமானிமிட்டா | திருப்பத்தூர். |
| 9 | பொம்மிகுப்பம் | பொம்மிகுப்பம். |
| 10 | சந்திரபுரம் | சந்திரபுரம். |
| 11 | சின்னக்கல்லுப்பள்ளி | கலந்திரா. |
| 12 | சின்னசமுத்திரம் | மடவாளம். |
| 13 | சின்னகம்மியம்பட்டு | ஜோலார்பேட்டை. |
| 14 | சின்னமோட்டூர் | கேத்தாண்டபட்டி. |
| 15 | சின்னமுக்கனூர் | பாச்சல். |
| 16 | சின்னவேப்பம்பட்டு | வாணியம்பாடி. |
| 17 | தாமலேரிமுத்தூர் | தாமலேரிமுத்தூர். |
| 18 | ஏலகிரிமலை | ஜோலார்பேட்டை. |
| 19 | ஏலகிரி | ஜோலார்பேட்டை. |
| 20 | இருணாப்பட்டு | ஆண்டியப்பனூர். |
| 21 | ஜம்மனபுதூர் | மட்ரப்பள்ளி. |
| 22 | கதிரிமங்கலம் | கதிரிமங்கலம். |
| 23 | கதிரம்பட்டி | மடவாளம். |
| 24 | குரிசிலாப்பட்டு | குரிசிலாப்பட்டு. |
| 25 | கோனாப்பட்டு | புதுப்பேட்டை. |
| 26 | கல்நாரசம்பட்டி | புதுப்பேட்டை. |
| 27 | கருப்பனூர் | திருப்பத்தூர். |
| 28 | காக்கனாம்பாளையம் | மடவாளம். |
| 29 | குரும்பக்கேரி | மடவாளம். |
| 30 | கூத்தாண்டகுப்பம் | கேத்தாண்டபட்டி. |
| 31 | காவேரிப்பட்டு | ஜோலார்ப்பேட்டை. |
| 32 | கட்டேரி | ஜோலார்ப்பேட்டை. |
| 33 | கேத்தாண்டபட்டி | கேத்தாண்டபட்டி. |
| 34 | மல்லப்பள்ளி | மல்லப்பள்ளி. |
| 35 | மேலச்சமங்கலம் | புதுப்பேட்டை. |
| 36 | மாடப்பள்ளி | மடவாளம். |
| 37 | மூக்கனூர் | புதுப்பேட்டை. |
| 38 | மோட்டூர் | பொம்மிகுப்பம். |
| 39 | மண்டலவாடி | மண்டலவாடி. |
| 40 | நாச்சார்குப்பம் | மிட்டூர். |
| 41 | நெக்குந்தி | வாணியம்பாடி. |
| 42 | ஒட்டப்பட்டி | திருப்பத்தூர். |
| 43 | பணியாண்டபள்ளி | புரம். |
| 44 | பூங்குளம் | பூங்குளம். |
| 45 | பெருமாப்பட்டு | பெருமாப்பட்டு. |
| 46 | புத்தகரம் | புத்தகரம். |
| 47 | புள்ளானேரி | ஜோலார்ப்பேட்டை. |
| 48 | பெரியமோட்டூர் | ஜோலார்ப்பேட்டை. |
| 49 | பாச்சல் | பாச்சல். |
| 50 | பெரியகம்மியம்பட்டு | ஜோலார்ப்பேட்டை. |
| 51 | பொன்னேரி | பொன்னேரி. |
| 52 | பால்னாங்குப்பம் | ஜோலார்ப்பேட்டை. |
| 53 | ராச்சமங்கலம் | திருப்பத்தூர். |
| 54 | செலந்தம்பள்ளி | மடவாளம். |
| 55 | சோமநாயக்கன்பட்டி | சோமநாயக்கன்பட்டி. |
| 56 | சேளடேகுப்பம் | மடவாளம். |
| 57 | திருப்பத்தூர் கிராமம் | திருப்பத்தூர். |
| 58 | திம்மனாமுத்தூர் | பொம்மிகுப்பம். |
| 59 | தாதவள்ளிகிருஷ்ணாபுரம் | மடவாளம். |
| 60 | வெலகல்நத்தம் | வெலகல்நத்தம். |
| 61 | வேட்டப்பட்டு | பந்தாரப்பள்ளி. |

### ஆலங்காயம் பஞ்சாயத்து யூனியன்

#### நகரப் பஞ்சாயத்து

| வரிசை எண் | பஞ்சாயத்து. | தபால் நிலையம். |
|---|---|---|
| 1 | ஆலங்காயம் | ஆலங்காயம். |

#### கிராமப் பஞ்சாயத்துக்கள்

| வரிசை எண் | பஞ்சாயத்து. | தபால் நிலையம். |
|---|---|---|
| 1 | பீமகுளம் | ஆலங்காயம். |
| 2 | தேவஸ்தானம் | வாணியம்பாடி. |
| 3 | இளையநகரம் | வாணியம்பாடி. |
| 4 | கிரிசமுத்திரம் | வாணியம்பாடி. |
| 5 | கோவிந்தாபுரம் | வாணியம்பாடி. |
| 6 | ஜாபராபாத் | வாணியம்பாடி. |
| 7 | கலந்திரா | வாணியம்பாடி. |
| 8 | கொத்தக்கோட்டை | வெள்ளக்குட்டை. |
| 9 | மதனாஞ்சேரி | வாணியம்பாடி. |
| 10 | மேல்குப்பம் | வடச்சேரி. |
| 11 | நெல்லிவாசல் நாடு | விஷமங்கலம். |
| 12 | நரசிங்கபுரம் | ஆலங்காயம். |
| 13 | நாய்க்கனூர் | ஆலங்காயம். |
| 14 | நிம்மியம்பட்டு | நிம்மியம்பட்டு. |
| 15 | நெக்கனாமலை | வாணியம்பாடி. |
| 16 | பள்ளிப்பட்டு | வாணியம்பாடி. |
| 17 | பெத்தவேப்பம்பட்டு | வெள்ளக்குட்டை. |
| 18 | புதூர்நாடு | ஆண்டியப்பனூர். |
| 19 | புங்கம்பட்டுநாடு | ஆண்டியப்பனூர். |



L.V.—1A

| வரிசை எண். | பஞ்சாயத்து. | தபால் நிலையம். |
|---|---|---|
| 20 | ரெட்டியூர் | நிம்மியம்பட்டு. |
| 21 | வள்ளிப்பட்டு | வெள்ளக்குட்டை. |
| 22 | வளையாம்பட்டு | வளையாம்பட்டு. |
| 23 | வெலதிகமானபெண்டா | ஆலங்காயம். |
| 24 | வெள்ளக்குட்டை | வெள்ளக்குட்டை. |
| 25 | விஜிலாபுரம் | வெள்ளக்குட்டை. |

### நாட்டறம்பள்ளி பஞ்சாயத்து யூனியன்

#### நகரப் பஞ்சாயத்து

| | | |
|---|---|---|
| 1 | நாட்டறம்பள்ளி | நாட்டறம்பள்ளி. |

#### கிராமப் பஞ்சாயத்துக்கள்

| | | |
|---|---|---|
| 1 | அவிஞ்சிகுளம் | வாணியம்பாடி. |
| 2 | அலசந்தாபுரம் | அலசந்தாபுரம். |
| 3 | அம்பலூர் | அம்பலூர். |
| 4 | ஆத்தூர்குப்பம் | ஆத்தூர்குப்பம். |
| 5 | பந்தாரப்பள்ளி | பந்தாரப்பள்ளி. |
| 6 | சிக்கனங்குப்பம் | வாணியம்பாடி. |
| 7 | கத்தேரி | கத்தேரி. |
| 8 | கொத்தூர் | கொத்தூர். |
| 9 | கொடையாஞ்சி | வாணியம்பாடி. |
| 10 | மல்லாங்குப்பம் | ராமநாயக்கன்பேட்டை. |
| 11 | மல்லகுண்டா | மல்லகுண்டா. |
| 12 | நாயனச்செருவு | நாயனச்செருவு. |
| 13 | பச்சூர் | பச்சூர். |
| 14 | புல்லூர் | திம்மாம்பேட்டை. |
| 15 | ராமநாயக்கன்பேட்டை | ராமநாயக்கன்பேட்டை. |
| 16 | சங்கராபுரம் | வாணியம்பாடி. |
| 17 | சொரக்காயல்நத்தம் | நாட்டறம்பள்ளி. |
| 18 | தோப்புலகுண்டா | நாட்டறம்பள்ளி. |
| 19 | தெக்குப்பட்டு | கேதாண்டப்பட்டி. |
| 20 | திம்மாம்பேட்டை | திம்மாம்பேட்டை. |
| 21 | தும்பேரி | தும்பேரி. |
| 22 | வடக்குப்பட்டு | வடக்குப்பட்டு. |

### கந்திலி பஞ்சாயத்து யூனியன்

#### நகரப் பஞ்சாயத்துக்கள்—இல்லை

#### கிராமப் பஞ்சாயத்துக்கள்

| | | |
|---|---|---|
| 1 | ஆதியூர் | ஆதியூர். |
| 2 | ஆவல்நாயக்கன்பட்டி | காகங்கரை. |
| 3 | பதனவாடி கிழக்கு | பெரியகண்ணலப்பட்டி. |
| 4 | சின்னக்கந்திலி | கந்திலி. |
| 5 | சின்னரம்பட்டி | கொரட்டி. |
| 6 | சின்னகாசிநாயக்கன் பட்டி. | பெரியகாசிநாயக்கன் பட்டி. |
| 7 | இலவம்பட்டி | விஷமங்கலம். |
| 8 | எர்ரம்பட்டி | காகங்கரை. |
| 9 | கும்மிடிகான்பட்டி | கந்திரி. |
| 10 | கெஜ்ஜல்நாய்க்கன்பட்டி | கந்திலி. |
| 11 | கொரட்டி | கொரட்டி. |
| 12 | குரும்பேரி | குரும்பேரி. |
| 13 | குனிச்சி | பெரியகுனிச்சி. |
| 14 | கந்திலி | கந்திலி. |
| 15 | காசிநாயக்கன்பட்டி | பெரியகாசிநாய்க்கன் பட்டி. |
| 16 | காகங்கரை | காகங்கரை. |
| 17 | மண்டல நாயனிகுண்டா | கந்திலி. |
| 18 | லக்கிநாய்க்கன்பட்டி | பெரியகுனிச்சி. |
| 19 | மானவல்லி | நரியனேரி. |
| 20 | மட்ரப்பள்ளி | மட்ரப்பள்ளி. |
| 21 | மோட்டூர் (கந்திலி) | கந்திலி. |
| 22 | நரியனேரி | நரியனேரி. |
| 23 | நார்சாம்பட்டி | கந்திலி. |
| 24 | நத்தம் | காகங்கரை. |
| 25 | பள்ளத்தூர் | நரியனேரி. |
| 26 | பள்ளிப்பட்டு | திருப்பத்தூர். |
| 27 | பெரியகண்ணலப்பட்டி | காகங்கரை. |
| 28 | பெரியகரம் | கதிரிமங்கலம். |
| 29 | பேராம்பட்டு | பேராம்பட்டு. |
| 30 | பரமுத்தம்பட்டி | திருப்பத்தூர். |
| 31 | பரதேசிப்பட்டி | கந்தலி. |
| 32 | சுந்தரம்பள்ளி | சுந்தரம்பள்ளி. |
| 33 | செவ்வாத்தூர் | செவ்வாத்தூர். |
| 34 | தோக்கியம் | தோக்கியம். |
| 35 | விஷமங்கலம் | விஷமங்கலம். |
| 36 | வெங்கலாபுரம் | திருப்பத்தூர். |

### குடியாத்தம் பஞ்சாயத்து யூனியன்

## குடியாத்தம் தாலுகா

#### நகரப் பஞ்சாயத்துக்கள்—இல்லை

#### கிராமப் பஞ்சாயத்துகள்

| | | |
|---|---|---|
| 1 | அனங்காநல்லூர் | அனங்காநல்லூர். |
| 2 | அக்ரகாரம் | குடியாத்தம். |
| 3 | போஜனபுரம் | குடியாத்தம். |
| 4 | செட்டிக்குப்பம் | குடியாத்தம். |
| 5 | சின்னலப்பள்ளி | தட்டப்பாரை. |
| 6 | சின்னதோட்டாளம் | வளத்தூர். |
| 7 | தனகொண்டபள்ளி | மோடிகுப்பம். |
| 8 | தக்ஷிணபாதபாளையம் | தக்ஷிணபாதபாளையம். |
| 9 | ஏர்தாங்கல் | ஏர்தாங்கல். |
| 10 | கூடநகரம் | மேலஆலத்தூர். |
| 11 | கீழ்ப்பட்டி | மேல்ப்பட்டி. |
| 12 | கல்லப்பாடி | கல்லப்பாடி. |
| 13 | கொண்டசமுத்திரம் | குடியாத்தம். |
| 14 | கொத்தகுப்பம் | கொத்தக்குப்பம். |
| 15 | குளித்திகை | வளத்தூர். |
| 16 | மேல்ஆலத்தூர் | மேல்ஆலத்தூர். |
| 17 | மேல்முட்டுகூர் | குடியாத்தம். |
| 18 | மோடிகுப்பம் | மோடிக்குப்பம். |
| 19 | மூங்கப்பட்டு | அக்ரகாரம். |
| 20 | முக்குன்றம் | முக்குன்றம். |
| 21 | நெல்லூர்பேட்டை | குடியாத்தம். |
| 22 | ஒலக்காசி | ஒலக்காசி. |
| 23 | பாக்கம் | செங்குன்றம். |
| 24 | பட்டு | மேல்ஆலத்தூர். |
| 25 | பெரும்பாடி | அக்ரகாரம். |
| 26 | பரதராமி | பரதராமி. |
| 27 | புட்டவாரிப்பள்ளி | பரதராமி. |
| 28 | ராஜாகுப்பம் | குடியாத்தம். |
| 29 | ராமாலைகிருஷ்ணபுரம் | ராமாலை. |
| 30 | சேவூர் | சேவூர். |
| 31 | சேம்பள்ளி | சேம்பள்ளி. |
| 32 | செம்பேடு | வளத்தூர். |
| 33 | செங்குன்றம் | செங்குன்றம். |
| 34 | செருவங்கி | குடியாத்தம். |
| 35 | சிங்கல்பாடி | அனங்கநல்லூர். |
| 36 | தட்டப்பாறை | தட்டப்பாரை. |
| 37 | தாட்டிமானபள்ளி | ராமாலை. |
| 38 | தாழயாத்தம் | குடியாத்தம். |
| 39 | உள்ளி | உள்ளி. |
| 40 | வளத்தூர் | வளத்தூர். |
| 41 | வரதாரெட்டிப்பள்ளி | பரதராமி. |
| 42 | விளுதோனிப்பாளையம் | பரதராமி. |
| 43 | வீரிசெட்டிப்பள்ளி | பரதராமி. |

| வரிசை எண். | பஞ்சாயத்து. | தபால் நிலையம். |
|---|---|---|

### காட்பாடி பஞ்சாயத்து யூனியன்—

#### நகரப் பஞ்சாயத்துக்கள்

| வரிசை எண். | பஞ்சாயத்து. | தபால் நிலையம். |
|---|---|---|
| 1 | தாராபடவேடு .. .. | தாரபடவேடு |
| 2 | காட்பாடி .. .. | காட்பாடி |

#### கிராமப் பஞ்சாயத்துக்கள்

| வரிசை எண். | பஞ்சாயத்து. | தபால் நிலையம். |
|---|---|---|
| 1 | அம்முண்டி .. .. | அம்முண்டி. |
| 2 | அரும்பருத்தி .. .. | அரும்பருத்தி. |
| 3 | பிரம்மாபுரம் .. .. | பிரம்மாபுரம். |
| 4 | ஜாபராப்பேட்டை .. .. | ஜாபராப்பேட்டை. |
| 5 | கழிஞ்சூர் .. .. | கழிஞ்சூர். |
| 6 | கண்டிப்பேடு .. .. | கண்டிப்பேடு. |
| 7 | காங்கேய நல்லூர் .. .. | காட்பாடி டவுன்ஷிப். |
| 8 | கரிகேரி .. .. .. | கரிகேரி. |
| 9 | கார்ணம்பட்டு .. .. | அம்முண்டி. |
| 10 | கரசமங்கலம் .. .. | கரசமங்கலம். |
| 11 | குகைநல்லூர் .. .. | திருவலம். |
| 12 | மேட்டுக்குளம் .. .. | காட்பாடி. |
| 13 | புத்தூர் .. .. .. | திருவலம். |
| 14 | செம்பராயநல்லூர் .. | திருவலம். |
| 15 | சேனூர் .. .. | சேனூர். |
| 16 | சேர்காடு .. .. | கண்டிப்பேடு. |
| 17 | சேவூர் .. .. .. | சேவூர். |
| 18 | தண்டலம் கிருஷ்ணபுரம் | காட்பாடி. |
| 19 | திருவலம் .. .. .. | திருவலம். |
| 20 | வண்டரந்தாங்கல் .. | வண்டரந்தாங்கல். |
| 21 | வஞ்சூர் .. .. | காட்பாடி. |
| 22 | விருதம்பட்டு .. .. | விருதம்பட்டு. |
| 23 | ஏரந்தாங்கல் .. .. | ஏரந்தாங்கல். |

### கீழ்வைத்தினும்குப்பம் பஞ்சாயத்து யூனியன்

#### நகரப் பஞ்சாயத்துக்கள்—இல்லை

#### கிராமப் பஞ்சாயத்துக்கள்

| வரிசை எண். | பஞ்சாயத்து. | தபால் நிலையம். |
|---|---|---|
| 1 | அம்மனுங்குப்பம் .. .. | குடியாத்தம். |
| 2 | ஆலங்கனேரி .. .. | மேல்மாயில். |
| 3 | அரும்பாக்கம் .. .. | லத்தேரி. |
| 4 | அன்னங்குடி .. .. | லத்தேரி. |
| 5 | அங்கராங்குப்பம் .. | கீழ்முட்டுக்கூர் |
| 6 | பொம்மிநாய்க்கன்பாளையம். | லத்தேரி. |
| 7 | தேவரிஷிக்குப்பம் .. .. | தேவரிஷிக்குப்பம். |
| 8 | காவனூர் .. .. .. | காவனூர். |
| 9 | கீழ்முட்டுக்கூர் .. .. | கீழ்முட்டுக்கூர். |
| 10 | கவசம்பட்டு .. .. | கவசம்பட்டு. |
| 11 | காங்குப்பம் .. .. | காங்குப்பம். |
| 12 | கீழ்ஆலத்தூர் .. .. | சேத்துவண்டை. |
| 13 | கே.வி. குப்பம் .. .. | கே. வி. குப்பம். |
| 14 | காளாம்பட்டு .. .. | காளாம்பட்டு. |
| 15 | கொத்தமங்கலம் .. | கொத்தமங்கலம். |
| 16 | லத்தேரி .. .. .. | லத்தேரி. |
| 17 | மாச்சனூர் .. .. | காங்குப்பம். |
| 18 | முருக்கம்பட்டு .. .. | காங்குப்பம். |
| 19 | மலையாம்பட்டு .. .. | பனமடங்கி. |
| 20 | மேல்மாயில் .. .. | மேல்மாயில். |
| 21 | முடினம்பட்டு .. .. | வடுகந்தாங்கல். |
| 22 | நெட்டேரி .. .. | குடியாத்தம். |
| 23 | நாகல் .. .. | சேதுவண்டை. |
| 24 | பழைய கிருஷ்ணபுரம் .. | பழைய கிருஷ்ணபுரம். |
| 25 | பசுமாத்தூர் .. .. | பசுமாத்தூர். |
| 26 | பனமடங்கி .. .. .. | பனமடங்கி. |
| 27 | சேதுவண்டை .. .. | சேதுவண்டை. |
| 28 | செஞ்சி .. .. .. | செஞ்சி. |
| 29 | சென்னுங்குப்பம் .. .. | தேவரிஷிகுப்பம். |
| 30 | சோழமூர் .. .. | சோழமூர். |
| 31 | திருமணி .. .. .. | சேனூர். |
| 32 | தொண்டான் துளசி .. | தொண்டான் துளசி. |
| 33 | வேப்பூர் .. .. .. | குடியாத்தம். |
| 34 | வேலம்பட்டு .. .. | சோழனூர். |
| 35 | விழுந்தக்கல் .. .. | விழுந்தக்கல். |
| 36 | வேப்பங்கனேரி .. .. | கே.வி. குப்பம். |
| 37 | வடுகந்தாங்கல் .. | வடுகந்தாங்கள். |

### பேர்ணம்பட்டு பஞ்சாயத்து யூனியன்

#### நகரப் பஞ்சாயத்துக்கள்

| வரிசை எண். | பஞ்சாயத்து. | தபால் நிலையம். |
|---|---|---|
| 1 | பேர்ணம்பட்டு .. .. | பேர்ணம்பட்டு. |

#### கிராமப் பஞ்சாயத்துக்கள்

| வரிசை எண். | பஞ்சாயத்து. | தபால் நிலையம். |
|---|---|---|
| 1 | அழிஞ்சிகுப்பம் .. .. | ராஜக்கல். |
| 2 | அரவட்லா .. .. | பேர்ணம்பட்டு. |
| 3 | அருங்கல்துர்கம் .. .. | ஆம்பூர். |
| 4 | பாலூர் .. .. .. | கொத்தூர். |
| 5 | பாப்பனபள்ளி .. .. | வாணியம்பாடி. |
| 6 | பத்தலப்பள்ளி .. .. | பேர்ணம்பட்டு. |
| 7 | சின்னவரிகம் .. .. | உம்ராபாத். |
| 8 | சின்னப்பள்ளிக்குப்பம் .. | வாணியம்பாடி. |
| 9 | சின்னதாமல்செருவு .. | பேர்ணம்பட்டு. |
| 10 | எருக்கம்பட்டு .. .. | பேர்ணம்பட்டு. |
| 11 | ஏரிகுத்தி .. .. | ஏரிகுத்தி. |
| 12 | குண்டலப்பள்ளி .. | பேர்ணம்பட்டு. |
| 13 | கொல்லக்குப்பம் .. .. | வாணியம்பாடி. |
| 14 | கடவாளம் .. .. | ஆம்பூர். |
| 15 | கார்க்கூர் .. .. .. | மேல்பட்டி. |
| 16 | கரும்பூர் .. .. | ஆம்பூர். |
| 17 | கைலாசகிரி .. .. | உம்ராபாத். |
| 18 | கொம்மேஸ்வரம் .. | உம்ராபாத். |
| 19 | குமாரமங்கலம் .. .. | ஆம்பூர். |
| 20 | தொத்தப்பள்ளி .. | பேர்ணம்பட்டு. |
| 21 | மேல்பட்டி .. .. | மேல்பட்டி. |
| 22 | மாசிகம் .. .. | மாசிகம். |
| 23 | மாச்சம்பட்டு .. .. | கொத்தூர். |
| 24 | மலையம்பட்டு .. .. | ஆம்பூர். |
| 25 | மேல்வைத்தினுங்குப்பம் | மேல்வைத்தினுங்குப்பம். |
| 26 | மேல் சானுங்குப்பம் .. | ஆம்பூர். |
| 27 | மிட்டாளம் .. .. | மிட்டாளம். |
| 28 | மோர்தானு .. .. | பேர்ணம்பட்டு. |
| 29 | மொரசப்பள்ளி .. .. | பேர்ணம்பட்டு. |
| 30 | நிம்மியம்பட்டு .. .. | நிம்மியம்பட்டு. |
| 31 | பரவக்கல் .. .. | குடியாத்தம். |
| 32 | பல்லாலக்குப்பம் .. .. | பல்லாலக்குப்பம். |
| 33 | பெரியவரிகம் .. .. | உம்ராபாத். |
| 34 | புகலூர் .. .. | செம்பேடு. |
| 35 | ராஜக்கல் .. .. | ராஜக்கல். |
| 36 | சாத்துக்குடி .. .. | பேர்ணம்பட்டு. |
| 37 | சாத்தம்பாக்கம் .. | உம்ராபாத். |
| 38 | செண்டத்தூர் .. .. | செண்டத்தூர். |
| 39 | சொக்கரிஷிகுப்பம் .. | சொக்கரிஷிகுப்பம். |
| 40 | தொட்டித்துறை மோட்டூர். | தொட்டித்துறை மோட்டூர். |
| 41 | துத்திப்பட்டு .. .. | துத்திப்பட்டு. |
| 42 | உதயேந்திரம் .. .. | வாணியம்பாடி. |
| 43 | வடச்சேரி .. .. | வடச்சேரி. |
| 44 | வடகரை .. .. .. | ஆம்பூர். |
| 45 | வெங்கடசமுத்திரம் .. | அத்திமாப்பள்ளி. |
| 46 | விராங்குப்பம் .. .. | ஆம்பூர். |
| 47 | தென்னம்பட்டு .. .. | ஆம்பூர். |
| 48 | பரசனப்பள்ளி .. .. | ஆம்பூர். |

# இராணிப்பேட்டை கோட்டம்

## (Ranipet Revenue Division)

### வாலாஜா தாலூகா

#### வாலாஜா பஞ்சாயத்து யூனியன்

நகரப் பஞ்சாயத்துக்கள்—இல்லை

கிராமப் பஞ்சாயத்துக்கள்

| வரிசை எண். | பஞ்சாயத்து. | தபால் நிலையம். |
|---|---|---|
| 1 | அம்மூர் .. .. .. | அம்மூர். |
| 2 | அனந்தலை .. .. | வாலாஜா. |
| 3 | பாகவெளி .. .. | காவேரிப்பாக்கம். |
| 4 | செட்டித்தாங்கல் .. .. | இராணிப்பேட்டை. |
